

வருடாந்த செயல்நிறைவேற்ற அறிக்கை - 2022

(செலவுத் தலைப்பு இலக்கம் 123)

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

8 மற்றும்17 மாடி, சுஹுறுபாய, பத்தரமுல்லை
தொலைபேசி 011 2080 633
தொலைநகல் 011 2 080 639
மின்னஞ்சல்: info@moudh.gov.lk
இணையதளம்: www.moudh.gov.lk

உள்ளடக்கம்

பக்க இல

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு ..... 1 - 41

1. **நகர அபிவிருத்தி பிரிவு** ..... 42 - 76

(முன்னிருந்த நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும்சமூக துப்புரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு)

2. **வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு**..... 77 - 115

(முன்னிருந்த கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப்பொருட்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சு)

3. **கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நிலங்கள் அபிவிருத்திப் பிரிவு**..... 116 - 154

(முன்னிருந்த கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு)

4. **தோட்ட வீடமைப்பு பிரிவு** ..... 155 - 196

(முன்னிருந்த தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு)

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

01. அத்தியாயம்

1. நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு .... 1 - 6

1.1. அறிமுகம் .....

1.2. அமைச்சின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள் மற்றும் விசேட முன்னுரிமைகள் .....

1.3. நிறுவன விளக்கப்படம்.....

1.4. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்.....

1.5. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்.....

1.6. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்.....

02. அத்தியாயம்

2. முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு..... 7 - 21

2.1 விசேட சாதனைகள், சவால்கள்.....

2.2. எதிர்கால இலக்குகள்.....

03. அத்தியாயம்

3 **2022** திசெம்பர் **31** ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான ஒட்டு மொத்த நிதி செயலாற்றுகை **.....** 22 - 27

3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று .....
3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று .....
3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று .....
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்.....
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை .....
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை .....
3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் /மாவட்டச் செயலகம் /மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு .....
3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை .....
3.9 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை .....

04. அத்தியாயம்

4 பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**.....** 28 - 28

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

05. அத்தியாயம்

5 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை **.....** 29 - 30

5.1. அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்.....
5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

06. அத்தியாயம்

6 மனித வள விபரம **.....** 31 - 31

6.1. ஆளணி முகாமைத்துவம் .....
6.2. பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை பாதித்துள்ள விதம்.....
6.3. மனித வள அபிவிருத்தி .....

07. அத்தியாயம்

7. இணக்க அறிக்கை**.....** 32 - 41

01 அத்தியாயம்

1.அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம்

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

சொகுசுடன்கூடிய சுத்தமான நகரங்களை உருவாக்குதல் மற்றும் மக்களுக்குத் தேவையான வீடமைப்பு மற்றும் நகர வசதிகளை வழங்கும் நோக்கில் 2020 ஓகஸ்ட் 09 ஆந் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட இலக்கம் 2187/27 விசேட வர்த்தமானியின் மூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தாபிக்கப்பட்டது. 2022.04.28 திகதிய மற்றும் இலக்க 2277/53 அதி விசேட வர்த்தமானியின் மூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, வீடமைப்பு இராஜாங்க அமைச்சு, தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு மற்றும் கரையோர பாதுகாப்பு இராஜாங்க அமைச்சாக கடமைகள் மற்றும் பணிகள் கையளிக்கப்பட்டன.

2022.05.27 திகதிய இலக்கம் 2281/41 கொண்ட அதி விசேட வர்த்தமானியின் மூலம் மீண்டும் மேற்குறிப்பிட்ட அமைச்சரவை அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு ஒன்றிணைத்து திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் 21 நியதிச்சட்ட நிறுவனங்களைக் கொண்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு நிறுவப்பட்டது.

அதற்குப் பின்னர், 2022 ஜூலை 22 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட இலக்கம் கொண்ட 2289/43 அதி விசேட வர்த்தமானி மூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மீண்டும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

மாண்புமிகு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் மூலம் அமைச்சின் கீழுள்ள 21 நிறுவனங்கள் மற்றும் அனைத்து கருத்திட்டங்களின் ஒட்டுமொத்தப் பொறுப்புடன் செயலாற்றி வருவதுடன், அமைச்சின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் இலக்கம் 2304/17 மற்றும் 2022.11.01 திகதிய அதி விசேட வர்த்தமானியின் மூலம் அதாவது, மாண்புமிகு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் திரு. தேனுகா விதானகமகே ஆகிய இரண்டு இராஜாங்க அமைச்சர்களுக்கு ஆறு நிறுவனங்கள் மற்றும் மாண்புமிகு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் திரு. அருந்திக பெர்னாந்து அவர்களிடம் எட்டு நிறுவனங்களின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வருடாந்த செயல்திறன் அறிக்கைகளைத் தயாரிப்பது தொடர்பாக, அரச நிதி திணைக்களத்தின் இலக்கம் PFD/RED/COPA/2019/01 மற்றும் 2020.01.30 திகதிய கடிதத்தின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ள விசேட படிவத்துக்கமைய 2022 ஆம் நிதியாண்டு தொடர்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான தகவல் உள்ளிடப்பட்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

1.2. அமைச்சின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தூரநோக்கு

நிலைபேறான நகரங்கள் மற்றும் அனைவருக்கும் வீடுகள்

பணி


நகர அபிவிருத்தியினை முறைசார்படுத்துதல், அனைத்து சமூகங்களுக்கும் வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், பௌதீக திட்டமிடல், கட்டுமான கைத்தொழிலுக்கான வசதிகளை வழங்குதல், கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடல்சார் மாசுபாட்டைத் தடுத்தல், வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் ஈரநில முகாமைத்துவம், காணி அபிவிருத்தி மற்றும் கூட்டுஆதன முகாமைத்துவத்தினூடாக நகர அபிவிருத்தி மற்றும் வீடுகள் துறையின் கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் கருத்திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான தலைமைத்துவம் வழங்குதல்.

பிரதான பணிகள்

- அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படுகின்ற தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு விடயங்களுக்கு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்
- அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேய ரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்
- வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்
- மாநகர, உப நகர மற்றும் புறநகர் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி
- நகர்ப்புறங்களின் பொருளாதாரம், சமூக மற்றும் பௌதீக அபிவிருத்திகளை ஒன்றிணைத்து முறைசார் விதத்தில் மேம்படுத்தலும் மற்றும் ஒழுங்குறுத்தலும்
- குடிசைகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுநர்களுக்காக வீடமைப்புத் கட்டிடத் தொகுதிகளை நிர்மாணித்தல் மற்றும் அவிருத்தி செய்தல்
- நடுத்தர வகுப்பினரின் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் புதிய வீட்டுக் கருத்திட்டங்கள் செயல்படுத்துதல் மற்றும் கடன் வசதிகளை வழங்குதல்
- வாடகை அடிப்படையில் தற்காலிக இருப்பிடங்களை எதிர்பார்ப்போருக்கு நியாயமான வாடகை அடிப்படையில் தொடர்மாடி வீட்டுத் திட்டமொன்றை அறிமுகம் செய்தல்
- வீடமைப்பு நிர்மாண நிறுவனங்களுக்கு நிவாரண விலையின்கீழ் காணிகளை வழங்குவதன் மூலம் புதிய வீட்டுக் கருத்திட்டங்களுக்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்
- நகரப்புறத் திண்மக் கழிவுப்பொருட்கள் முகாமைத்தவம்
- பொறுப்பற்ற கழிவகற்றலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
- சகல நகர நிர்மாணங்களையும் நகர அபிவிருத்தித் திட்டங்களுக்கமையச் செய்வதை ஒழுங்குறுத்துவதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்
- சகல நகர நிர்மாணங்களின்போது வாகனத் தரிப்பிடங்களை அமைப்பது மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்காக நுழைவு வசதிகளை ஏற்படுத்துவதை உறுதிசெய்தல்
- தேசிய பௌதீகத் திட்டங்கள் மற்றும் பிரதேச பௌதீகத் திட்டங்களைத் தயாரித்தல்
- இணைந்த நகர அபிவிருத்தியினை உறுதிப்படுத்துமுகமாக தேசிய பௌதீகத் திட்டங்களின் அடிப்படையில் அனைத்து நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளலும் ஒழுங்குறுத்தலும்.

- கூட்டுஆதனச் சொத்துக்கள் முகாமை மற்றும் ஒழுங்குறுத்தல் பணிகள்.
- பொதுமக்கள் கூட்டாதன சீர்திருத்தமும் வினைத்திறமை மற்றும் துரிதமான முறையில் வீடுகளின் உடைமையைக் கையளித்தல்.
- தாழ்நிலங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள்.
- நகரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சேவைகள் மற்றும் வசதிகள குறைந்த பிரதேசங்கள் மற்றும் சதுப்புநிலைங்களைப் பொதுத் திட்டமொன்றுக்கமைய அபிவிருத்தி செய்வதற்கு புதிய வழிகாட்டல்
- அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்காகத் தரவளவுகள் மற்றும் பெறுமானங்களை விதித்தல்
- குறைந்த வருமானம் பெறுநர்கள் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் அடங்கலான பொதுமக்களின் வீடமைப்புத் தேவைகையைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்களையும் வீடமைப்பு நிதியுதவி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துதல்.
- சூழல்நேயமிக்கதாக செலவுக்கேற்ற நலன்களைப் பெற்றுத்தரும் வீடமைப்பு தொழில்நுட்ப முறைபற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டுதல்.
- அரசாங்க நிறுவனங்களுக்கு இயந்திரமயப் பொறியியில் சேவைகளை வழங்குதல்
- தொடர்புடைய சட்டதிட்டங்கள் மற்றும் தரவளவுகளுக்கமைய நிர்மாணக் கைத்தொழில்துறையின் பணிகளை ஒழங்குறுத்துதலும் பதிவுசெய்தலும் விதிமுறைப்படுத்தலும் தரப்படுத்துதலும்
- நிர்மாணக் கைத்தொழிலுக்குரிய ஆலோசனை மற்றும் ஒழுங்குறுத்தல் சேவைகளை வழங்குதல்
- கனரக நிர்மாணத்துறை உபகரணங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பற்றிய பயிற்சி.
- பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கஷ்டமான கிராமியப் பிரதேசங்களின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிளை விருத்தி செய்தல்.
- கட்டிடப் பொருட்கள் கைத்தொழிலை மேம்படுத்துதல்
- உள்நாட்டு நிர்மாணக் கலைஞர்களை வலுவூட்டல்
- உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர துணை ஒப்பந்தக்காரர்களை வலுவூட்டுதலும் பாதுகாப்பு வழங்குதலும்
- பொறியியல் உசாத்துணைச் சேவைகள் மற்றும் நிர்மாணப் பணிகள்
- சமுத்திர மாசுபடல் நிவாரண நடவடிக்கைகள்
- சமுத்திர மற்றும் சமுத்திரம் சார்ந்த மாசுபடலைத் தடுப்பதற்குச் செயலாக்கத் திட்டமொன்றைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும்
- கடலோரப் பேணல் மற்றும் பாதுகாப்பு
- கழிவுப்பொருட்கள் அகற்றுவதன் காரணமாக கடற்பரப்பு மற்றும் கடற்படுக்கைக்கு ஏற்பட்டுள்ள சேதங்களைத் தவிர்ப்பதற்காக சமுத்திர துப்புரவேற்பாட்டு வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்
- அரசாங்கத்தின் மற்றும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றும் காணிகளற்ற மக்களுக்காக வீடு வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் புதிய கிராமங்கள் மற்றும் நகரங்களை உருவாக்குதல்.
- தோட்டப் பிரிவின் சமூகங்களைப் பொருளாதாரச் சமூக மற்றும் கலாசார ரீதியில் வலுவூட்டுவதற்காக அடிப்படை வசதிகள், வாழ்வாதார உற்பத்திகள் மற்றும் சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் உள்ளிட்ட ஏனைய தேவைகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- கிராமிய தோட்டப் பிரிவுகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- பெருந்தோட்டச் சமுதாயம் சார்ந்த சமூகத் தலைவர்கள் மற்றும் மக்களின் கலந்து கொள்ளலுடனான ‘‘சமுதாய அடிப்படையிலான சபைகளும் சமூக அடிப்படையிலான நிறுவனங்களும்’’தாபித்தல்
- பெருந்தோட்ட மக்களின் பிள்ளைகளுக்காக ஆரம்பக் கல்வி, சுகாதார வசதிகளை உறுதிப்படுத்தலுக்கான விசேட வேலைத்திட்டமொன்றை வகுத்தல்

1.3. நிறுவன விளக்கப்படம்



1.4. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

- தேசியப் பௌதீகத் திட்டமிடல் திணைக்களம்
- கட்டிடத் திணைக்களம்
- அரசாங்கத் தொழில்சாலைகள் திணைக்களம்
- கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்

1.5. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

- நகர அபிவிருத்தி அதிகார சபை
- இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்
- வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்
- கூட்டு ஆதன அதிகார சபை
- நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
- ஓஷன் விவ் டிவலப்பெண்ட் பிறைவேட் லிமிட்டெட்
- அரச பொறிறியல் கூட்டுத்தாபனம்
- தேசிய உபகரணங்கள் அமைப்பாண்மை
- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
- செலென்திவ இன்வெஸ்டமென்ட் லிமிட்டெட்
- ஹொட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) தனியார் கம்பனி
- சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை
- பெருந்தோட்ட வலயங்களுக்கான புதிய கிராமங்கள் அதிகாரசபை
- பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு
- சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்
- தோட்டத்துறை சுயதொழில் சுழற்சி நிதியம்

➢ **அமைச்சின் கீழ் முன்பிருந்த இராஜாங்க அமைச்சுக்கள்**

- நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
- வீடமைப்பு இராஜாங்க அமைச்சு
- தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு
- கரையோர பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

2022 மே 27 திகதி இலக்கம் 2281/41 இலக்கம் கொண்ட அதி விசேட வரத்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பணிகள் முறைப்படி கொண்டு நடாத்துவதற்காக மேலே குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள பின்வருமாறு 4 பிரிவுகளாக நிறுவுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

- நகர அபிவிருத்தி பிரிவு
- வீடுகள் மற்றும் கட்டுமானத் துறை
- கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நிலங்கள் மேம்பாட்டுப் பிரிவு
- தோட்ட வீட்டுத் துறை

1.6. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்

	கருத்திட்டத்தின் பெயர்		பங்களிப்பு முகவாண்மை	கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு		கருத்திட்ட கால எல்லை
				வெளிநாட்டு	*உள்நாட்டு*	
1	கொழும்பு தலைநகரங்கள் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்		மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச வங்கி (உலக வங்கி)	213 (அ.டொ.மி)	108 (அ.டொ.மி)	2012 - 2021
2	மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம்	கண்டி மற்றும் காலி *	மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச வங்கி (உலக வங்கி)	68 (அ.டொ.மி)	34 (அ.டொ.மி)	2014 - 2021
		யாழ்ப்பாணம்*		28 (அ.டொ.மி)	10 (அ.டொ.மி)	2016 - 2021
		அனுராதபுர ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்	பிரான்ஸ் அபிவிருத்தி முகவாண்மை	52.0 (யூ.மி)	10.4 (யூ.மி)	2016 - 2023
3	கொழும்பு நகர மீள் உருவாக்க கருத்திட்டத்துக்கான உதவி கருத்திட்டம்		ஆசியா உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கி (AIIB)	200 (அ.டொ.மி)	87 (அ.டொ.மி)	2019 - 2025

* இந்தக் கருத்திட்டங்களின் பௌதீக நடவடிக்கைகள் 2021.12.31 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டதுடன் நிதிசார் நடவடிக்கைகள் 2022.06.30 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டன.

02. அத்தியாயம்

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1. சிறப்பு அடைவுகள் , சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

I. <u>திணைக்களங்கள் / நிறுவனங்கள்</u>

<u>தேசிய பௌதீக திட்டமிடற் திணைக்களம்</u>

தேசிய பௌதீக திட்டத்தினை தயாரித்தல் மற்றும் தேசிய பௌதீக திட்டத்தின் அடிப்படையில் பிராந்திய மற்றும் பிரதேச திட்டங்களை தயாரிப்பதே தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் முக்கிய பணியாகும். அது தவிர்ந்த

- சிறிய நகரங்களுக்கான திட்டங்களை இற்றைப்படுத்துதல், தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளுக்காக திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்
- புனித பூமிக்கான திட்டமிடல்கள் இற்றைப்படுத்துல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்
- வழிபாட்டு இடங்கள் மற்றும் நிறுவனங்களின் பௌதீக அபிவிருத்திக்காக தொழில்நுட்ப உதவி வழங்குதல்.
- தேசிய திட்டமிடல் தகவல் தளத்தை பராமரித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு அமைந்துள்ளன.

#	கருத்திட்டத்தின் பெயர்	மதிப்பீடு ரூ.மி.	பயன்கள்	ஒதுக்கப்பட்ட நிதி - 2022 (ரூ.மி.)	2022.12.31 திகதியிற்கு நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்.	
					பௌதீக (%)	நிதி (ரூ.மி.)
1	பௌதீக திட்டம் - தேசிய திட்டம் மற்றும் இரண்டு பிராந்திய திட்டங்கள் (கிழக்கு மற்றும் மத்திய)	5.2	நன்கு திட்டமிடப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நாட்டில் சரியான வழிகாட்டலுடன் நகரமயமாக்கல் முறை	5.2	67	2.89
2	நகர அபிவிருத்தித் திட்டங்கள் - அநுராதபுரத்தின் லோலுகஸ்வெவ நவ நகர கருத்திட்டம்	1450	• தொல்பொருளியல் பிரதேசமாக இராச்சியத்தில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி மற்றும் பேணுகைக்கான வசதிகளை ஏற்படுத்துதல். • அநுராதபுரம் புனித நகரை நோக்கி உள்நாட்டு	1.5	10	-

#	கருத்திட்டத்தின் பெயர்	மதிப்பீடு ரூ.மி.	பயன்கள்	ஒதுக்கப்பட்ட நிதி - 2022 (ரூ.மி.)	2022.12.31 திகதியிற்கு நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்.	
					பௌதீக (%)	நிதி (ரூ.மி.)
			மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மற்றும் யாத்ரீகர்களின் ஈர்ப்பை அதிகரித்தல். • அனுராதபுரம் புனித நகரைச் சுற்றி வாழுகின்ற உள்ளூர் மக்களுக்காக வியாபார வாய்ப்புகளை உருவாக்குதல்			
3	கதிர்காமம் வழிபாட்டு தளத்தில் வழிபாட்டாளர்கள் ஓய்வெடுப்பதற்காக தங்குமிட வசதிகளை வழங்கக்கூடிய கட்டிடங்களை புதுப்பித்தல்	50	• கதிர்காமம் வழிபாட்டு தளத்திற்கு வருகைத்தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் வழிபாட்டளார்களுக்கு சலுகைக் கட்டணத்தில் தங்குமிட வசதி செய்து தருவதன் மூலம் அதன் ஈர்ப்பை அதிகரித்தல். • கதிர்காமம் புனித நகரைச் சுற்றி வசிக்கும் உள்ளூர் மக்களுக்காக வியாபார வாய்ப்புகளை உருவாக்குதல்	17.7	2.45	0.50

❖ **விசேட சாதனைகள்**

- தேசிய பௌதீக திட்டத்தை இற்றைப்படுத்துதல் நிறைவுசெய்யப்பட்டிருப்பதுடன், அமைச்சுகளுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.
- கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களின் பிராந்திய பௌதீக திட்டத்தை தயாரிப்பதற்காக பிராந்திய திட்டமிடல் குழுக்களை நியமிப்பதற்கு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்களின் விருப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தொடர்புடைய நிறுவனங்களுடன் தரவுகளைத் திரட்டுதல், தரநிலை பகுப்பாய்வு மற்றும் பட்டறைகள் இடம்பெற்று வருகின்றன.
- 2021.12.21 திகதிய அமைச்சர்வைத் தீர்மனத்தின் பேரில், இந்த திணைக்களத்தின் மூலம் பிரதேச சபை எல்லைக்குள் நகர்ப்புற பிரதேசங்கள் கண்டறியப்பட்டு எல்லை நிர்ணயம் செய்ய ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அளவை முறைகள் தயாரித்தல் முடிவுசெய்யப்பட்டிருப்பதுடன், தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம், மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் நகர மற்றும் கிராமிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தொகை மதிப்பு புள்ளவிபரத் திணைக்களம் உள்ளிட்ட செயற்குழுவொன்று நியமித்துள்ளது.

- அநுராதபுரம் லோலுகஸ்வெவ நவ நகர கருத்திட்டத்தின் கீழ் தேசிய தன்னார்வின் அடிப்படையில் மீள்குடியேற்றக் கொள்கையிற்கமைவாக புனித பூமியில் குடியமர்ந்துள்ள மக்களுக்காக மீள்குடியேற்றத்திற்கான செயல்முறைத்திட்டத்தை தயாரிப்பதற்கு ஆரம்பித்தல் மற்றும் தொல்பொருள் வளாக பேணுகை மற்றும் சுற்றுலாப் பயணிகளின் கவர்ச்சியினை உறுதிபடுத்தும் பொருட்டு அனைத்து நகரப்புற வசதிகளைக் கொண்ட மற்றும் மக்களின் வாழ்வாதாரங்களுக்கு குறைந்தபட்ச தடைகளுடன் புதிய நகரமொன்று புனித பூமியின் அருகில் அபிவிருத்தி செய்வதன் மூலம் உள்நகரில் வாழ்ந்த குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்கான திட்டத்தைத் தயாரிக்கத் தொடங்குதல்.

- புனித பூமியினை பிரகடனப்படுத்தும்போது அளவுகோல்கள் தேசிய ரீதியாக, பிராந்திய ரீதியாக மற்றும் பிரதேச ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என்ற மூன்று அளவுகோல்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 26 புனித தலங்களை 2023 ஆம் ஆண்டில் வர்த்தமானியில் வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது.

<u>வரையறுக்கப்பட்ட ஹோட்டல் டிவலொபர்ஸ் (லங்கா) கம்பனி</u>

வரையறுக்கப்பட்ட ஹோட்டல் டிவலொபர்ஸ் (லங்கா) கம்பனி, 100% அதன் பங்குகளில் உரித்துரிமை வகிக்கும் திறைசேரிக்குச் சொந்தமான அரச தொழில் முயற்சியாகும். இந்த நிறுவனம் விருந்தோம்பல் வியாபாரத்தில் சிறந்த இடத்தில் மிக உயர்ந்த தரத்துடன் நிலையான வழியில் செயல்படுகிறது.

சர்வதேச அளவிலான ஹோட்டல் செயல்பாடுகள் மூலம் மதிப்புகளை தொடர்ந்து மேம்படுத்துவதன் மூலம் விருந்தினர்களை அதிகபட்ச அளவிற்கு திருப்திப்படுத்துதல்,பங்குதாரர்களின் வருமானத்தை அதிகரித்தல், தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் மூலம் தொழில்முறை திறன்கள் நிறைந்த விருந்தோம்பல் கொண்ட பதவியணியினரை பராமரித்தல் மற்றும் தொடர்ந்தும் இலங்கையை வளர்ந்து வரும் பிராந்திய சுற்றுலா தலமாக ஊக்குவிப்பது இந்த நிறுவனத்தின் முக்கிய பணியாகும்.

❖ **விசேட சாதனைகள்**

- ஆண்டு வருமானம் 2021 ஆம் ஆண்டில் 1.1 ரூபா பில்லியனில் இருந்து 2022 ஆம் அண்டில் 2.8 ரூபா பில்லியன் வரை அதிகரித்தல்.
- 2021 ஆம் ஆண்டிற்குள் வரி, தேய்மானம் மற்றும் வட்டியினைக் குறைப்பதற்கு முன்னர் செயற்படு நட்டமான 441 மில்லியன் ரூபா அளவு 2022 ஆம் ஆண்டாகும்போது செயல்பாட்டு இலாபமாக 159 மில்லியன் ரூபா வரை அதிகரிக்கும்.
- ISO 22000: 2018 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைச் சான்றிதழைப் பெறுதல்.

❖ **சவால்கள்**

- 2023 ஆம் ஆண்டுக்காக கிடைக்கும் ஒதுக்கீட்டுத் தொகையானது கருத்திட்டங்களின் எதிர்காலப் பணிகளைப் பாதிக்கும்.
- எரிபொருள், மின்சார விநியோகத்தில் முறிவு மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றில் இலக்குகளை அடைவதை கடினமானதாக இருத்தல்.

II. கருத்திட்டங்கள்

<u>கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி கருத்திட்டம்</u>

கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி கருத்திட்டம் இரண்டு ஆக்கக் கூறுகளைக் கொண்டுள்ளது. உயர் சமூக – பொருளாதார கிரயத்தைக் கொண்ட கொழும்பு நகர்ப்புற பிரதேசத்தின் பொருளாதாரத்திற்கு தினந்தோறம் தடைகளை ஏற்படுத்துகின்ற வெள்ளத்தினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளைக் கண்டறிவதே அதன் முதல் ஆக்கக்கூறின் குறிக்கோளாக அமைந்துள்ளது. கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வைத் தொடர்ந்து முன்னுரிமை கருத்திட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால் முகாமை தொடர்பாக கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு அல்லாத நடவடிக்கைகளுக்காக அதன் மூலம் நிதியுதவி அளித்துள்ளது. இரண்டாவது ஆக்கக்கூறு மூலம் கொழும்பு தலைநகரப் பகுதி உலகத்தரம் வாய்ந்த நகரங்களில் ஒன்றாக அபிவிருத்தி செய்தல், பொதுமக்களுக்கு அதன் சேவைகளை மேம்படுத்துதல், ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு அடித்தளம் அமைத்தல் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **கருத்திட்டத்தின் நோக்கங்கள்**

கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் ஆக்கக்கூறு மூலம் பிரதான இரு நோக்கங்களை இலக்ககாகக் கொண்டுள்ளது

1. கொழும்பு நீர் வடிநிலத்தின் நீர் பிடிப்பு பகுதிகளில் வெள்ளத்தை தணித்தல்
2. தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி முதலீடுகளினூடாக உட்கட்டமைப்பு வசதிகள் சேவைகள் மறுசீரமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக கொழும்பு மாநகர சபைக்குரிய உள்ளூராட்சி நிறுவனங்களின் கொள்ளளவினை வலுப்படுத்துதல்.

இந்தக் கருத்திட்டத்தின் மூலம் 4 உள்ளூராட்சி நிறுவன அதிகார பிரதேசங்கள் உட்படுத்தியுள்ளன. கொழும்பு மாநகர சபை, ஸ்ரீ ஜயவர்தனபுர - கோட்டே மாநகர சபை மற்றும், தெகிவளை- கல்கிசை மாநகர சபை மற்றும் கொலன்னாவை நகரசபை

இலங்கை காணிகள் அபிவிருத்தி கூட்டுத்தாபனம், கொழும்பு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆதரவுடன் 54 கருத்திட்டங்கள் முடிக்கப்பட்டிருப்பதுடன், முடிக்கப்பட்ட கருத்திட்டங்களில் 3 நீரேற்று நிலையங்கள், 2 மழைநீர் வடிகால் சுரங்கங்கள், கால்வாய்கள் மற்றும் கால்வாய் திறை மாற்ற முன்மொழிவுத்திட்டங்களை மேம்படுத்துதல், வெள்ளக் வாயிற்கதவுகள் மற்றும் வடிகால் வாயிற் கதவுகள், ஈரநிலப் பூங்காக்கள் மற்றும் நேரியல் பூங்காக்கள் (liner parks) ஆகியவற்றின் அபிவிருத்திகள் உள்ளடக்கப்பட்டள்ளன. வெள்ளம் மற்றும் வடிகால் முகாமைத்துவத்தின் கீழ் ஒருங்கிணைந்த வெள்ள முகாமைத்துவ முறைமை நிறுவுவதும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் பூங்காக்களை மேம்படுத்துதல், சாலைகள் புனரமைப்பு மற்றும் பாதசாரிகளின் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பொது வசதிக்காக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவது உள்ளடங்கப்பட்டுள்ளன.பகுதியாக முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை 02 ஆகும். பொருட்கள் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் காரணமாக, ஒருங்கிணைந்த வெள்ள முகாமைத்துவ முறையில் பணிகளும், குடியிருப்புவாசிகளை வெளியேற்றும் பிரச்சனையால் நொரிஸ் கால்வாய் கருத்திட்டத்தின் பணிகளும் நிறைவு செய்ய முடியாதுள்ளன.

இந்தக் கருத்திட்டத்தின் பௌதீக நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி நிறைவடைந்திருப்பதுடன் நிதிசார் நடவடிக்கைகள் 2022 ஜூன் 30 ஆம் திகதி நிறைவடைந்தது.

❖ **நிதிசார் முன்னேற்றம்**

கருத்திட்டத்தின் பெயர்	**2022** வருடத்தில் நிதி ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்தல் **(**ரூ.மி**)**	சலவு **(**ரூ.மி**)**
காழும்பு தலைநகரம் சார்ந்த நகர பிவிருத்தி கருத்திட்டம்	3120.49	2937.42

❖ **விசேட சாதனைகள்**

ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் ஊடாக கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட வசதிகள் மூலம் 2021 மற்றும் 2022 வருட மழைக்காலங்களில் வெள்ளத் தணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மூலோபாய நகர அபிவிருத்தக் கருத்திட்டம்

கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம்

பொருளாதார வளர்ச்சி மற்றும் வாழ்வு வளத்தினை ஊக்குவிக்கும் முன்முயற்சியாக போட்டியிடல், சுற்றாடல் ரீதியாக நிலைப்பாடு மற்றும் நன்கு இணைக்கப்பட்ட நகர முறைமையாக இரண்டாம் நிலை நகர அபிவிருத்தி செய்யும் நகர தொலைநோக்கினை முன்னணியாக கொண்டு அரசாங்கத்தினால் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் மூலோபாய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அனைத்து நகர பிராந்தியத்துக்குள் ஒருங்கிணைந்த நகர சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் பொது நகர இடஎல்லைகளை மேம்படுத்துதல் போன்ற பரந்த மூலோபாய முதலீடுகள் இரு தொகுதிகளை இலக்காக கொண்டிருப்பதுடன் அதன் மூலம் நகரத்தின் செயற்பாட்டுப் பிரிவு போன்று நகரத்தின் கவர்ச்சிகரமான தன்மை மற்றும் சகவாழ்வின் இயலுமை மேம்படுத்தப்படும். இந்தக் கருத்திட்டத்துக்காக உலக வங்கியின் மூலம் நிதி வழங்கப்படுகின்றது.

தொடக்கக் கடன் தொகை அமெரிக்கா டொலர் மில்லியன் 147 ஆக இருந்ததுடன் கண்டி மற்றும் காலி நகரங்களில் அபிவிருத்தி தலையீடுகளுக்காக (இலங்கை அரசாங்கத்தின்) பங்களிப்பு அமெரிக்க டொலர் மில்லியனாக 34 இருந்தது. தாய்க் கருத்திட்டம் 2014 ஒக்டோபர் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் , 2016 ஒக்டோபர் 19 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண நகரத்தின் அபிவிருத்தி தலையீடுகளுக்காக மேலதிக நிதியீடாக ஐக்கிய அமெரிக்கா டொலர் மில்லியன் 10 மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புடனான 55 மில்லியன் டொலர் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் மறுகட்டமைப்பின் கீழ் கண்டி பல்நோக்கு போக்குவரத்து முனைய கருத்திட்டத்துக்காக (KMTT) தனிப்பட்ட கருத்திட்டமாக நிதியளிப்பதற்காக 65 டொலர் மில்லியன் கடன் இரத்துச் செய்யப்பட்டது. அதற்குப் பின்னர், சனாதிபதி செயலகத்தின் ஆலோசனையின் பிரகாரம் KMTT கருத்திட்டத்தை செயல்படுத்துதல் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் ஐந்தாம் மறுகட்டமைப்பின் கீழ் யாழ்ப்பாணத்தில் கருத்திட்டங்கள் செயலாக்கத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அதன் மேலதிக நிதிக் கடன்களிலிருந்து 27 மில்லியன் அமெரிக்க டொலர்களை ரத்து செய்து அந்த நிதியானது தனியான புதிய அவசர கொவிட் 19 IDA கடனுக்காக ஒதுக்கப்பட்டது.

கருத்திட்டத்தின் பௌதீக நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி நிறைவடைந்ததுடன் நிதிசார் நடவடிக்கைகளும் 2022 ஜூன் 30 ஆம் திகதி நிறைவடைந்தன.

- **கருத்திட்டத்தின் நோக்கங்கள்**

இலங்கையின் கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற நகர பிராந்தியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவெல்லைகளை மேம்படுத்துவதே கருத்திட்டத்தின் அபிவிருத்தி நோக்கமாக அமைந்துள்ளது.

கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த கவனத்திற்குட்படுத்தப்பட்ட அம்சங்கள்

(அ) நகர்ப்புற சேவைகள் மற்றும் பொது திறந்தவெளிகளை மேம்படுத்துதல்

- போக்குவரத்து வசதிகள் மேம்பாடு மற்றும் மோட்டார் வாகன முகாமைத்துவம்
- நீர் வழங்கல் முறைமையின் விரிவாக்கம் மற்றும் மறுசீரமைப்பு
- பிரதான வடிகாலமைப்பு முறைமை மறுசீரமைத்தல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட வீதிகள் மற்றும் பொது இடங்களை மேம்படுத்துதல் மற்றும் வரலாற்றுடன் கூடிய விசேட முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களை மறுசீரமைப்பதனூடாக நகர அபிவிருத்தியினை ஏற்படுத்துதல்.
- நகர அபிவிருத்தி மூலோபாய வழிகளை தயாரித்தல்

(ஆ) தாபன வலுப்படுத்தல் மற்றும் கொள்ளளவு விருத்தி

நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளை திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் பராமரிப்பற்காக கருத்திட்ட பங்காண்மை நிறுவனங்களுக்கு கொள்ளளவு விருத்தி உதவியை வழங்குதல்.

❖ **நிதிசார் முன்னேற்றம்**

கருத்திட்டத்தின் பெயர்		**2022** வருடத்தில் நிதி ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்தல் (ரூ.மி)	செலவு (ரூ.மி)
மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம்	கண்டி மற்றும் காலி	9.898	9.526
	யாழ்ப்பாணம்	1480.10	1418.48

❖ **விசேட சாதனைகள்**

மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட உப கருத்திட்டங்கள் பின்வருமாறு.

இலக்கம்	நிறைவு செய்த உப கருத்திட்டங்கள்	அலகு	இலக்கு	சாதனை	%
கண்டி					
1.	நீர் சுத்திகரிப்பு ஆலைகள்	எண்ணிக்கை	01	01	100
2.	சாக்கடைக் கசடு சுத்திகரிப்பு ஆலைகள்	எண்ணிக்கை	01	01	100
3.	நிர்மாணிக்கப்பட்ட மற்றும் ஆரம்பிக்கப்பட்ட தரை நீர்த்தேக்கங்கள்	எண்ணிக்கை	03	03	100
4.	நீர் பரிமாற்றம் மற்றும் விநியோக குழாய்களின் நீளம் மாற்றீடு	கி.மீ	13.00	13.73	100
5.	Supply of Valves, Bulk flow meters, High lift Pumps etc.	ஆம் / இல்லை	ஆம்	ஆம்	100
6.	கண்டி ஏரியின் சேற்றுப்படிவைக் குறைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட சேற்றுப்படிவு வலைப்பொறிகள்	எண்ணிக்கை	05	05	100
7.	நிலத்தடி மற்றும் மேற்பரப்பு மழைநீர் வடிகால் அமைப்புகளின் நீளம் மறுசீரமைப்பு	கருத்திட்டங்களின் எண்ணிக்கை கி.மீ	5 4.0	5 4.38	100 100
8.	மறுசீரமைக்கப்பட்ட சாலைகளின் நீளம்	கி.மீ	9.0	9.0	100
9.	பாதுகாப்பு வலைகள், தர்மபால மாவத்தையில் மண் நங்கூரத்துடன் கூடிய சரிவு நிலைப்பித்தல்	ஆம் / இல்லை	ஆம்	ஆம்	100

இலக்கம்	நிறைவு செய்த உப கருத்திட்டங்கள்	அலகு	இலக்கு	சாதனை	%
10.	சாலைகளின் சீர்திருத்தப் பணிகள், (DI குழாய்கள், PE குழாய்கள். மதகுகள், தடுப்பு சுவர்கள் போன்றவை)	ஆம் / இல்லை	ஆம்	ஆம்	100
11.	கண்டி உட்பட புனரமைக்கப்பட்ட பேருந்து வசதிகளின் (முனையம்) எண்ணிக்கை.	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	03	03	100
12.	Utility Diversion, required access roads, implementation of support construction works of Transitional Bus Operation	ஆம் / இல்லை	ஆம்	ஆம்	100
13.	மின்னணு நுழைவுச்சீட்டு இயந்திரம் வழங்குதல்	எண்ணிக்கை	1650	1650	100
14.	Global Navigation Satellite System (GPS)	எண்ணிக்கை	2380	2380	100
15.	வீட்டுத் தளவாடங்கள் மற்றும் உபகரணங்களுடன் கூடிய பேருந்து கட்டுப்பாட்டு நிலையம்	எண்ணிக்கை	01	01	100
16.	பொது மக்களுக்காக புனரமைக்கப்பட்ட பகுதிகள் (நோக்குமிடும் மேல்தளம்,டொம்லின் பூங்கா, கார்கள் நிறுத்துமிட கூரையின் உச்சி மற்றும் ஜோர்ஜ் டி சில்வா பூங்கா)	சதுர மீட்டர்	30,775	30,775	100
17.	உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்களுக்காக புனரமைக்கப்பட்ட நகர நோக்குமிடும் மேல்தளம் (Arthur's Seat)	எண்ணிக்கை	01	01	100
18.	புனரமைக்கப்பட்ட நடைபாதைப் பிதேசம்	சதுர மீட்டர்	15000	15000	100
19.	உள்ளூர் வழிபாட்டாளர்கள் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தங்கியிருப்பவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை	எண்ணிக்கை	01	01	100
20.	கண்டியில் இலங்கை புகையிரதத்துக்கான புதிய நான்கு (04) மாடிக் கட்டிடம்	எண்ணிக்கை	01	01	100
21.	புதிய மரப் பட்டறை கட்டிடம் மற்றும் அணுகல் சாலை	எண்ணிக்கை	01	01	100
22.	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, கண்டி மாநகர சபை மற்றும் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உபகரணங்களை வழங்குதல்	ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ரூ.மி	15 ஒப்பந்தங்கள் 411.2	15 ஒப்பந்தங்கள் 411.2	100 100
காலி					
1.	கருத்திட்டத்தின் கீழ் பிரதான கால்வாய்கள் மற்றும் பிராந்திய வடிகால்களின் நீளத்தை மேம்படுத்துதல்	கி.மீ	14.00	13.65	97.5
2.	பாலங்கள் சீரமைப்பு	எண்ணிக்கை	07	08	100
3.	பொது மக்களுக்காக புதுப்பிக்கப்பட்ட பகுதி (பூங்காக்கள், கடல் வழி, கோட்டை அலங்கம்)	சதுர மீட்டர்	91,128	91,128	100
4.	பொது பூங்கா மறுசீரமைப்பு (தர்மபால பூங்கா)	எண்ணிக்கை	01	01	100
5.	புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட அணையின் நீளம் /	கி.மீ	2.0	2.0	100

இலக்கம்	நிறைவு செய்த உப கருத்திட்டங்கள்	அலகு	இலக்கு	சாதனை	%
	பக்கவாட்டு நடைப்பாதை நீளம்				
6.	புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட கடல்வழியின் நீளம்	கி.மீ	1.2	1.5	100
7.	காலி மாநகரசபைக்கான களஞ்சிய கட்டிடம்	எண்ணிக்கை	01	01	86
8.	காலி மாநகர சபை மற்றும் PID இற்கு அவர்களின் வாகனங்கள் மற்றும் கால்வாய் பராமரிப்பு திட்டங்களுக்காக உபகரணங்களை (சொத்துக்கள்) வழங்குதல்	ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ரூ.மி	09 158.83	09 158.83	100 100
யாழ்ப்பாணம்					
1.	சாலைகளின் நீளத்தை புனரமைத்தல்	கி.மீ	25.0	21.56	86
2.	மழைநீர் வடிகால் முறைமையின் நீளத்தை புனரமைத்தல்	கி.மீ	1.63	1.63	100
3.	நிர்மாணிக்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட பொது வசதிகளின் (பொது கழிப்பறைகள்)	எண்ணிக்கை	06	06	100
4.	யாழ்ப்பாணத்தில் Pocket Parks புனரமைப்பு	எண்ணிக்கை	03	03	100
5.	பொது மக்களுக்காக மறுசீரமைக்கப்பட்ட பகுதி	சதுர மீட்டர்	9,295	9,295	100
6.	புனரமைக்கப்பட்ட பொது குளங்கள்	எண்ணிக்கை	02	02	100
7.	யாழ்ப்பாண மாநகர சபைக்கு அவர்களின் பராமரிப்பு வேலைத்திட்டத்திற்கான உபகரணங்களை வழங்குதல் (சாக்கடை பவுசர்கள், குப்பைகளை சேகரிக்கும் வண்டிகள், இழுவை இயந்திரங்கள் போன்றவை)	ஆம் / இல்லை	ஆம்	ஆம்	100
8.	யாழ்ப்பாண மாநகர சபைக்கு கழிவு மற்றும் கழிவுநீர் சேகரிப்பு மற்றும் அகற்றும் வேலைத்திட்டங்களில் பயன்படுத்துவதற்கு உபகரணங்ளை (சொத்துக்கள்) வழங்குதல்.	ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ரூ.மி	09 178.8	09 178.8	100 100

<u>அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்</u>

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி தொடர்பான பிரான்ஸ் முகவர் நிறுவனத்தின் (AFD) கடன் வசதிகளுடன் நடைமுறைப்படுத்தும் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி கருத்திட்டங்களில் ஒன்றாக அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி கருத்திட்டம் (AIUDP) ஆரம்பிக்கப்பட்டது.

இக் கருத்திட்டத்தின் அடிப்படை குறிக்கோள் யாதெனில், அநுராதபுரம் புனித நகரம் மற்றும் புதிய நகரம் என்பவற்றுக்கிடையில் சமநிலையில் மேற்கொள்கின்ற அபிவிருத்தி ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதார ரீதியாக தன்முனைப்பாற்றலினை ஏற்படுத்தி நகரத்தின் கலாச்சார மரபுரிமைகளில் ஆகக்கூடிய நலன்களை பெற்றுக்கொள்வதாகும்.

இந்தக் கருத்திட்டம் அநுராதபுரம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு உரியதாகும். பின்வரும் மூலோபாய வரிசைப்படுத்தலை அடிப்படையாகக்கொண்டு ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தியை மேற்கொள்ளுதல் இக் கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

1) கலாச்சார மரபுரிமைகளின் மனம் கவருதலை பலப்படுத்துவதன் ஊடாக பிரதான பொருளாதாரத்தில் கேந்திர நிலையமாக அநுராதபுர நகரத்தை உருவாக்குதல்.

2) அநுராதபுரம் நகரத்தினை பரிசீலனை செய்யும் அனைவரதும், நாட்டு மக்களினதும், யாத்திரிகளினதும் சுற்றுலாத் துறையினரதும் பயன்பாட்டுக்காக அவர்களின் உபயோகம் மற்றும் தேவைகளை கவனத்தில் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

3) எளிதில் நிலைப்பாடற்ற தன்மைக்கு மாற்றம்பெறத்தக்க அநுராதபுர நிலப்பிரப்பிரதேசத்தின் நிலைபேண்தகு அபிவிருத்திக்காக சுற்றாடலை பாதுகாப்பதும் மற்றும் மரபுரிகளை பாதுகாப்பதும் முக்கிய அடிப்படை காரணிகளாக உள்ளன.

- **கருத்திட்டத்தின் நோக்கம்**

இந்தக் கருத்திட்டத்தில் ஒட்டுமொத்த நோக்கம் யாதெனில், அநுராதபுர நகரத்தின் ஈர்ப்புக்கு காரணமாக அமைகின்ற முக்கிய காரணியான கலாச்சாரம் மற்றும் இயற்கையான மரபுரிமைகள் என்பன பாதுகாக்கும் வகையில், அதன் புனிதத்துவம் மற்றும் நவீன பிரதேசங்களுக்கிடையில் சமநிலையான அபிவிருத்தியினை மேற்கொள்வதாகும்.

கருத்திட்ட ஆக்கக்கூறு மற்றும் உப ஆக்கக்கூறு பின்வருமாறு அமைந்துள்ளன.

- ஆக்கக்கூறு 1 : நிலையான உட்கட்டமைப்பு வசதிகள்
  அ) வெள்ள அபாயத்தைக் குறைப்பதற்காக நகர வடிகாலமைப்பினை மேம்படுத்துதல்
  ஆ) நகர இடப்பெயர்வினை மேம்படுத்துதல் - அணுகல், சுழற்சி மற்றும் மோட்டார் வாகன முகாமைத்துவத்தினை மேம்படுத்துதல்.
  இ) பொது இடவசதிகளை மேம்படுத்துதல் - பொது இடவெல்லையில் மற்றும் அமைவிட ஈர்ப்பின் தரத்தின் விரிவாக்கம் மற்றும் மேம்படுத்துதல்.
  ஈ) நிதிசார் உட்கட்டமைப்பு வசதிகளின் நிலைப்பாட்டு முகாமைத்துவத்துக்காக சொத்து உரிமையாளர்களுக்காக கொள்திறன் கட்டியமைத்தல்

- **ஆக்கக்கூறு 2** : கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் செயல்படுத்தல்
  அ) சாத்தியவள ஆராய்ச்சி
  ஆ) மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கருத்திட்ட முகாமைத்துவ அலகின் செலவு
  உ) வெளிவாரி மேற்பார்வை மற்றும் செயல்பாடுகள்
  ஈ) நகர்ப்புற திட்டமிடல் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவத்துக்கான கொள்திறன் கட்டுருவாக்கம்

❖ நிதிசார் முன்னேற்றம்

கருத்திட்டத்தின் பெயர்	**2022** வருடத்தில் நிதி ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்தல் (ரூ.மி)	செலவு (ரூ.மி)
அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்	976.53	890.48

❖ விசேட சாதனைகள்

நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

- ரேல்வே பிளாசா (Railway plaza) அபிவிருத்தி
- சிங்ஹ தூண் சுற்றுவட்டம் மீள அபிவிருத்தி செய்தல்
- தரிப்பிடங்கள் கட்டுமானம் - ஸ்ரீ மகாபோதி கிழக்கு

அதனைத் தவிர்ந்த பின்வரும் கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

	கருத்திட்டம்	பௌதீக முன்னேற்ற (%)
1	இலங்கையில் வானொலி கூட்டுத்தாபன வெளிப்புற நாடக பீடம் மீண்டும் அபிவிருத்தி செய்தல்,	83
2	சுரபுர வெளிப்புற நாடக பீடம் மீண்டும் அபிவிருத்தி செய்தல் ,	79
3	தர்மபால மாவத்தை இயற்கை நிலத்தோற்ற வடிவமைப்பு பணிகள்	95
4	மிரிசவெட்டிய வாகன தரிப்பிடத்தை அபிவிருத்தி	85
5	லங்காராமய வாகன தரிப்பிடத்தை அபிவிருத்தி	78
6	ஸ்ரீ மகாபோதி கிழக்கு நுழைவாயில் வாகன தரிப்பிடத்தின் மீள் அபிவிருத்தி	95
7	தெற்கு பல்மாதிரி போக்குவரத்து நிலையத்தை அபிவிருத்தி செய்தல்(கருத்திட்டத்தின் விடயஎல்லை குறைக்கப்பட்டதன் பின்னர்	90

நகர புத்துயிரளிப்புக் கருத்திட்டம்

கொழும்பு நகரத்தில் சனத்தொகையில் நூற்றுக்கு ஐம்பதுக்கு மேற்பட்ட மக்கள் நகரத்தில் மொத்த நிலப்பரப்பில் ஒன்பது சதவீதமான குறைந்த வசதிகளைக் கொண்ட குடிசைகளில், சேரிகளில் அல்லது பாழடைந்த பழைய வீடமைப்புத் திட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். 2010 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின்போது மானிட வர்க்கத்துக்கு வாழ்வதற்கு பொருத்தமான ஆரோக்கியமான சூழல் மற்றும் சுத்தமான நீர், மின்சாரம், சுகாதாரம் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அணுகல் இல்லாத 1,499 ஆன சமூக கொத்தணிகள் (குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகள்) வாழ்கின்ற 68,812 குடும்பங்கள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி திட்ட நோக்கங்களை பூர்த்தி செய்வதற்காக ஏற்றுக்கொள்ள முடியுமான தரங்களுடன் கூடிய புதிய வீடமைப்பு திட்டங்களில் இந்த குடும்பங்கள் மீண்டும் குடியமர்த்துதல் சுத்தமான மற்றும் ரம்யாமான சூழலுடன் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொண்ட நகரமாக கொழும்பு நகரத்தினை உருவாக்கும் செயற்பாட்டில் ஒரு பிரதான நடவடிக்கையாகும்.

இந்த நோக்கங்களை அடைவதற்காக நகர புத்துயிரளிப்பு கருத்திட்டத்தின் மூலம் கொழும்பு நகரத்தில் மற்றும் அதன் புறநகர் பிரதேசங்களில் குறைந்த வசதிகளுடன் வாழுகின்ற குடியிருப்புகளை மீள இடமாற்றுவதற்காக 50,000 அலகு வீடுகள் நிர்மாணிக்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதுடன் அக்குறித்த நோக்கத்துக்காக நகர மீள் உருவாக்க கருத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை 22 வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதன்படி 13,814 வீடலகுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 11,269 குடும்பங்கள் தமது புதிய வீடுகளில் மீள்குடியேற்றப்பட்டுள்ளன. இரண்டு கருத்திட்டங்களில் (601 தோட்ட 450 வீடலகுகள் மற்றும் கொலன்னாவையில் 336 வீடலகுகள்) மேலும் 786 வீடலகுகள் நிறைவு செய்யும் பல்வேறு கட்டங்களில் காணப்படுகின்றன.

	கருத்திட்டத்தின் பெயர்	සමුච්චිත **பௌதீக முன்னேற்றம்** (%)
1	601 தோட்டம் 450 வீடலகுகளை நிர்மாணித்தல்	99
2	கொலன்னாவையில் 336 வீடலகுகளை நிர்மாணித்தல்	96
3	கொழும்பகே மாவத்தை 615 வீடலகுகளை நிர்மாணித்தல்* (மீதி வேலைகள் மீண்டும் அளித்தல்)	39
4	** டொரிங்டன் இல் 115 வீடலகுகளை நிர்மாணித்தல் **	11

* ஒப்பந்தம் 39% முன்னேற்றத்துடன் முடிந்தது. திறைசேரி ஒதுக்கீடு கிடைக்காததால், கட்டுமான பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

** ஒப்பந்தம் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகளுக்காக ஒரு விலைக்கேள்வி பெறப்பட்டுள்ளது. திறைசேரி ஒதுக்கீடு கிடைக்காததால், கட்டுமான பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஏற்ப, நாடு இயல்பு நிலைக்குத் திரும்பும் வரை நகர புத்துயிரளிப்புக் கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்காக, நகர புத்துயிரளிப்புக் கருத்திட்டத்தினூடாக கட்டமைக்கப்பட்ட வீடுகளை திறந்த சந்தையில் விற்பனை செய்து, நிதியை உருவாக்குவதனூடாக ஒபபந்ததாரருக்கு செலுத்த வேண்டியுள்ள நிதி செலுத்துவதற்கு மற்றும் தற்போது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள நகர புத்துயிரளிப்புக் கருத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை மீண்டும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, அரசாங்கத்தின் நிதி வசதிகள் கிடைக்கும் வரை சுயநிதி பொறிமுறை என்ற பெயரில் நகர புத்துயிரளிப்புக் நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்வதற்காக (CP Nò:22/1500/618/020 திகதி 23-09-2022) அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டது.

❖ **நிதிசார் முன்னேற்றம்**

கருத்திட்டத்தின் பெயர்	**2022 வருடத்தில் நிதி ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்தல் (ரூ.மி)**	**செலவு (ரூ.மி)**
நகர புத்துயிரளிப்புக் கருத்திட்டம்	1190.0	1189.88

❖ **விசேட சாதனைகள்**

- 450 வீடலகுகள் நிர்மாணிக்கப்படுகின்ற 601 தோட்ட வீடமைப்புக் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 99.68% ஆகும்.
- 336 வீடலகுகள் நிர்மாணிக்கப்படும் கொலன்னாவ வீடமைப்புத் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 96% ஆகும்.

<u>கொழும்பு நகர புத்துயிரளிப்புக் கருத்திட்டத்துக்கான உதவிக் கருத்திட்டம்</u>

கொழும்பு நகரைச் சுற்றி வாழும் மிகவும் வறிய 50,000 குடும்பங்களை குடியமர்த்துவதற்காக 2010 ஆம் ஆண்டில் நகர புத்துயிரளிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட வீட்டுத்திட்டத்தை துரிதப்படுத்த 2025 ஆண்டாகும்போது மேலும் 5,500 வீடுகளை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 2019 ஏப்ரல் முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் கொழும்பு புத்துயிரளிப்பு கருத்திட்டத்திற்கான ஆதரவு வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்டு

இந்த கருத்திட்டம் 09 கருத்திட்டங்களின் கீழ் 5500 வீடலகுகளை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பினும், மறுகட்டமைப்பின் கீழ், அதில் 4074 வீடலகுகளுக்கு 06 கருத்திட்டங்களின் கீழ் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.நகர திட்டமிடல், மீள்குடியேற்றம் மற்றும் மீள்குடியேற்றத்திற்கு பிந்தைய கொள்கைகள், வீட்டு பராமரிப்பு நடவடிக்கைகள், மீள அபிவிருத்தி அணுகுமுறைகளில் புத்தாக்கங்கள் மற்றும் பொதுமக்களது தலையீடுகளில் நீண்டகால நிலைத்தன்மை மீளாய்வுசெய்தல் போன்ற கருதப்படவேண்டிய பிரிவுகள் மேம்படுத்துவதை கொழும்பு புத்துயிரளிப்பு கருத்திட்டத்துக்காக உதவிக் கருத்திட்டம் மூலம் நோக்கமாகக் கொண்டுள்ளது. கருத்திட்டம் மூன்று ஆக்கக்கூறுகளைக் கொண்டுள்ளது.

முதலாம் ஆக்கக்கூறு – வீடுகள் கட்டுமானம்:

குறைந்த வசதிகளைக் கொண்ட பிரஜைகளுக்காக கட்டுப்படியான விலைக்கு பல் மாடி கட்டிடங்களில் சுமார் 4,074 வீடலகுகளை நிர்மாணிப்பதற்கு உதவுதல்

இரண்டாம் ஆக்கக்கூறு – காணிகள் மீண்டும் மேம்பாடு : குறைந்த வசதிகளைக் கொண்ட பிரஜைகளுக்குரிய குடும்பங்கள் நகர புத்துயிரளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாடிவீட்டு அலகுகளில் மீள்குடியேறிய பின்னர் பெற முடியுமான

காணிகளிலிருந்து பெறக்கூடிய வருமானத்தை இந்தக் ஆக்கக்கூறின் மூலம் மிகுதியாக்கப்படும்

மூன்றாம் ஆக்கக்கூறு: தொழில்நுட்ப உதவி மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம்: நகர புத்துயிரளிப்பு நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தும் நடவடிக்கை மேம்படுத்துவதற்காக கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக உதவி வழங்குதல்.

- **கருத்திட்டத்தின் நோக்கங்கள்**

குறைந்த வருமானம் பெறுகின்ற சமூகங்களின் வீடமைப்பு நிலைமைகளை மேம்படுத்தல், அதனுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் முறைமைகள் என்பன மேம்படுத்தலுடன், ஏற்க முடியுமான விலைக்கு வீடுகளை நிருமாணித்தல் மற்றும் காணிகளை மீள அபிவிருத்தி செய்யும் முதலீடுகளை மேற்கொள்வதனூடாக கொழும்பில் காணிப் பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரித்தல் இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். கருத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படுவது : கட்டுப்படியான விலைக்கு சுமார் 5,500 வீடுகளின் கட்டுமானம்.(நிகழ்காலத்தில் மறுகட்டமைப்பின் கீழ் 4,074 வீடலகுகள் முன்மொழியப்பட்டுள்ளன.) குறைப்பயன்பாட்டு அபிவிருத்தி பிரஜைகளின் குடும்பங்கள் புதிய மாடிவீட்டு அலகுகளில் மீள்குடியேறிய பின்னர் பெற முடியுமான காணிகளிலிருந்து பெறக்கூடிய வருமானத்தை மிகுதியாக்கப்படல் மற்றும் தொழில்நுட்ப உதவி மற்றும் கொள்கைகளை மேம்படுத்துவதாகும்.

- **கருத்திட்டத்தின் செலவினம் மற்றும் நிதிசார் திட்டம்**

ஆசியா உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) 130 அமெரிக்கா டொலர் மில்லியன் மற்றும் இலங்கை அரசு 82 மில்லியன் அமெரிக்கா டொலர்களையும் வழங்குகிறது. அதற்கமைய இந்த கருத்திட்டத்தின் மொத்த செலவு 158 ஐக்கிய அமெரிக்கா டொலர் மில்லியன்களாகும்.

உருப்படி	கிரயம் (ரூ.மி)	நிதிசார் மூலகங்கள் (ஐ.அ.டொ.மி)			
		ஆசியா வசதிகள் முதலீட்டு வங்கி (AIIB)		இலங்கை அரசு	
1 ஆம் ஆக்கக்கூறு	127.0	108.0	85%	19.0	15%
2 ஆம் ஆக்கக்கூறு	11.0	10.0	91%	1.0	9%
3 ஆம் ஆக்கக்கூறு	14.0	6.0	42%	8.0	58%
தேறிய கருத்திட்ட செலவு (வரிகள் மற்றும் தீர்வைகளற்ற வரிகளைத் தவிர்ந்த)	152.0	124.0	81%	28.0	19%
மூலதன தொடக்க கட்டணம், பொறுப்புகள் கட்டணங்கள் மற்றும் IDC (கட்டுமானத்தின் போது வட்டி)	6.0	6.0	100%		
மொத்தம்	158.0	130.0	82%	28.0	18%

❖ **நிதிசார் முன்னேற்றம்**

கருத்திட்டத்தின் பெயர்	2022 வருடத்தில் நிதி ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்தல் (ரூ.மி)	செலவு (ரூ.மி)
கொழும்பு நகர புத்துயிரளிப்புக் கருத்திட்டத்துக்கான உதவிக் கருத்திட்டம்	5529	5849.82

நடைமுறையிலுள்ள வீட்டு கட்டுமான கருத்திட்டங்கள்

	கருத்திட்டம்	**2022.12.31 திகதியிற்கு ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் (%)**
1.	அப்பிள்தோட்டம் II கட்டத்தின் 700 வீடலகுகளை நிர்மாணித்தல்	22
2.	கொழும்பகே மாவத்தையில் 624 வீடலகுகளை நிர்மாணித்தல்	52
3.	பர்கியுஷன் வீதியில் 750 வீடலகுகளை நிர்மாணித்தல்	07
4.	ஸ்டேடியம்கம 1000 வீடலகுகளை நிர்மாணித்தல்	77
5.	மாதம்பிட்டியே 700 வீடலகுகளை நிர்மாணித்தல்	15

02 ஆம் ஆக்கக்கூறு

குறைந்த வசதிகளைக் கொண்ட பிரஜைகளுக்குரிய குடும்பங்கள் நகர புத்துயிர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (URP) கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாடிவீட்டு அலகுகளில் மீள்குடியேறிய பின்னர் பெற முடியுமான காணிகளிலிருந்து பெறக்கூடிய வருமானத்தை இந்தக் ஆக்கக்கூறின் மூலம் மிகுதியாக்கப்படும். இப்போதைக்கு, மறுகட்டமைப்பதற்கு ஏற்ப உசாத்துணை சேவைகளைப் பெறுவதுடன் தொடர்புடைய "மேற்கோள் குறிப்புரை" ஆசியா உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியிடம் (AIIB) அனுமதி வேண்டி முன்வைக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியேற்பாடுகள் வெளிநாட்டு நிதியீடுகளிலிருந்து 593.7 ரூபா மில்லியன்களாகும்.

03 ஆம் ஆக்கக்கூறு

நகர புத்துயிரளிப்பு கருத்திட்டத்தினைச் செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்காக கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் ஏனைய தரத்தினை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்காக இந்த ஆக்கக்கூறுகளின் மூலம் உதவியாக அமைவதுடன் பின்வரும் காரணங்களில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது.

1. நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ அலகின் அதிகாரிகளின் திறன்கள் மற்றும் இயலுமைகளை மேலும் மேம்படுத்துதல்.
2. இந்த கருத்திட்டத்தின் மூலம் உரித்துப்பெறும் பயனாளிகளுக்கு ஆதரவு வழங்குதல்
3. கருத்திட்டம் தொடர்பான நகர புத்துயிரளிப்பு மற்றும் தேசிய நகர வீட்டுக் கொள்கைகளை வகுத்தல்.
4. மீள்குடியேற்ற செயல் திட்டத்தை தயாரிப்பதற்காக அடிப்படை சமூக-பொருளாதார தரவு சேகரிப்பு கணக்கெடுப்பு மற்றும் திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துவதற்காக உசாத்துணை சேவைகளை வழங்குதல்.
5. "கொழும்பு நகர ஒழுங்குமுறைத் திட்டம்" என்ற உப கருத்திட்டத்தை வேறொரு வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் நிதியமைச்சுடன் கலந்துரையாடப்பட்டு வருவதுடன், அவ்வாறு இல்லையெனில், அக்கருத்திட்டத்தை "கொழும்பு நகரின் நகர புத்துயிரளிப்புக் கருத்திட்டம் செயல்படுத்துவதற்காக உதவும் கருத்திட்டத்தினூடாக" நிறைவேற்றுவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

<u>சீன உதவியின் கீழ் செயல்படுத்தப்படுகின்ற கருத்திட்டம்</u>

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, குறைந்த வருமானம் பெறுவோருக்கு மானியத்துடன் கூடிய வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உதவிகளை வழங்குவதற்கு சீனக் குடியரசு அரசாங்கம் இணங்கியது. இந்த கருத்திட்டம் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காகத் தேவையான வசதிகளுடன் கூடிய 1996 மானியத்துடன் கூடிய வீடலகுகளை கொண்டுள்ளது. கருத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக கட்டுமானச் செலவு 552

யுவான் மில்லியன்களாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடமைப்பு அபிவிருத்தி கட்டுமானங்களுக்காக பின்வரும் இடங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன

- பேலியகொடையில் 615 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணித்தல்
- தெமட்டகொடையில் 586 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணித்தல்
- மஹரகமவில் 112 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணித்தல்
- பழத்தோட்டத்தில் 108 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணித்தல்
- மொரட்டுவையில் 575 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணித்தல்

- கருத்திட்டத்தின் நோக்கம்

கொழும்பு பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறுநர்களுக்காக வீடுகளை வழங்குதல்.

❖ **விசேட சாதனைகள்**

- Letter of Exchange நிதி அமைச்சு மற்றும் சீன சர்வதேச அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் மூலம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
- சீனத் தரப்பில் அனுப்பப்பட்ட வரையுள்களை அமுலாக்கும் ஒப்பந்தம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் மீளாய்வு செய்யப்பட்டு இரு தரப்பினராலும் கலந்துரையாடப்பட்டு இணங்கியுள்ளனர்.
- இந்த கருத்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் ,இதுவரை சுமார் 40% இற்றறையாகும்போது நிறைவடைந்துள்ளது. அதன்படி, விலைக்கேள்வி ஆவணம் வரையிலான திட்டமிடல் மற்றும் ஆவணப்படுத்தல் கிட்டத்தட்ட முடிந்துள்ளது. ஆயினும், விலைக்கேள்வி அழைத்தல் கட்டுமானப் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை

<u>நகர கருத்திட்டங்களை தயாரிப்பதற்கு வசதிகளை ஏற்பாடு செய்தல் - நிலைபேறான நகர அபிவிருத்திக் கருத்திட்டம்</u>

திருகோணமலை, தம்புள்ளை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி ஆகிய 4 நகரங்களுக்கான கருத்திட்ட திட்டத்தை தயாரித்தல் இதன் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- **கருத்திட்டத்தின் நோக்கம்**

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக நகர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

❖ விசேட சாதனைகள்

1. தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட கருத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்துதல் மற்றும் கருத்திட்ட காலத்தை 2024 மார்ச் வரை நீடித்தல்.
2. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கு 30-40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நடைமுறைக் கடனாக (Implementation Loan) வழங்கப்பட உள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு முன்னுரிமையளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

2.2. எதிர்கால இலக்குகள்

- தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் தேசிய பௌதீக திட்டம் - 2022 நடைமுறைப்படுத்துதல் மற்றும் கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களுக்கான பிராந்திய பௌதீகத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் நிறைவு செய்தல்
- நகர புத்துயிரளிப்புக் கருத்திட்டத்தின் ஊடாக குருநாகல் மற்றும் மஹரகமவில் 900 வீட்டுத் தொகுதிகளை சுயநிதி பொறிமுறையின் ஊடாக நிர்மாணித்தல்.

- 2023 ஆம் ஆண்டில், கொழும்பு நகர புத்துயிரளிப்புக் கருத்திட்டத்திற்காக உதவிக் கருத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்ற கொழம்பகே மாவத்தையில் உள்ள 624 வீட்டுத் தொகுதிகள் மற்றும் ஸ்டேடியம்கம 1000 வீடலகுகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டம் என்ற இரண்டு கருத்திட்டங்களும் 2023 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது
- சீன உதவித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்ற வீடமைப்புக் கருத்திட்டத்திற்காக இலங்கைக்கும் மற்றும் சீனக் குடியரசிற்கும் இடையில் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுதல்.
- வரையறுக்கப்பட்ட ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) கம்பனியூடாக ஹில்டன் சூட்டுக்குறி தரநிலை மற்றும் சந்தைப் போட்டிக்கு ஏற்றவாறு விருந்தினர் அறைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் பல்மாதிரி வைபவங்களுக்காக வசதிகளுடன் கூடிய உணவகங்களை மேம்படுத்துதல்.

.....

பிரதான கணக்கீட்டு அதிகாரி


டப்ளியு.எஸ்.சத்யாநந்த
செயலாளர்

2023.02.28

03. அத்தியாயம்

3. 2022 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான ஒட்டு மொத்த நிதி செயலாற்றுகை

3.1. நிதி செயலாற்றுகைக் கூற்று




ஏசீஎ- ஸ்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	2021	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஎ-1
-	உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியிலாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	நிறைசேரி பணிமுறைமைகள்		6,307,498,094	4,994,616,295	ஏசீஎ-3
-	வைப்புகள்		427,477,186	295,428	ஏசீஎ-4
-	முற்பணக் கணக்குகள்		38,353,746	3,421,169	ஏசீஎ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	3,478,798	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		6,773,329,027	5,001,721,693	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		6,773,329,027	5,001,721,693	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		40,000,000	-	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		6,733,329,027	5,001,721,693	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்				
607,636,703	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	567,176,934	47,408,776	
547,717,990	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	510,581,147	73,576,521	ஏசீஎ-2(ii)
1,003,970,696	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	955,996,169	381,085	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
550,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	134,980	15,000.00	
2,159,875,389	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		2,033,889,230	121,381,382	
	மூலதனம் செலவினம்				
35,298,488	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	22,931,058	3,590,873	
119,927,851	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	117,151,017	1,463,703	
1,597,786,947	மூலதன மாற்றல்கள்	12	1,505,427,311	-	ஏசீஎ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
2,070,000	நீதன் விருத்தி	14	1,616,818	47,000	
22,258,525,568	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	20,370,366,720	15,943,439,758	
24,013,608,854	மொத்த மூலதனம் செலவினம் (எ)		22,017,492,924	15,948,541,334	
	வைப்புக் கொடுப்பனவுகள்		643,409,407	210,866	ஏசீஎ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		134,576,837	4,719,796	ஏசீஎ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		777,986,244	4,930,661	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		24,829,368,398	16,074,853,377	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(18,096,039,371)	(11,073,131,684)	
	பணிமூற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		18,096,039,371	11,073,131,684	ஏசீஎ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஎ-3

3.2 நிதி நிலைமைக் கூற்று



		2,445,023,912	114,095,064
		1,977,038,000	-
		20,000,000	-
		2,445,023,912	114,095,064

W.S. Sathyananda
Secretary
Ministry of Urban Development and Housing
17th Floor, "Suhurupaya", Battaramulla

G.A.I. Leiwala
Chief Financial Officer
Ministry of Urban Development & Housing
17th Floor, "Suhurupaya"

3.3 காசு பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

		உண்மை	
		2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்			
மொத்த வரிப் பெறுகைகள்		-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்		-	-
இலாபம்		406,733,092	3,478,798
வருமானம் அல்லாத பெறுகைகள்		-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்		-	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	பின்னிணைப்பு I	6,307,498,094	4,994,616,298
முற்பணங்களை ஈடுசெய்தல்		116,788,225	2,628,203
வைப்புக்களின் பெறுகை		185,090,592	295,428
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)		7,010,110,004	5,000,928,726
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு			
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள்		6,195,389,751	4,994,153,277
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்		40,997,025	381,085
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்		106,190,035	-
திறைசேரிக்குத் திருப்பப்பட்ட பணிமுற்பணம்		40,000,000	-
முற்பணக் கொடுப்பனவு		127,199,520	4,719,796
வைப்புக் கொடுப்பனவு		425,553,352	210,866
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)		6,935,329,683	4,999,465,023
2		பொரளஸ்கமுவ ஏரியினை அண்டிய பகுதியினை விருத்தி செய்தல் (கட்டம் IV)	91.50	10.00	85%	
3		மில்லாவ புதிய சிறைச்சாலை செயற்திட்டம் மற்றும் மீள் குடியேற்ற வீடமைப்பு நிர்மாணிப்பு	130.00	15.00	42%	
4	கண்டி	அங்குமுற சந்தை அபிவிருத்தி	30.00	5.00	-	
5		தலாத்துஓயா வாகனப் பூங்கா அபிவிருத்தி	9.50	4.50	38%	
6		தவுலகல பொதுச்சந்தை அபிவிருத்தி	10.00	2.00	40%	
7	மன்னார்	பல்லேமுனை விடையாட்டு மைதான அபிவிருத்தி (கட்டம் II)	46.31	5.00	-	
8		முல்லைத்தீவு பேரூந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைதல்.	116.08	15.00	38%	
9	அம்பாறை	அம்பாறை வாரச் சந்தை அபிவிருத்தி	173.00	40.00	52%	
10	அனுராதபுரம்	பொதுமக்களுக்காக அபயவாவியில் நீர்ப் பூங்காவினை நிர்மாணித்தல்	34.73	10.00	100%	
11		பண்டாரநாயக்க மாவத்தையில் நிலப்பரப்பினை அழகுபடுத்தி மேம்படுத்தும் செயற்திட்டம்	13.19	3.00	19%	
12		மைத்திரிபால சேனானாயக்க மாவத்தையில் நிலப்பரப்பினை அழகுபடுத்தி மேம்படுத்தும் செயற்திட்டம்	20.89	5.00	16%	
13		கரிஸ்சந்ர மாவத்தையின் நிலப்பரப்பினை அழகுபடுத்தி மேம்படுத்தும் செயற்திட்டம்	30.79	5.00	-	
14	இரத்தினபுரி	பேறுவானவத்த, ஆலியகொட மக்களினை மீள் குடியேற்றுதல் (ஊடறுக்கும் வீதி)	95.00	25.00	91%	
15	கேகாலை	கேகாலை பேரூந்து நிலையத்தினை மீளமைத்தல் – இணை வசதிகள் மற்றும் வெளிவாரியான செயற்பாடுகள்	321.00	35.00	20%	
16		மாலிம்பொட வத்துயாய வீடமைப்புச் செயற்திட்டம்	80.00	20.00	35%	
17		றுவன்வெல்ல சந்தை அபிவிருத்தி	67.00	20.00	96%	
18	மொனராகல	கதிர்காமம் நுழைவுச் சதுக்கத்தின் அபிவிருத்தி (படிநிலை III மற்றும் கட்டம் III)	63.00	10.00	100%	
19		கதிர்காமம் நுழைவுச் சதுக்கத்தின் அபிவிருத்தி (படிநிலை III மற்றும் கட்டம் IV)	79.00	10.00	80%	
20	காலி	பத்தேகம பேரூந்து நிலையத்தின் மீதிப் பணிகளின் கட்டுமானம் (கட்டம் III)	10.00	2.50	100%	
21	மாத்தறை	தெய்யந்தர நிலப்பரப்பினை மேம்படுத்துதல் (கட்டம் II)	10.00	5.00	100%	
22		தெய்யந்தர பேரூந்து நிலையத்தினைச் சுற்றிய பகுதியினை விருத்தி செய்தல் (கட்டம் III)	10.00	5.00	100%	
மொத்தம்			**1,938.99**	**300.00**		**134.50**

2022 ஆம் ஆண்டு தொடர்பில் பொதுத் திறைசேரி நிதியத்தினூடாக ரூ பா. 300.00 மில்லியன் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், தொடர்ச்சியாக நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டமையின் காரணத்தினால் செயற்திட்டங்களுக்கு ரூபா. 620.00 மில்லியன் வரை பொதுத் திறைசேரி நிதியத்தினூடாக மீளவும் செலுத்தும் நிபந்தனைகளின் கீழ் பற்றுச்சீட்டுக்களினைச் செலுத்துதல் இடம்பெற்றுள்ளது.

- **நடுத்தர வருமானப் பயனாளிகளுக்கான வீடமைப்புச் செயற்திட்டங்கள்**

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் கீழ் உள்ளூர் வீடமைப்பு தரகர்கள் போதுமானதாக இல்லாமையினாலும் மற்றும் நாட்டின் அந்நியச் செலாவணி உயர்வடைதலை நோக்கமாகக் கொண்டும் ஆரமப்பிக்கப்பட்ட வீடமைப்பு அலகுகள் வெளிநாட்டிலுள்ளவர்களுக்கு அமெரிக்க டொலர் ஊடாக ஒதுக்குவதற்கு வாய்ப்பினை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனூடாக 2022 ஆம் ஆண்டு இறுதியில் 5 இலட்சம் அமெரிக்க டொலர் வருமானம் உழைக்கப்பட்டுள்ளது.

(iii) பிரத்தியேக முதலீட்டுடனான செயற்திட்டங்கள்

நகர அபிவிருத்தி அதிகார சபையினூடான 2022 ஆம் ஆண்டில் போட்டி விலைமனுக்களினைக் கோருதலினூடாக அதிகார சபையின் 21 ஏக்கர் வரையிலான காணிகள் 05 பல்வேறு செயற்திட்டங்களுக்கு வெளிவாரியான முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அக்காணிகள் தொடர்பில் முதலீட்டாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி ரூபா. 10,000.00 மில்லியனாகும்.

(iv) நிறுவனத்தின் மனித வள முகாமைத்துவம்

2022 ஆம் ஆண்டில் மனித ளவ முகாமைத்துவப் பிரிவினூடாக செயற்திறனினை மதிப்பீடு செய்யும் மூலோபாயம் அறிமுகப்படுத்தப்பட்டு சகல ஊழியர்களினையும் மென்பொருள் மூலோபாயமொன்றினூடாக மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல, ஒன்லைன் வரவுத் திட்டம் (Online Attendance System) என்றவாறு புதிய விடுமுறை மென்பொருளொன்றினை அறிமுகப்படுத்துதல் மற்றும் ISO 9001:2015 பரிந்துரைகள் விசேட சாதனைகளாகும்.

(v) வருமானங்களினைப் பெருக்குதல்.

2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி என்றவாறு பல்வேறு இன்னல்களினைச் சந்தித்தபோதிலும், பொதுத் திறைசேரிக்கு ரூபா. 500.00 மில்லியன் பங்களிப்பொன்றினை வழங்கியதன் பின்னர் அதிகார சபையின் மூலம் ரூபா. 892.00 மில்லியன் இலாபமொன்று உழைக்கப்பட்டுள்ளது.

(vi) நானாவிதம்

நிறுவனங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் சாதனைகளாக 4 தங்கப் பதக்கங்களும், 7 வெள்ளிப் பதக்கங்களும் மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களும் அதிகார சபையினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன், கொவிட் – 19 தொற்று நோய் நிலைமையினால் ஊழியர் நலன்புரி மற்றும் சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

2.1.3 நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை

புதிய முகாமைத்துவத்தின் வழிகாட்டிலின் கீழ் நகரப் பிரதேசங்களில் வீடமைப்புச் செயற்திட்டங்களினை அமுலாக்குவதற்குக் காணிகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு விரிவான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், நாடளாவிய ரீதியில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட 273 பகுதிகளினை இலக்காகக் கொண்டு பிரதேச செயலக மட்டங்களில் இடம்பெற்ற சமூக மற்றும் பொருளாதார ஆய்வினூடாக நகரத்தின் குறைவான வசதிகளினைக் கொண்ட குடியிருப்புக்கள் தொடர்பில் தரவுகளினைச் சேகரிப்பதற்கு இயலுமை கிடைத்துள்ளது. அதனூடாக, சிக்கல்களுள்ள குறைந்த வசதிகளினைக் கொண்ட குடியிருப்பினை இனங்காணும் இயலுமை கிடைத்துள்ளதுடன், எதிர்வரும் வருடங்கள் தொடர்பில் செயற்திட்டங்களினை சீரமைப்பதற்கென காணி இருப்பினை இனங்காணும் இயலுமையும் கிடைத்துள்ளது.

அங்கு, நடுத்தர வருவாய் சமூகத்தினருக்கான வீட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் அதிகாரசபைக்கு வருமானம் ஈட்டுவதற்கான அணுகுமுறை பெறப்பட்டுள்ளது.

- **பௌதிக அபிவிருத்தி முன்னேற்றம்**

நகர்ப்புற குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் வீட்டுப் பிரச்சனைக்கு நேரடித் தீர்வுகளை வழங்குவதற்காக பௌதிக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ், 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஹிக்கடுவை மற்றும் நாவலப்பிட்டியில் 2 வீட்டுச் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக இச்செயற்திட்டங்கள், BD/CBP/01/01/04-2022 என்ற இலக்க மற்றும் 2022.04.26 ஆந் திகதிய திறைசேரி சுற்றுநிரூபத்தின் பிரகாரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

அதன் பிரகாரம், கிக்கடுவ – துடுவேகொட நகர வீடமைப்புச் செயற்திட்டம், அரச – பிரத்தியேகக் கூட்டு பொறிமுறையின் கீழ் அமுலாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நாவலப்பிட்டிய – சொய்சா நகர வீடமைப்புச் செயற்திட்டம், அரச – பிரத்தியேகக் கூட்டு பொறிமுறையின் கீழ் அமுலாக்குவதற்கு முடியாமையினால், அது தொடர்பில் பொதுத் திறைசேரி நிதியினை, 2023 ஆம் ஆண்டில் கோரியும் அவ் ஒதுக்கீடுகள் கிடைக்காமையின் கீழ் அமுலாக்குவதற்கு இயலாது போயுள்ளது.

பௌதிக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

#	செயற்திட்டம்	செயற்திட்டக் காலப்பகுதி	**மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ.மி.)**	வீட்டு அலகுகளின் எண்ணிக்கை	**ஒதுக்கீடு - 2022 (ரூ.மி.)**	2022.**12**.3**1** அன்றைய திரண்ட முன்னேற்றம்	
						பௌதிகம் (%)	நிதிசார் (ரூ.மி.)
1	கிக்கடுவ துடுவேகொட நகர வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் (கட்டம் I)	2022	158.00	32	158.00	3.6%	1.72
2	நாவலப்பிட்டிய, சொய்சாகெல நகர வீடமைப்புச் யற்திட்டம்	2022 - 2023	408.66	83	342.00	3.04%	0.92
மொத்தம்			**566.66**	**115**	**500.00**		**2.64**

- **மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கு, நகரக் குடியிருப்புக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதாகும். அதன் பிரகாரம்., ரூபா. 10.00 மில்லியன் உள்ளக ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

#	**நிகழ்ச்சித் திட்டம்**	**செயற்திட்டக் காலப்பகுதி**	**மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ.மி.)**	**நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை**	**ஒதுக்கீடு – 2022 USDA இன் உள்ளகப் பெருக்கத்திலிருந்து (ரூ.மி.)**	**2022.09.30 அன்றுள்ளவாறான முன்னேற்றம்**	
						பௌதிகம் (%)	**நிதிசார் (ரூ.மி.)**
1	மனித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	2022, ஜனவரி – 2022 திசம்பர்	10.00	192	10.00	84%	6.65
மொத்தம்			**10.00**	**192**	**10.00**		**6.65**

2.1.4 கொண்டமோனியம் முகாமைத்துவ அதிகார சபை

2022.12.31 ஆந் திகதியன்றைய பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்.

#	செயற்பாடு	பாதீடு செய்யப்பட்ட			2022.12.31 அன்றுள்ளவாறான உண்மையான			
		சான்றிதழ்களின் எண்ணிக்கை	வீட்டு அலகுகளின் எண்ணிக்கை	வருவாய் (ரூ.மி.)	சான்றிதழ்களின் எண்ணிக்கை	வீட்டு அலகுகளின் எண்ணிக்கை	வருவாய் (ரூ.மி.)	வருவாய் (%)
1	**கொண்டோமினியம் சான்றிதழ்களை வழங்குதல்**							
i	தற்காலிக கொண்டமோனியம் சான்றிதழ்களினை வழங்குதல்.	03	460	2.25	07	175	0.02	1%
ii	தற்காலிக சான்றிதழ்	01	100	0.025	04	252	37.06	-
iii	இறுதி கொண்டமோனியம் சான்றிதழ்கள்	30	4,000	205.0	63	2,117	109.76	54%
iv	ஆரம்பதிட்டமிடல் அனுமதி (25%) சான்றிதழ்	100	11,000	118.0	106	10,000	33.14	28%
v	சான்றிதழ் புதுப்பித்தல் கட்டணம்	04	-	0.025	01	-	-	-
மொத்தம்		**138**	**15,560**	**325.3**	**181**	**12,544**	**179.98**	
2	**முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள்/முகாமைத்துவக் குழுக்களினைப் பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் செயலாக்குதல்.**							
i	பிரத்தியேக முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள்/ முகாமைத்துவக் குழுக்களினைப் பதிவு செய்தல்.	50	1,200	0.5	40	2,484	0.092	18%
ii	அரச முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் முகாமைத்துவக் குழுக்களினைப் புதுப்பித்தல்/ செயலாக்குதல்.	170	12,000	0.1	102	4,269	0.025	25%
iii	பிரத்தியேக முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் முகாமைத்துவக் குழுக்களினைப் புதுப்பித்தல்/ செயலாக்குதல்.	300	24,000	4.1	394	16,444	2.08	51%
மொத்தம்		**520**	**37,200**	**4.7**	**536**	**23,197**	**2.197**	

- ரூபா. 356.38 மில்லியன் வருடாந்த வருமான இலக்குக்கு நிகராக ரூபா. 261.28 மில்லியன் நிதியினைத் திரட்டுவதற்கு கொண்டமோனியம் முகாமைத்துவ அதிகார சபைக்கு முடிந்துள்ளதுடன், அது. இலக்கிடப்பட்ட வருமானத்தில் 73% செயல் முன்னேற்றமொன்றாகும்.
- 2022 ஆம் ஆண்டில் வரிக்குப் பின்னரான இலாப இலக்குகளில் 97% த்தினை அடைவதற்கு இயலுதல்.
- பாதீடு செய்யப்பட்ட மீண்டுவரும் செலவுகளுக்கு நிகரான மொத்தச் செலவுகளினை 40% த்தினால் குறைத்துக் கொள்ளுவதற்கு இயலுதல்.
- தேசியப் பொருளாதாரத்திற்கு வலுவூட்டுவதற்கு 2022 ஆம் ஆண்டு இலாபத்தில் ரூபா. 50.0 மில்லியன் நிதியினை வரியாக பொதுத் திறைசேரிக்கு வழங்குவதற்கு இயலுதல்.
- 2022 ஆம் ஆண்டு தொடர்பில் தேறிய இலாபம் 48% மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகள் 52% மாக அறிக்கையிடப்படுதல்.

- முறைப்பாட்டு முகாமைத்துவம் தொடர்பில் 1,757 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 2022 திசம்பர் மாதம் 31 ஆந் திகதி நிறைவின் போது அதில் 1,510 முறைப்பாடுகள் முழுமையாகத் தீர்க்கப்படுதல்.
- கொண்டமோனியச் சொத்துக்களின் பொது வசதிகள் மற்றும் பொதுவான அம்சங்கள். தொடர்பில் கிடைக்கப் பெற்ற 54 முறைப்பாடுகளில், 45 தொடர்பில் தீர்வுகளினை வழங்குவதற்கு இயலுதல்.
- கொண்டமோனியச் சான்றிதழ்கள் மற்றும் அடிப்படைத் திட்ட அனுமதிக் கடிதங்களினை வழங்கும் வருடாந்த இலக்கான 134 ஐத் தாண்டிய சான்றிதழ்கள் மற்றும் 180 அடிப்படைத் திட்ட அனுமதிக் கடிதங்களினை வழங்குவதற்கு இயலுதல்.
- காலத்தின் தேவைப்பாடொன்றான கொண்டமோனியம் சொத்துத் தொடர்பிலான புதிய ஒழுங்கு விதிகளினைத் தயாரிப்பதற்கு அடிப்படை படிவமொன்றினைத் தயாரிப்பதற்கு இயலுதல்.
- கொண்டமோனியச் சொத்துக்களின் சட்டரீதியிலான நிர்வாகக் கட்டமைப்பான அரச மற்றும் பிரத்தியேகப் பிரிவின் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள்/சபைகளினைப் பதிவு செய்தல், முகாமைத்துக் கூட்டுத்தாபனங்கள்/சபைகளின் பதிவினைப் புதுப்பித்தல், செயலற்ற முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் சபைகளினை செயலாக்கும் வருடாந்த இலகுக்குகளினைக் கடந்து செல்லுவதற்கு இயலுதல்.
- 10 ஆம் இலக்க பொது வசதிகள் சட்டம் மற்றும் 1973 ஆம் ஆண்டின் அடுக்குமாடி குடியிருப்புக்கள் தொடர்பிலான சட்டம் மற்றும் அதனுடன் தொடர்பிலான திருத்தங்களினூடாகவே அதிகார சபை நிர்வகிக்கப்படுகிறது. அச்சட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருதுடன், தேவையான திருத்தங்களுக்கான முன்மொழிவுகள், நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிபுணத்துவத்தினைக் கொண்ட சட்ட சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

2.1.5 செலெண்டிவா முதலீட்டு நிறுவனம்

- வரையறுக்கப்பட்ட அகியூட்டி பார்ட்னர்ஸ் (Acuity Partners (Pvt) Limited) பிரத்தியேக நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் பின்வரும் சொத்துக்கள் தொடர்பிலான சாத்தியவள அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
    - கொழும்பு கில்டன் விடுதி
    - கொழும்பு கில்டன் விளையாட்டுத் தொகுதி
    - கிரான்ட ஒரியன்ரல் விடுதி மற்றும் யோர்க் வீதியின் கட்டிடம்
    - கொழும்பு கிரான்ட் கயிட்

- நேரடி வெளிநாட்டு முதலீடுகளினை ஊக்குவிப்பதற்கு பங்குகளில் 100% வரை பிரத்தியேகமாக வைப்பதனூடாக ஒவ்வொரு சொத்து இலாகாக்களினைப் பகிர்ந்தளிப்பதனூடாக முன்னோக்கிக் கொண்டு செல்லுவதற்கு 2022 மார்ச் மாதத்தில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

கொழும்பு கில்டன் மற்றும் விளையாட்டு வளாகம்

- கொழும்பு கில்டன் மற்றும் விளையாட்டு வளாகத்தினை மேம்படுத்துவதற்கு ஆர்வ வெளிப்பாடு தொடர்பில் அழைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் ஆர்வத்தினைக் காட்டும் 8 பிரத்தியேக முதலீட்டாளர்கள் தொடர்பிலான குறுகிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.
- உணவு பான விற்பனை, கூட்டங்கள் தொடர்பில் இடங்களினை வழங்குதல் மற்றும் விருந்தினர்களின் அறைகளினை மேம்படுத்துவதனூடாக சந்தையுடன் போட்டியிடுவதற்கும் மற்றும் இலாபத்தினை ஈட்டும் நிறுவனமொன்றாக மாற்றுவதற்கும் குறுகிய/நடுத்தரக் காலக் கொள்கைகள் அமுலாக்கப்பட்டுள்ளன.
- 2023 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு 253 விருந்தினர் அறைகளினை மீளமைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- கில்டன் விளையாட்டு நிலையத்தில் புதிதாக Hilton All Day Club ஹ Night Club அங்குரார்ப்பணஞ் செய்தல்.

கொழும்பு கிரான்ட் கயட்

- கிரான்ட் கயட் கோப்பரேசன் விடுதி செயற்பாட்டாளரின் முழுமையான உடன்பாட்டுடன் செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா. 59 மில்லியன் தொடக்கம் ரூபா. 51 பில்லியன் வரை மீளவும் தயாரிக்கப்பட்டுள்ளது.
- கொவிட் தொற்றுநோயினைப் பொருட்படுத்தாது செயற்திட்டத்தினை செயலாக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதுடன், அதில் 60% தொடர்பில் ரூபா. 25 பில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதுடன், மீதிப் பகுதியினைப் பூர்த்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா. 26 பில்லியனாகும்
- விநியோகம் நிறைவடையும் வரை ரூபா. 6 பில்லியனினை தவணை முறையில் நிதியளிப்பதற்காக பிரதான பங்குதாரர்களான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கை

செய்யப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பங்குதாரர்களின் கொடுப்பனவுகளுக்கு ரூபா. 2 பில்லியன் மேலதிக மூலதன உட்செலுத்துதல் அடிப்படை ரீதியில் பயன்படுத்தப்பட்டுள்ளது

கிரான்ட் ஒரியன்டல் விடுதி

- சிறு சிறு பழுதுபார்த்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- கிரான்ட் ஒரியன்டல் விடுதியின் கண்காணிப்புச் செயற்பாடுகளுக்கு இரண்டாவது அடிப்படையின் கீழ் பிரதான நபர்களினை நியமிக்குமாறு வோட்டர்ஸ் எட்ஜ் இல் இருந்து கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிரான்ட் ஒரியன்டல் விடுதியின் பதவியணியின் நிபுணத்துவத்தினை மேம்படுத்துவதற்கும் மற்றும் மீளமைப்பதை நிறைவு செய்யும் வரை தற்போதுள்ள வளங்களினைப் பயன்படுத்துவதற்கும் வோட்டர்ஸ் எட்ஜ்யிடமிருந்து வழங்கப்பட்டுள்ள பயிற்சியின் கீழ் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

2.1.6 பாரிய கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துச் செயற்திட்டம்

செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரர்களான வரையறுக்கப்பட்ட சைனா காபர் பொறியியலாளர் கம்பனியினால் 3 கோரிக்கைகள், தகராறு தீர்ப்பாயகத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் செயற்திட்ட உத்தியோகத்தர்கள் மாத்திரம் முன்வைத்த அதன் முதலாவது மற்றும் மூன்றாவது கோரிக்கைகள் தொடர்பில் அவர்களினால் கோரப்பட்டுள்ள கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டது. இதன் முதலாவது கோரிக்கையின் மதிப்பு ரூபா. 151 மில்லியன் என்பதுடன், மூன்றாவது கோரிக்கையின் மதிப்பு ஐக்கிய அமெரிக்க டொலர் 16.5 மில்லியனாகும் (ரூ. 6,300.00 மில்லியன்) இரண்டாவது உரிமை கோரலுக்கான நட்டத்தினை. காப்புறுதி இழப்பீட்டு நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செயற்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறாகும்

#	நிகழ்ச்சித் திட்டம்	கருத்திட்டக் காலப்பகுதி	மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ.மி.)	ஒதுக்கீடு – 2022 (ரூ.மி.)	2022.12.31 வரை ஒட்டுமொத்த முன்னேற்றம்	
					பௌதிக (%)	நிதிசார் (ரூ.மி.)
1	கொழும்பு தலைநகரினை அண்டிய திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டம்	2017 ஜன.- 2023 திச.	24,092.79	2,700.00	90%	21,045.04
மொத்தம்			**24,092.79**	**2,700.00**		**21,045.04**

2.2 சாவல்கள்

2.2.1 முன்னைய நகர அபிவிருத்தி, கழிவு அகற்றுதல் மற்றும் சமுதாய இராஜாங்க அமைச்சு, தூய்மைப்படுத்துதல்.

- நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் அவற்றின் விலைகள் துரிதகதியில் அதிகரித்தல்
- எரிபொருள் பற்றாக்குறை மற்றும் விலைகள் அதிகரிப்பு
- ஒப்பந்தக்காரர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள பற்றுச்சீட்டுக்களினை மீள் நிரப்புவதற்கு தேவையான நிதி சரியான நேரத்திற்கு அமைச்சுக்குக் கிடைக்காமை
- தேவையான செயற்திட்டங்களினை இனங்கண்டு அது தொடர்பிலான நிதியினை பொதுத் திறைசேரியினூடாகப் பெற்றுக் கொள்ளுதல்.
- செயற்திட்டங்களுக்குத் தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுவதிலுள்ள தாமதம்..

2.2.2 நகர அபிவிருத்தி அதிகார சபை

- 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் – 19 தொற்றுநோய் நிலை மற்றும் பொருளாதார நெருக்கடியினூடாக நிறுவனத்தின் செயற்பாட்டிற்குப் பல்வேறு தடைகள் ஏற்பட்டுள்ளதுடன்,

விசேடமாக செயற்திட்டங்களினை அமுலாக்கும்போது, அதன் முன்னேற்றத்தினைப் பெரிதும் பாதித்துள்ளது.

- கட்டிட மூலப் பொருட்கள் தட்டுப்பாடு, அதன் விலை அதிகமாக உயர்வடைதல் மற்றும் ஊழியப்படை பற்றாக்குறையின் காரணமாக உரிய விலைகளின் கீழ் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டங்களினை நிறைவு செய்தல் இந்நிலைமை பாரிய சவாலொன்றாகும்.
- பொருளாதார நெருக்கடி காரணமாக பல்வேறு பங்குதரர்களிடமிருந்து அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய வரி வருமானங்கள் மிகவும் துரிதகதியில் குறைவடைந்தமையின் காரணமாக நிறுவனத்தின் நிதி நிலையில் கவனத்தற் கொள்ளத்தக்க தாக்கமொன்றினை ஏற்படுத்தியுள்ளது.

- **நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்புச் செயற்திட்டங்கள்**

- பன்னிப்பிட்டிய - வீர மாவத்தை, கொட்டாவ – குல செவண வத்த வீடமைப்புச் செயற்திட்டங்களின் நிர்மாணிப்புச் செயற்பாடுகள் மிக விரைவில் நிறைவு பெற்று வீட்டுப் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முகங்கொடுத்துள்ள சவால்களில், நிர்மாணிப்புக்கான மூலப்பொருட்களினை வரவழைத்துக் கொள்ளுவதற்கான கடன் கடிதங்களினைத் திறத்தல் சிக்கலொன்றாகும். முன்விற்பனையின் கீழ் வீட்டு அலகுகளினை விற்பனை செய்து நிர்மாணிப்பாளர்களுக்கு நிதியினைச் செலுத்துவது இடம்பெறுவதால், செயற்திட்டங்களினை நிறைவு செய்வதற்கு சகல வீட்டு அலகுகளும் விற்பனை செய்யப்படுதல் வேண்டும். எனினும் நாட்டில் நிலவும் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையினால் விற்பனை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வீட்டு அலகுகள் தொடர்பில் கொள்வனவாளர்களினைத் தேடிக் கொள்ளுவதில் சவாலாகவுள்ளது.

- "ஈடு செய்யக்கூடிய விலைக்கு நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடமைப்புச் செயற்திட்டம்" என்றவாறு ஆரம்பிக்கப்பட்ட 3000 வீடமைப்பு அலகுகளினை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் நிர்மாணிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் இடைநடுவே நாட்டில் எழுந்துள்ள பொருளாதார மந்த நிலையினைக் கருத்திற் கொண்டு, முன்மொழியப்பட்டிருந்த விலைகளின் கீழுள்ள வீடுகளினை விற்பனை செய்வதற்கு முடியாது போயுள்ளதுடன், நிர்மாணிப்பு மூலப் பொருட்களின் விலைகள் உயர்வடைதல்,. அரசிடமிருந்து பெறப்பட்டுள்ள வரிச் சலுகைகள், வீடுகளினைக் கொள்வனவு செய்யும்போது காணப்பட்ட வங்கிக் கடன் வட்டிச் சலுகை போன்றன தற்காலிக ரீதியில் செயற்திட்டங்களினை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நேரிட்டுள்ளது. அதிகரித்த நிர்மாணச் செலவுகளினை மீளாய்வு செய்ததன் பின்னர் சாதாரண நடுத்தர வருமான வீடமைப்புச் செயற்திட்டங்கள் (ஒறுகொடவத்த, பேலியகொட, பொரளஸ்கமுவ, ஸ்ரேடியம்கம, அனுராதபுரம்) ஆக, சந்தையில் தற்பதைய விலையில் விற்பனை செய்வதற்கான புதிய மூலோபாயங்களினை ஆரம்பித்தல் மற்றும் புதிய வரி (வற்) உயர் பெறுமதியினை வசூலிப்பதனூடாக வீட்டு அலகுகளை விற்பனை செய்யும் போது வீடுகளினைக் கொள்வனவு செய்வதற்கு கொள்வனவாளர்களினைத் தேடுவது சவாலொன்றாகும்.

2.2.3 நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை

- நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் (3) 16வது பிரிவின் பிரகாரம்அதிகார , சபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000.மில்லியனாக இருந்த போதிலும், அந்நிதி இதுவரை அதிகார .சபைக்கு கிடைக்கவில்லை

- நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 16 (உ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் பிரதான வருமான முறையாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்து அபிவிருத்தியாளர்களின் சேவைக் கட்டணம், 2011 ஜனவரி மாதம் 06 ஆந் திகதிய අමප/10/2951/504/012 என்ற பத்திரத்தினூடாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஆதலால், அதிகார சபைக்கு பிரதான வருமான வழியொன்று இல்லாமையினால் அதிகார சபையின் எதிர்வரும் வேலைத்திட்டங்களினை அமுலாக்குவதற்குத் தடையாகவுள்ளது.

2.2.4 கொண்டமோனியம் முகாமைத்துவ அதிகார சபை

- கொண்டமோனியம் சொத்துக்களில் நிர்மாணிக்கப்பட்ட சட்டரீதியற்ற நிரந்மாணிப்புக்களினை அகற்றுவதற்குச் செல்லும்போது வெளித்தரப்பினரினால் அதிகார சபைக்கு செய்யப்படும் தொந்தரவுகள்.
- தற்போதுள்ள பொருளாதார நிலையின் கீழ் புதிய கொண்டமோனியம் சொத்துக்களினை நிர்மாணித்தல் மற்றும் நிர்மாணிக்கப்பட்டு வரும் கொண்டமோனியம் சொத்துக்களின் நிர்மாணிப்புச் செயற்பாடுகள் மெதுவாக இடம்பெறுவதால் அதிகார சபையின் பிரதான வருமான மூலோபாயமான கொண்டமோனியச் சான்றிதழ்களினை வழங்குவதன் 2023 பௌதிக மற்றும் நிதி ஆண்டு இலக்குகளினை அடைவதிலுள்ள சிக்கல்.

- காலத்தின் தேவையாகவுள்ள கொண்டமோனியச் சொத்து சட்டத் திருத்தம் தாமதமாகியமையின் காரணமாக எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களுக்கு போதிய தீர்வுகளினை வழங்குவதிலுள்ள சிரமம்.

2.2.5 வரையறுக்கப்பட்ட செலெந்திவ முதலீடு வணிக மற்றும் பொருளாதார அபாயங்கள்

- விநியோகம் முடிவதில் தாமதம் காரணமாக முதலீட்டாளர்களின் ஈர்ப்புக் குறைவடைதல், சந்தையில் வேறு தீர்வுகளினைத் தேடும்போது ஈர்ப்பான விலைகளுக்குள்ள வாய்ப்பு இல்லாது போகுதல்.
- அரசுக்குச் சொந்தமான விருந்தோம்பல் சொத்துக்களினை விநியோகிப்பதற்கு வசதி செய்தல் மற்றும் விரைவுபடுத்துவதற்கு முதலீட்டாளர்களினை சுண்டியிளுப்பதற்கு நிகராக ரூபா மதிப்புச் சரிவிலிருந்து அதிகபட்ட சாத்தியமான பலாபலனினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
- அரசுக்குச் சொந்தமான சொத்துக்களினை பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளினை முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானமெடுப்பது தாமதமாயின், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், பிற பிராந்திய நாடுகளின் முதலீட்டு வாய்ப்புக்களினைப் பரிசீலிப்பர்.
- முதலீட்டாளர்களுக்குச் சொத்துக்களினை விற்பனை செய்தல், முதலீட்டாளர்களின் நம்பிக்கையினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழலொன்றினை உருவாக்குவதற்கு அரசாங்கக் கொள்கைகள் தொடர்பிலான தெளிவான புரிந்துணர்வு முக்கியமானதாகும்.

2.2.6 பாரிய கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டம்

- செயற்திட்டத்தின் பிரதான ஒப்பந்தக்காரரான வரையறுக்கப்பட்ட சைனா காபர் பொறியியலாளர் நிறுவனத்திக்குக் கொடுப்பனவு செய்யவுள்ள சகல நிலுவைப் பணத்தினையும் கொடுப்பனவு செய்து நிறைவு செய்தல்.
- அறுவக்காலு செயற்திட்டப் பகுதியிலிருந்து உவர் நீரேரிக்கு நிர்மாணிப்பதற்குள்ள மழை நீர் வடிகாலுக்கு பொதுமக்கள எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில் முறையான மழைநீர் திட்டமொன்றினை அமைத்தல்.

2.3 எதிர்கால இலக்குகள்

2.3.1 முன்னை நாள் நகர அபிவிருத்திகழிவுகளினை அகற்றுதல் மற்றும் சமூகச் , சுத்திகரிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

- நகர அபிவிருத்தி மற்றும் நடைபாதை செயற்திட்டங்களினை உள்ளடக்கி தற்போது இடம்பெற்றுவரும் கடந்த வருடங்களில் ஒப்பநதங்களினை வழங்கிய செயற்திட்டங்களினைக் கண்காணித்தல் மற்றும் உரிய அங்கீகாரங்களினை வழங்குதல்.
- முந்தைய ஆண்டுகளில் நிறைவு பெற்ற செயற்திட்டங்களின் தக்கவைப்பு நிதியினை விடுவிப்பதற்கு அங்கீகாரங்களினை வழங்குதல்.

2.3.2 நகர அபிவிருத்தி அதிகார சபை

- 2023 ஆம் ஆண்டினுள் 44 அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டினுள் 40 அபிவிருத்தித் திட்டங்கள் என்றவாறு இவ் இருவருடங்களினுள்ளும் 84 அபிவிருத்தித் திட்டங்கள் வர்த்தமானியிடப்பட்டு நிறைவு பெறுதல்.
- நிறுவனத்தின் நிதி நிலையினை மேம்படுத்துவதற்கு, தேவையான முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகளினை முன்னெடுத்தல், நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள நிறுவனத்திற்குச் சொந்தமான காணிகளினை, பிரத்தியேகப் பிரிவுடன் இணைந்து அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றினை அமுலாக்குதல். மேலும், தற்போது நிறுவனத்திற்கு வருமானம் கிடைக்கும் முறையினை வலுவூட்டி அவ்வருமானத்தினை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பெற்றுக் கொள்ளுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- வீட்டுச் செயற்திட்டங்கள் உட்பட அமுலாக்கப்பட்டுவரும் சகல செயற்திட்டங்களினையும் சரியான நேரத்திற்கு உரிய இலக்குகளினை நோக்கி செயற்படுத்துதல்.
- அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கட்டமைப்பின் பிரகாரம் சகல ஊழியர்களினையும் அவர்களுக்குப் பொருத்தமான சேவை மற்றும் சம்பளத் திட்டங்களின் கீழ் அமர்த்துதல்.

- பொதுமக்களுக்கு விளைத்திறன் மற்றும் நட்புனான சேவையினை வழங்குவதற்கு ஏற்றவாறு நிறுவனம்சார் திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களினைத் தயாரித்தல் மற்றும் அவற்றிற்குப் பொருத்தமான உத்தயோகத்தர்களினை நியமித்து அப்பிரிவுகளினை வலுவூட்டுதல்.
- ஊழியர்கள் தொடர்பிலான பயிற்சி வேலைத்திட்டங்கள், நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள், விளையாட்டுக்கள் மற்றும் பிற திறன்களினை வளர்க்கக்கூடிய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதனூடாக விளைத்திறன், திறமை, தரமான ஊழியர் அபிவிருத்தியொன்றினை நிறுவனத்தினுள் உருவாக்குதல்.
- இலங்கையின் பௌதிக அபிவிருத்திக்காக பங்களிப்பினை நல்கிய நிறுவனங்களுக்கிடையே முன்னணி நிறுவனமாக மாறுதல்.

- **நடுத்தர வருமானங்களினைப் பெறுபவர்களுக்கான வீடமைப்புச் செயற்திட்டம்**

- பன்னிப்பிட்டிய – வீர மாவத்தை மற்றும் கொட்டாவ –குலசெவண வத்த வீடமைப்பு செயற்திட்டங்களின் நிர்மாணிப்புப் பணிகள் நிறைவு பெற்று பயனாளிகளுக்குக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பொரள்ள – எலியட் பிரதேசம், மாலபே, அனுராதபுரம், மாகும்புர, பொரளஸ்கமுவ, ஒறுகொடவத்த, பேலியகொட போன்றவற்றிற்கிடையே இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களின் நிர்மாணிப்புச் செயற்பாடுகள் புதிய மூலோபாயத்தினூடாக மீளவும் ஆரம்பித்தல்.
- (வீட்டு விற்பனையிலிருந்து) ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 1.5 இலக்கிடப்பட்ட வருமானத்தினைப் பெறுவதை இலக்கிடுதல்.
- அங்கொட ஓவல் வியூ வீடமைப்புச் செயற்திட்டத்தின் பயனாளிகளுக்கு சான்றிதழ்களினை (உறுதிகள்) வழங்கி நிறைவு செய்தல்.

2.3.3 நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை

- இலங்கையின் அபிவிருத்திக்காக வாழ்வின் பெரும்பகுதியினை அர்ப்பணித்துள்ள அரச, பகுதியளவிலான அரச ஊழியர்கள், தொழில் வல்லுனர்கள் எந்நேரமும் திருப்தியுடன் ஓய்வெடுப்பதற்கு பொருத்தமான சூழலொன்றினை உருவாக்கி கிராம நகர எண்ணக்கருவின் கீழ் செயற்திட்டத்தினைத் திட்டமிட்டு அவர்களினைக் கௌரவத்துடன் வாழக்கூடியவாறு இணை வீடுகள் அல்லது தனி வீடுகளினை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இங்கு விசேடமாக இலங்கையின் புகழினை உலகிற்குக் கொண்டு சென்ற மூத்த பிரஜைகளுக்கு உரிய பாராட்டுக்களினை வழங்கும் நோக்குடன் இந்நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதனை, முதியோர் இல்ல எண்ணக்கருவினையும் தாண்டி சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களாக அறிமுகப்படுத்தலாம் என்பதுடன் அவர்களின் ஓய்வூதியம் மற்றும் சேமலாபப் பயன்களுடன் அந்நிதியினை முகாமை செய்வதற்குத் தேவையான உதவியினை அவர்களுக்கு வழங்கப்படும்.
- பொதுத் திறைசேரிக்குச் சுமையொன்றாக இல்லாதவாறு அரச – பிரத்தியேக மூலோபாயத்தின் கீழான வருமானத்தினைப் பெருக்கும் செயற்திட்டங்களாக நடுத்தர வர்க்க குடும்பங்களுக்கு தீர்வுகளினை வழங்கும் சுயாதீன அமைப்பொன்றாக எதிர்வரும் செயற்பாடுகளினை நிறைவு செய்வதற்கு இலக்கிடப்பட்டுள்ளது.

2.3.4 கொண்டமோனியம் முகாமைத்துவ அதிகார சபை

- வாடிக்கையாளர்களுக்கு மிகவும் துரித சேவையொன்றினை வழங்குவதற்கு நிறுவனம்சார் செயற்பாடுகள் மற்றும் நிருவாகச் செயற்பாடுகளினை கணனிமயப்படுத்துதல்.
- கொண்டமோனியச் சொத்துக்கள் தொடர்பில் புதிய ஒழுங்கு விதிகளினை அறிமுகப்படுத்தி அவற்றினை வர்த்தமானியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சட்டத் திருத்த அங்கீகாரத்தினை விரைவுபடுத்தி துறையில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளினை வழங்குதல்.
- நாடுபூராவுமுள்ள கொண்டமோனியச் சொத்துக்கள் தொடர்பிலான நாடளாவிய மக்கள் தொகை கணக்கெடுப்பினை ஆரம்பித்தல்.

2.3.5 வரையறுக்கப்பட்ட செலந்திவ முதலீடு

கொழும்பு கிராண்ட் கயட்

- விடுதியின் பகுதிகள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் 100% ஐ கிராண்ட் கயட்டுக்குப் பகிர்ந்தளிப்பதுடன் செயலாக்குதல்.
- தீர்வொன்றாக கட்டம் I இன் கீழ் 220 அறைகளினை நிர்மாணிக்கும் செயற்பாடுகளினைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான மீதி ரூபா. 4 பில்லியன் நிதியினை பிரதான பங்குதாரரான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து நிதியுதவியினைப் பெறுதல்.

கிராண்ட் ஒரியண்டல் விடுதி மற்றும் யோர்க் வீதியின் கட்டிடம்

- 100 % விநியோகிப்பதற்கு செய்தித் தாள் அறிவிப்பினூடாக புதிய ஏல முன்மொழிவுகளுக்கு அழைப்பு.

கொழும்பு கில்டன் மற்றும் விளையாட்டு நிலையம்

- 100 % விநியோகிப்பதற்கு செய்தித் தாள் அறிவிப்பினூடாக புதிய ஏல முன்மொழிவுகளுக்கு அழைப்பு.
- 253 விருந்தினர் அறைகளின் சீரமைப்புச் செயற்பாடுகள் பூர்த்தி.
- இலங்கை உணவகத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவு.

2.3.6 பாரிய கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டம்

- 2023 ஆம் ஆண்டினுள் வரையறுக்கப்பட்ட சைனா காபர் பொறியியலாளர் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்வதற்குள்ள சகல நிலுவைப் பணத்தினைக் கொடுப்பனவு செய்து, செயற்திட்டத்தின் பணிகளினை நிறைவு செய்து தொழிற்பாட்டு நடவடிக்கைகளினை ஆரம்பித்தல்.

.....

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

டப்ளியு. எஸ். சத்யானந்த
செயலாளர

2023.02.28

அத்தியாயம் 03

3. 2022 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதி செயற்திறன்

3.1 நிதி செயற்திறன் கூற்று

தயவு செய்து பக்க இல 22 பார்கவும்

3.2 நிதி நிலபரம் தொடர்பிலான கூற்று

தயவு செய்து பக்க இல 23 பார்கவும்

3.3 காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று

தயவு செய்து பக்க இல 24 பார்கவும்

3.4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

தயவு செய்து பக்க இல 25 பார்கவும்

3.5 வருமானங்களினைத் திரட்டும் செயற்திறன்

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்துவதன் செயற்திறன் இறுதி ஒதுக்கீடு தொகையின் % என ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டது

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.7 நி.பி. 208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவர் ஒருவராக இத் திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.8 நிதி அல்லாத சொத்துக்களினை அறிக்கையிடுவதன் செயற்திறன்

தயவு செய்து பக்க இல 27 பார்கவும்

3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

தயவுசெய்து இணைப்பு 01 பார்க்கவும்

அத்தியாயம் 04

4. செயற்திறன் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு)

விசேடமான குறிகாட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளினை நிர்மாணித்தல்.	-	-	29%
சுகாதாரக் குப்பை மேட்டினை அமைத்தல்.	-	-	60.4%
நகரங்களில் பழக்கமான உட்கட்டமைப்பு வசதிகளினை அமைத்தல் .	-	76%	-
ஆரம்ப அனுமதிக் கடிதங்களினை வழங்குதல்.	106%	-	-

அத்தியாயம் 05

5. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை (SDG) நிறைவேற்றுவதன் செயற்திறன்

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

இலக்கு/நோக்கங்கள்	இலக்குகள்	சாதனைக் குறிகாட்டிகள்	இன்றுவரை அடையப்பட்ட முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%-100%
1. நகரங்கள் மற்றும் குடியிருப்புகளை சரியான, பாதுகாப்பான, வலுவான மற்றும் நிலையானதாக மாற்றுதல்.	11.1 - 2030 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் போதுமான குறைந்த ,பாதுகாப்பு விலையில் பெற்றுக் ,கொள்ளக்கூடிய வீடுகள் அடிப்படை சேவைகளுக்கான அணுகலினை உறுதி செய்தல் மற்றும் குடிசை .வீடுகளினை வழங்குதல்	நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான கட்டுமானச் செயற்திட்டங்களினை வெளியீடு	29%		
	11.06 - 2030 ஆம் ஆண்டளவில் ,குறிப்பாக காற்றின் தரம் நகர மற்றும் பிற கழிவு முகாமைத்துவம் உட்பட நகரினால் ஏற்படும் தனிநபர் பாதகமான சுற்றுச்சூழல் .குறைத்தல் பாதிப்பினைக்	சுகாதார முறையிலான குப்பை மேடுகளினை அமைத்தல்.		60.4%	
	11.7 – 2030 ஆண்டளவில் குறிப்பாக பெண்கள் ,குழந்தைகள் , முதியோர்கள் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கு ,பாதுகாப்பான அனைவரினையும் உள்ளடக்கும் வகையில் இலகுவில் அணுகக்கூடியவாறு பசுமைமையான பொதுவான .இடத்தினை வழங்குதல்	நகரங்களில் பழக்கமான உட்கட்டமைப்பு வசதிகளினை அமைத்தல்.			106%

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைவதில் சாதனைகள் மற்றும் சாவல்கள்

பிரிவு	இலக்குகள்	சாதனைகள்	சவால்கள்
வீட்டு வசதி	11.1 – 2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் போதிய பாதுகாப்பான மலிவான விலைக்குப் பெற்றுக் கொள்ளக்கூடிய வீடுகள், அடிப்படை சேவைகளுக்கு அணுகலினை உறுதி செய்தல் மற்றும் குடிசை வீடுகளினை மேம்படுத்துதல்.	- நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட வீட்டு அலகுகளினை, வெளிநாட்டவர்களுக்கு டொலரினூடாக ஒதுக்குவதற்கு வாய்ப்பினை உருவாக்குதல். - அதனூடாக, 2022 ஆம் ஆண்டு நிறைவின்போது அ.டொ. 5 இலட்சம் வருமானத்தினை உழைத்தல். - நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினூடாக நகரப் பிரதேசங்களின்வீடமைப்புச் செயற்திட்டங்களினை செயற்திட்டங்களினை செயலாக்குவதற்கு காணிகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வேலையொழுங்கொன்றினை ஆரம்பித்தல்.	- நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவே நிறுத்துவதற்கு நேரிட்ட நடுத்தர வருமான வீடமைப்புச் செயற்திட்டங்களினை புதிய மூலோபாயத்தினூடாக மீளவும் ஆரம்பித்தல். - நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பன்னிப்பிட்டிய – வீர மாவத்தை மற்றும் கொட்டாவ – குல செவண வத்த நடுத்தர வருமான வீடமைப்புச் செயற்திட்டங்களின் நிர்மாணிப்புப் பணிகளினை விரைவில் நிறைவு செய்தல்.
திண்மக் கழிவு	11.6 – 2030 ஆம் ஆண்டளவில் விசேடமாக காற்றின் தரம், நகர மற்றும் பிற கழிவுகளினை முகாமை செய்தல் உட்பட நகரங்களின் காரணமாக இடம்பெறும் தனிநபர் பாதகமான சுற்றுச்சூழல் பாதிப்புக்களினைக் குறைத்தல்.	- செயற்திட்டத்தின் நிர்மாணிப்புச் செயற்பாடுகளில் 90% பௌதிக முன்னேற்றமொன்றினை எட்டுதல். - 94 கழிவுக் கொள்கலன் பெட்டிகளினைக் கொள்வனவு செய்தல்	- ஒப்பந்தக்காரரின் (CHEC -SMEDRIC) நிலுவைப் பணம் கொடுப்பனவு செய்யாமையினால் 2022 யூன் 30 ஆந் திகதி தொடக்கம் ஒப்பந்தக்காரரினால் தற்காலிகமாக நிர்மாணிப்புச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டமையினால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளினை எட்டுவதற்கு இயலாதுபோகுதல்.
நகர அபிவிருதி	11.7- 2030 ஆம் ஆண்டளவில் விசேடமாக பெண்கள், குழந்தைகள்,முதியோர்கள் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கு பாதுகாப்பான, அனைவரினையும் உள்ளடக்கிய மற்றும் இலகுவில் நுழையக்கூடிய பொதுவான பசுமையான இடங்களினை வழங்குதல்.	- நகர அபிவிருத்தி பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் தொடர்பில் 09 அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வர்த்தமானியில் வெளியிடுதல். - 2022 ஆம் ஆண்டில் நகர உட்கட்டமைப்பு வசதிகளினை அபிவிருத்தி செய்யும் 156 செயற்திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளது.	- நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் - 19 தொற்றுநோய் நிலை செயற்திட்டங்களின் முன்னேற்றத்தின் மீது தாக்கங்களினை ஏற்படுத்துதல். - கட்டிட மூலப்பொருட்கள் பற்றாக்குறை, மூலப்பொருட்களின் விலைகள் அதிகமாக உயர்வடைதல் மற்றும் ஊழியப்படை பற்றாக்குறை.

அத்தியாயம் 06

6. மனித வளத் தோற்றுவாய்

6.1 ஆளணி முகாமைத்துவம்

#	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடங்கள்/ (மேலதிகம்)
சிரேஸ்ட நிலை	33	24	09
மூன்றாம் நிலை	05	01	04
இரண்டாம் நிலை	77	102	36
ஆரம்ப நிலை	34	27	07

6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகையானது நிறுவனத்தின் செயற்திறனினை எவ்வாறு பாதித்துள்ளது

தற்போதுள்ள மனித வளப் பற்றாக்குறைக்கு பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

சிரேஸ்டநிலைப் பதவிகள் பற்றாக்குறை தொடர்பில், கடமைகளினை ஈடுசெய்வதற்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- உயர் பதவிகளின் பற்றாக்குறையை ஈடுகட்ட அதிகாரிகள் நியமனம்.
- இரண்டாம்நிலை பதவிகள் பற்றாக்குறை தொடர்பில்பட்டதாரிப் பயிலுனர்கள் , ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
- ஆரம்பநிலைப் பதவிகள் பற்றாக்குறை தொடர்பில், பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

6.3 மனித வள அபிவிருத்தி

#	நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டத்தின் காலவரையறை	ஒட்டுமொத்த முதலீடு (ரூ.' 000)		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/வெளிநாடு)	வெளியீடு/பெற்றுக் கொண்ட அறிவு
				உள் நாடு	வெளி நாடு		
01	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி சேவை நிலையத்தினை விளைத்திறனாக மேம்படுத்துதல்.	04	தினங்கள் 2	-	-	உள்ளூர்	தரமான பணிச்சூழலினை முன்னெடுத்துச் செல்லுதல்.
02	அரச உத்தியோகத்தர்களின் சம்பளங்களினைத் தயாரித்தல்	04	தினங்கள் 1	-	-		அரச உத்தியோகத்தர்களின் சம்பளங்களினைத் தயாரித்தல்
03	உதவிப் பதவியணியினர் தொடர்பிலான கொள்முதல் நடைமுறை	01	தினங்கள் 2	-	-		கொள்முதல் நடைமுறை மற்றும் நடைமுறைப் பயன்பாடு
04	நவீனமயப்படுத்தப்பட்ட செலவு மைய மூலோபாயங்களினை அறிமுகப்படுத்துதல்	15	1 1/2 மணி நேரம்	-	-		நவீனமயப்படுத்தப்பட்ட செலவு மைய மூலோபாயங்களினை அறிமுகப்படுத்துதல் தொடர்பானது.

- **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி சேவை நிலையத்தின் விளைத்திறனினை மேம்படுத்துதல்.**

இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக Ms Word, Ms Excel மற்றும் Google Apps போன்ற கணனி மென்பொருள்கள் தொடர்பில் அறிவினை வளர்த்தல் மற்றும் அதனூடாக அமைச்சின் அன்றாடக் கடமைச் செயற்பாடுகளினை வினைத்திறனாக முன்னெடுத்தல் எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல தமது அன்றாடக் கடமைச் செயற்பாடுகள் தொடர்பில் தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதனூடாக அதன் தரத்தினை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளனது.

- **அரச உத்தியோகத்தர்களின் சம்பளங்களினைத் தயாரித்தல்**

இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களின் சகல சம்பளம் தொடர்பில் புரிந்துணர்வினை வளர்த்தல் மற்றும் அதனூடாக நிறுவனம்சார் செயற்பாடுகளினைச் சரியாக முன்னெடுத்துச் செல்லதுதல் நோக்கமாகவுள்ளது. மேலும், இந்நிகழ்ச்சித் திட்டங்கள், அரச உத்தியோகத்தர்களின் சம்பளக் கட்டமைப்பு, வருடாந்த சம்பள உயர்வுக் கொடுப்பனவுகள், நிராகரிப்பு முறைகள், சம்பள மீளமைப்பு, பதிற்கடமைச் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்வில் உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர்.

- **உதவி பதவியணியினர் தொடர்பிலான கொள்முதல் நடைமுறை**

இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக உத்தியோகத்தர்களின் அரச/மாகாண சபைகள் போன்ற நிறுவனங்களின் கொள்முதல் நடைமுறையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகள், சேவைகள், விநியோகங்கள், வரிகள், விற்பனைகள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் செயற்பாடுகளின் ஒழுங்கு முறைகள் தொடர்பாகவும், விளைத்திறன் தொடர்பாகவும் மற்றும் பொறுப்புத் தொடர்பிலான அறிவு மற்றும் திறன்களினை வளர்ப்பது இலக்கிடப்பட்டுள்ளது.

- **நவீனமயமாக்கப்பட்ட செலவு மைய முறைகளின் அறிமுகம்**

இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் அமைச்சினதும் மற்றும் அதன் கீழ் செயலாக்கப்படும் நிறுவனங்களினதும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் அரச செலவுகளினை முகாமை செய்தல், அரச செலவுகளினை பாதீட்டு வரையறையினூடாக முன்னெடுத்துச் செல்லுதல், அரச செலவுகள் குறையும் வகையில் நடவடிக்கைகளினைச் செயற்படுத்தல், சேவைத் தரத்தினை மேம்படுத்துதல் போன்ற விடயப்பரப்புக்கள் தொடர்பில் உத்தியோகத்தர்களின் அறிவினை வளர்த்தல் இலக்கிடப்பட்டுள்ளது.

அத்தியாயம் 07

7. இணக்கப்பாட்டு அறிக்கை

#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலபரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமான விளக்கம்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
1	**பின்வரும் நிதிக் கூற்றுக்கள்கணகுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன/**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	இணக்கம்	-	-
1.2	அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு	இணக்கம்	-	-
1.3	வர்த்தக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு(வணிக முற்பணக் கணக்கு)	தொடர்பற்றது	-	-
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு		-	-
1.5	விசேட முற்பணக் கணக்கு		-	-
1.6	பிற		-	-
2	**புத்தகங்கள் மற்றும் ஏடுகளினைப் பராமரித்தல் (445 .பி.நி)**			
2.1	பொது நிர்வாக சுற்றுநிரூபம் 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்து பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்	இணக்கம்	-	-
2.2	ஆளுக்குரிய வேதனாதி ஏடு/ஆளுக்குரிய வேதனாதி அட்டைகளினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்	இணக்கம்	-	-
2.3	கணக்காய்வு விசாரணை ஏட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்	இணக்கம்	-	-
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் ஏட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்	இணக்கம்	-	-
2.5	சகல மாதாந்த கணக்குப் பொழிப்புக்களினை (CIGAS) தயாரித்து குறிப்பிட்ட தினத்தில் பொதுத் திறைசேரிக்கு முன்வைத்தல்	இணக்கம்	-	-
2.6	காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்	இணக்கம்	-	-
2.7	பொருட் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்	இணக்கம்	-	-
2	**புத்தகங்கள் மற்றும் ஏடுகளினைப் பராமரித்தல் (445 .பி.நி)**			
2.8	இருப்புப் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்	இணக்கம்	-	-
2.9	இழப்பு நட்டம் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்	இணக்கம்	-	-
2.10	பொறுப்புக்களின் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்	இணக்கம்	-	-
2.11	அடிக்கட்டைப் புத்தகங்களின் (GA-N20) பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்	இணக்கம்	-	-
3	**நிதி முகாமை தொடர்பிலான செயற்பாடுகளினை ஒப்படைத்தல் (நி.பி.135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்தினுள் பகிரப்படுதல்	இணக்கம்	-	-
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை தொடர்பில் நிறுவனத்தினுள் விழிப்புணர்வூட்டப்பட்டிருத்தல்	இணக்கம்	-	-

#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலபரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமான விளக்கம்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்படுதல்	இணக்கம்	-	-
3.4	11.05.2014 தேதியிட்ட பொதுக் கணக்குச் சுற்றறிக்கை எண். 171/2004 இன் படி அரசாங்க ஊதிய மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துவதில் கணக்காளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிதல்.	இணக்கம்	-	-
4	**வருடாந்த திட்டங்களினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்	இணக்கம்	-	-
4.2	வருடாந்தக் கொள்முதல் திட்டத்தினைத் தயாரித்தல்	இணக்கம்	-	-
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்	இணக்கம்	-	-
4.4	வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்து தேசியப் பாதீட்டுத் திணைக்களத்திற்கு (NBD) குறிப்பிட்ட தினத்தில் முன்வைத்தல்	இணக்கம்	-	-
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்றினை குறிப்பிட்ட தினத்தில் திறைசேரி செய்றபாடுகள் திணைக்களத்திற்கு முன்வைத்தல்	இணக்கம்	-	-
5	**கணக்காய்வு விசாரணைகள்**			
5.1	கணக்காய்வாளர் அதிபதியினால் விதிக்கப்பட்ட தினத்தில் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் மறுமொழிகளினை வழங்கியிருத்தல்	இணக்கம்	-	-
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134(2) DMA/1-2019 இன் பிரகாரம் வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்	இணக்கம்	-	-
6.2	ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலப்பகுதியினுள் விடையளித்திருத்தல்	இணக்கம்	-	-
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளினை முகாமைத்துவம் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல்	இணக்கம்	-	-
6.4	நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளினை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல்	இணக்கம்	-	-
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA சுற்றுநிரூபம் 1-2019 இன் பிரகாரம் ஆகக் குறைந்த வகையில் கணக்காய்வு மற்றும் 4 முகாமைத்துவக் குழுக் கூட்டங்களாவது உரிய வருடத்தினுள் முன்னெடுக்கப்பட்டிருத்தல்	இணக்கம்	-	-
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	01/2017 என்ற இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றிநிரூபத்தின் 07 வது அத்தியாயத்தின் பிரகாரம் சொத்துக்களினைக் கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பிலான தகவல்களினை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு முன்வைத்திருத்தல்	இணக்கம் (வாகனங்களுக்கு)	-	-

#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலபரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமான விளக்கம்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
8.2	மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் 13 வது அத்தியாயத்தின் பிரகாரம் அச் சுற்றுநிரூபத்தின் ஏற்பாடுகளினை அமுலாக்குவதை ஒருங்கிணைப்பதற்கு பொருத்தமான இணைப்பு உத்தியோகத்தர் ஒருவரினை நியமித்து அவ் உத்தியோகத்தர் தொடர்பிலான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருத்தல்	இணக்கம்	-	-
8.3	அரச நிதிச் சுற்றுநிரூப இலக்கம் 05/2016 இன் பிரகாரம் , பொருட் கணக்கெடுப்பு ஆய்வுகளினை முன்னெடுத்து உரிய அறிக்கைகளினை குறிப்பிட்ட தினத்தன்று கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல்	இணக்கம்	-	-
8.4	வருடாந்த பொருட் கணக்கெடுப்பு ஆய்வில் வெளிக் கொணரப்பட்ட மேலதிகம் ,பற்றாக்குறை மற்றும் பிற பரிந்துரைகளினை ,சுற்றுநிரூபத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் முன்னெடுக்கப்பட்டிருத்தல்	இணக்கம்	-	-
8.5	முதிர்வடைந்த பொருட்களினை அகற்றுதல் நி .பி.772 இன் பிரகாரம் முன்னெடுத்திருத்தல்	இணக்கம்	-	-
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழாம் வாகனங்கள் தொடர்பில் தினசரி ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் பொழிப்பு அறிக்கைகளினைத் தயாரித்து குறிப்பிட்ட தினத்தில் கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்தல்	இணக்கம்	-	-
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்களினை கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றுதல்	இணக்கம்	-	-
9.3	வாகனப் பதிவுப் புத்தகங்களினைப் பேணும்போது அவற்றினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்தல்	இணக்கம்	-	-
9.4	சகல வாகன விபத்துக்கள் தொடர்பிலும் நி.பி. 103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கம்	-	-
9.5	2016.12.29 ஆந் திகதிய 2016/30 என்ற இலக்க பொது நிர்வாக சுற்றுநிரூபத்தின் 3.1 பந்தியில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீளவும் பரீட்சித்தல்	இணங்காமை	நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடி காரணமாக சகல வாகனங்கள் தொடர்பிலும் எரிபொருள் எரிப்புச் சோதனையினை முன்னெடுப்பதற்கு முடியாமை.	-
9.6	குத்தகை வாகனங்களின் உரித்துப் பதிவுப் புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படுதல்.	இணக்கம்	-	-
10	**வங்கிக் கணக்கினை முகாமை செய்தல்.**			
10.1	குறிப்பிட்ட தினத்தன்று வங்கி இணக்கக் கூற்றுக்களினைத் தயாரித்து உறுதிப்படுத்தி அவற்றினைக் கணக்காய்வுக்கு முன்வைத்திருத்தல்	இணக்கம்	-	-
10.2	மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னரான ஆண்டுகளிலிருந்து முன் கொண்டுவரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	இணக்கம்	-	-
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்களில் வெளிக்கொணரப்பட்ட மற்றும் இணக்கஞ் செய்யவேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அம் மீதிகளினை ஒரு மாதக் காலப்பகுதியினுள் தீர்த்தல்	இணக்கம்	-	-

#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலபரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமான விளக்கம்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**			
11.1	செய்யப்பட்ட ஏற்பாடுகளினை அவற்றின் வரையறையினை மீறாத வகையில் செலவுகளினை ஈடுசெய்தல்	இணக்கம்	-	-
11.2	நி.பி. 94(1) இன் பிரகாரம் செய்யப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்பட்ட பின்னர் ஆண்டு இறுதியின் மீதி ஒதுக்கீடுகளின் வரையறையினைத் தாண்டாத வகையில் பொறுப்புக்களுக்கு வருதல்	இணக்கம்	-	-
12	**அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்**			
12.1	கட்டுப்பாடுகளுக்கு இணங்குதல்	இணக்கம்	-	-
12.2	நிலுவையிலுள்ள கடன் மீதிகள் தொடர்பில் காலப் பகுப்பாய்வொன்றினை முன்னெடுத்திருத்தல்	இணக்கம்	-	-
12.3	ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையிலுள்ள கடன் மீதியினைத் தீர்த்திருத்தல்	இணக்கம்	-	-
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	தாமதமான வைப்புத் தொடர்பில் நி .பி.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருத்தல்	இணக்கம்	-	-
13.2	பொது வைப்புத் தொடர்பிலான வைப்புக் கணக்கினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்திருத்தல்	இணக்கம்	-	-
14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியின் காசுப் புத்தகத்தின் மீதியினை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுதல்	இணக்கம்	-	-
14.2	நி.பி .371 இன் பிரகாரம் தற்செயலான இடைக்கால வழங்கல் அத்தகைய பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படுதல்	இணக்கம்	-	-
14.3	நி.பி .371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையினை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கம்	-	-
14.4	கட்டுநிதிக் கணக்கு மீதியினைதிறைசேரிப் , புத்தகத்துடன் மாதாந்தம் ஒப்புரவு செய்தல்	இணக்கம்	-	-
15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய விதிமுறைகளுக்கிணங்க திரட்டப்பட்ட வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்துதல் இடம்பெற்றிருத்தல்	இணக்கம்	-	-
15.2	திரட்டப்பட்டிருந்த வருமானத்தினை வைப்புக் கணக்குக்கு வரவிடாது நேரடியாக வருமானத்திற்கு வரவிட்டிருத்தல்	இணக்கம்	-	-
15.3	நி .பி.176 இன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கைகளினை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல்	இணக்கம்	-	-
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வரையறையினுள் பதவியணியினை முன்னெடுத்தல்	இணங்காமை	அரச கொள்கைகள் தீர்மானத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொது நிர்வாக அமைச்சினூடாக அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளதால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை தாண்டப்பட்டுள்ளது.	-

#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலபரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமான விளக்கம்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
16.2	பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கு கடமைப் பட்டியல்கள் எழுத்துமூலம் வழங்கப்பட்டிருத்தல்	இணக்கம்	-	-
16.3	20.09.2017 ஆந் திகதிய MSD சுற்றுநிரூப இலக்கம் 04/2017 இன் பிரகாரம் சகல அறிக்கைகளினை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல்	இணக்கம்	-	-
17	**பொதுமக்களுக்குத் தகவல்களினை வழங்குதல்.**			
17.1	தகவல்கள் அறிந்துகொள்ளும் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல்களினை வழங்கும் ஆவணமொன்று நாளதுவரைப்படுத்தப்பட்டு முன்னெடுத்தல்	இணக்கம்	-	-
17.2	நிறுவனம் தொடர்பிலான தகவல்கள் அதன் இணையத் தளத்தினூடாக வழங்கப்படுதல் , இணையத்தளத்தினூடாக அல்லது மாற்று வழிகளினூடாக நிறுவனம் தொடர்பில் பொதுமக்களின்புகார்கள்குற்றச்சாட்டுக்களினை / வெளிப்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருத்தல்	இணக்கம்	-	-
17.3	தகவல்களினை அறிந்துகொள்ளும் சட்டத்தின் வது 08 வது பிரிவின் பிரகாரம் வருடமொன்றுக்கு 10 மற்றும் இரு தடைவை அல்லது வருடமொன்றுக்கு ஒரு தடைவை அறிக்கைகள்முன்வைக்கப்பட்டிருத்தல்	இணக்கம்	-	-
18	**பிரஜைகள் பட்டயத்தினை அமுலாக்குதல்.**			
18.1	05/2008 மற்றும் 05/2018 (1) என்ற இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றுநிரூபம்	இணக்கம்	-	-
18.2	அச்சுற்றுநிரூபத்தின் .2.3பந்தியின் பிரகாரம் பிரஜைகள்பயனாளிகள் பட்டயத்தினைத் தயாரித்தல் / மற்றும் அமுலாக்கும்செயற்பாடுகளினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பில் நிறுவனங்களினூடாக மூலோபாயமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல்	இணங்காமை	எழுத்துமூல ஆவணமொன்று தயாரிக்கப்படாவிட்டாலும், அமைச்சினால் வழங்கப்பட வேண்டிய சேவைகள் வினைத்திறனாகவும் மற்றும் தொடர்ச்சியாகவும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	-
19	**மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிரூப இலக்கம் 02/2018 இணைப்பு 02 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு மனிதவளத் திட்டமொன்று .தயாரிக்கப்பட்டிருத்தல்	இணக்கம்	-	-
19.2	பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணிநேரப் பயிற்சி ஆண்டுக்கு மணி 12 நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்குறிப்பிட்ட மனித வளத் திட்டத்தினுள் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்	இணங்காமை	ஒதுக்கீடுகளினை வரையறுத்தல், போக்குவரத்துச் சிக்கல்கள் மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினைக் கருத்திற் கொண்டு உத்தியோகத்தர்களினைக் கடமைக்கு அழைப்பது வரையறுக்கப்பட்டமையினால் சகல உத்தியோகத்தர்களுக்கும் ஆகக்குறைந்தது 12 மணித்தியாலத்திற்குக் குறையாத பயிற்சி வாய்ப்பொன்றினை வழங்குவதற்கு இயலாது போகுதல்.	-

#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலபரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமான விளக்கம்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
19.3	மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் இணைப்பு இல் 01 கொடுக்கப்பட்டுள்ள படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு அனைத்துப் பதவியணிக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம்கையெழுத்திடப்பட்டிருத்தல்	இணக்கம்	-	-
19.4	மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் 6.5 வது பந்தியின் பிரகாரம் மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல் , திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை திறன் விருத்தி நிகழ்ச்சித் ,மேம்படுத்துதல் திட்டங்களினை அமுலாக்குதல் தொடர்பில் பொறுப்புக்களினை ஒப்படைத்து மூத்த உத்தியோகத்தர் ஒருவரினை நியமித்தல்	இணக்கம்	-	-
20	**கணகாய்வுப் பந்திகளுக்குப் பதிலளித்தல்**			
20.1	கடந்த ஆண்டு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளினூடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீர் செய்யப்பட்டிருத்தல்	இணக்கம்	-	-

மனித வள முகாமைத்துவம், நிறுவனம்சார் செயற்பாடுகள், பயன்பாட்டுச் சேவைகளினைத் தொடர்ந்து முன்னெடுத்தல், தகவல் தொழில்நுட்ப வசதி சேவைகள் உட்பட நிர்வாகம் மற்றும் தொழிற்பாட்டுச் சேவைகளினை சிறந்த மட்டத்தில் முன்னெடுத்தல் நிர்வாகப் பிரிவின் நோக்கங்களாகும்.

மேலதிக நேரம் சேவையிலீடுபடும் சகல சாரதிகளுக்கும் வழங்கக்கூடிய ஆகக்கூடிய மேலதிக நேரக் கொடுப்பனவுகளினை வழங்குவதற்கும், போக்குவரத்துச் செலவுக் கொடுப்பனவுகளினை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் கௌரவ இராஜாங்க அமைச்சரின் பதவியணியினால் முன்வைக்கப்பட்டுள்ள மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பிலான 294 உறுதிச்சீட்டுக்கள், பயணக் கொடுப்பனவுகள் தொடர்பிலான 105 உறுதிச்சீட்டுக்கள் மற்றும் விடுமுறை தினச் சேவைக்காக முன்கைகப்பட்டிருந்த 30 உறுதிச் சீட்டுக்கள் தொடர்பிலும் கொடுப்பனவினைச் செய்வதற்கு அங்கீகாரம் நிர்வாகப் பிரிவினால் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகளினைச் செய்து கொடுப்பதற்கு பொது வாகனங்களுக்கு, 280 க்கும் அதிக தடைவைகள் எரிபொருள் கட்டளைகளினை முன்வைத்து எரிபொருளினைப் பெற்றுக் கொள்ளுதல், வாகனங்களினைச் சரியான முறையில் பராமரித்து வினைத்திறனாக முன்னெடுக்கக்கூடியவாறு அமைச்சுக்குச் சொந்தமான 16 வாகனங்களின் காலச் சேவைகள் சரியானவாறு இடம்பெற்றுள்ளதுடன், அறிக்கையிடப்பட்டுள்ள சகல வாகனங்களின் பழுதுபார்ப்புச் செயற்பாடுகளினை முன்னெடுப்பதற்கான நடவடிக்கை நிர்வாகப் பிரிவினால் எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல 2022 ஆம் ஆண்டுக்கான வாகன விபத்துக்கள் 02 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், ஒரு வாகனத்திற்கான சகல ஆரம்ப விசாரணைகளும் நிறைவு பெற்று முறைசார் விசாரணைக்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மற்றய வாகன விபத்து 2022.12.29 ஆந் திகதியன்று இடம்பெற்றுள்ளதால் அது தொடர்பிலான ஆரம்ப விசராணை இதுவரையில் இடம்பெற்றுவருகிறது.

மேலும், இவ்வமைச்சின் விடயப் பரப்புடன் தொடர்பில் முன்வைக்கப்பட்டிருந்த சகல பொதுமக்கள் கோரிக்கைகளும் உரிய நிறுவனங்களுக்கு மேல் நடவடிக்கை எடுப்பதற்கு முன்வைக்கப்பட்டு அதன் முன்னேற்றத்தினை ஒருங்கிணைத்தல், தகவல் அறியும் சட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள 12 தகவல் அறியும் கோரிக்கைகள் மற்றும் மேன்முறையீட்டு விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல், அமைச்சுக்கு கிடைக்கப் பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்கள், நகர அபிவிருத்திப் பிரிவின் கீழுள்ள உரிய பிரிவுகள் மற்றும் நிறுவனங்களுக்கு முன்வைக்கும் செயற்பாடுகளினை ஒருங்கிணைத்தல், வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்களினை விழிப்புணர்வூட்டி விண்ணபங்கள் முன்வைக்கப்பட்ட சகல உத்தியோகத்தர்கள் தொடர்பிலுமான பயிற்சி வாய்ப்புக்களினை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கையினை எடுப்பதற்கு நிர்வாகப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. அமைச்சின் நிர்வாகப் பிரிவுக்கு, சாதாரணமான அஞ்சல் கடிதங்கள் மற்றும் பதிவு அஞ்சல் கடிதங்கள் போன்ற மூலோபாயங்களினூடாக கிடைக்கப் பெற்ற ஏறக்குறைய 8,243 கடிதங்கள் உரிய பிரிவுகளுக்கு தாமதிக்காது பகிர்ந்தளித்தல், அமைச்சின் விடயப்பரப்பு வேறுபடுவதன் பிரகாரம் சகல உத்தியோகத்தர்களினையும் முறைசார் வகையில் இணைப்புச் செய்தல், உரிய செயற்திறன் மதிப்பீடுகளினை முன்வைத்துள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் உரிய சம்பள உயர்வினை வழங்குதல், 02 உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறுவதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல், அனைத்துச் சேவைகளுக்குமான வருடாந்த இடமாற்றம் தொடர்பிலான கடமைகளினை முன்னெடுத்தல், உத்தியோகத்தர்களின் விடுமுறைகளினை நாளதுவரைப்படுத்துதல் மற்றும் வருடத்தின் சகல பிரத்தியேக் கடிதக் கோவைகளினை நாளதுவரைப்படுத்துவதற்கு நிர்வாகப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. 62 இடர் கடன் கொடுப்பனவு வேண்டுகோள் மற்றும் 01 ஆதனக் கடன் வேண்டுகோள் தொடர்பில் அங்கீகாரத்தினை வழங்குதல், 60 அக்ரகார காப்புறுதி வேண்டுகோள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் மற்றும் இதில் 75% பேர் பயன்களினைப் பெற்றிருத்தல், ஊழியர் சேமலாப நிதியப் பயனாளிகள் 19 பேர் தொடர்பில் பயன்களினைப் பெற்றுக்கொள்ளுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல். அமைச்சின் சகல உத்தியோகத்தர்களினையும் (153) நிகழ்நிலை

திட்ட அத்ரகார தரவுத் திட்டத்திற்கு நாளதுவரைப்படுத்தி "அக்ரகார காப்புறுதிச் சான்றிதழ் பத்திரத்தினை" சகல உத்தியோகத்தர்களின் பிரத்தியேகக் கோவைக்கு பிரதியொன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு தொடர்பில் சட்டப் பிரிவுக்கு 39 வழக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், சகல வழக்குள் தொடர்பிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு

02. வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு

(முன்னிருந்த கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப்பொருட்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

பக்க இலக்கம்

01. அத்தியாயம்

1. நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு 77- 90

1.1 அறிமுகம் .....

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்.....

1.3 விசேட முன்னுரிமைகள் .....

1.4 நிறுவன விளக்கப்படம் .....

1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் .....

1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் .....

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் தகவல்கள் .....

02. அத்தியாயம்

2. 2022 முன்னேற்றம் மற்றும் 2023 எதிர்கால கண்ணோட்டம் ..... 91 -101

03. அத்தியாயம்

3. நிதி செயலாற்றுகைக் கூற்று ..... 102 - 103

04. அத்தியாயம்

4. பிரதான செயலாற்றுகை சுட்டிகள்..... 104 - 104

05. அத்தியாயம்

5. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை ..... 105 - 105

06. அத்தியாயம்

6. மனித வள விபரம்..... 106 – 109

07. அத்தியாயம்

7. இணக்க அறிக்கை ..... 110 - 115

01 அத்தியாயம்

1. நிறுவனத் தோற்றப்பாடு /அமுல்படுத்தும் பொழிப்பு

1.1 அறிமுகம்

முன்னர் காணப்பட்ட கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணக், கட்டிடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து புதிய அமைச்சுக்கள் தாபிபட்டதுடன், 2158/41 ஆம் இலக்க 2020.01.17 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் வீடமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சாக இந்த அமைச்சு செயற்பட்டு வந்தது.

இதனை அடுத்து, 2020 ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதி தேர்தலின் பின்னர் அமைச்சுக்களின் விடயங்கள் திருத்தம் செய்யப்பட்டதுடன், 2020.08.09 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2187/27 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய இந்த அமைச்சு கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு என தற்போது இயங்கிவருகின்றது. அதன் மூலம் அதுவரை அமுலில் இருந்த வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை விடயப்பரப்புக்கு மேலதிகமாக கட்டிடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டு விடயமும் இந்த அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதற்கு மேலதிமாக 2020 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய அமைச்சரவை அமைச்சாகக் காணப்பட்ட புனர்வாழ்வு மற்றும் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் பிரிவும் இந்த அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2022 மே 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2281/41 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் திணைக்களங்கள், நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் என்ற வகையில் 21 நிறுவனங்கள் இயங்கிவர ஆரம்பித்ததுடன், முன்னர் காணப்பட்ட வீடமைப்பு இராஜாங்க அமைச்சு, வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவாக இயங்கி வருவதுடன், மேற்படி இராஜாங்க அமைச்சுடன் சம்பந்தப்பட்டதாகக் காணப்பட்ட நிறுவனங்கள் இந்த அமைச்சின் கீழ் 2022 ஆம் ஆண்டின் இறுதிவரையும் இயங்கிவந்தன.

புதிய அரசின் கொள்கைப் பிரகடனத்தை அமுல்படுத்தி "யாவருக்கும் வசதியானதொரு வீட்டைப் பெற்றுக் கொடுக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை" அமுல்படுத்தும் பிரதான செயற்பணி இந்த அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவையும் உள்ளடக்கும் வகையில் குறைந்த வருமானம் பெறுவோரின் வீடமைப்புச் சிக்கலுக்குத் தீர்வு காணும் "உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் 2020 ஆம் ஆண்டில் புதிய அமைச்சு தாபிக்கப்பட்டதை அடுத்து ஆரம்பித்துவைக்கப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாக அமுல்படுத்த முடிந்தது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடு இல்லாத குறைந்த வருமானம் பெறும் ஒரு குடும்பத்திற்கு ரூபா 650,000 ஆன உதவித் தொகை அரசின் கொடையாகவும் மற்றும் சமுதாயத்தின் பங்களிப்புடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கண்காணிப்பின் கீழ் பயனாளிகளான குடும்பங்களினாலேயே வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் நாடு முழுவதிலும் 11,916 வீடுகளை நிர்மாணிப்பது ஆரம்பிக்கப்பட்டதுடன், இவற்றில் 6,355 வீடுகளை பூர்த்தி செய்து பயனாளிகளை குடியமர்த்த இயலுமாயிற்று.

2022 ஆம் ஆண்டுக்கு அமைச்சுக்கு ரூ.மி. 3,713 ஆன அபிவிருத்தி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அப்போது நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மேற்படி ஏற்பாடுகள் ரூ.மி. 3,488 ஆகக் குறைக்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் ரூ.மி. 2,684 ஆன தொகை செலவிடப்பட்டு 77% ஆன செயலாற்றுகை அடையப்பெற்றுள்ளது. மீண்டெழும் செலவினமாக ரூ.மி. 452 ஆன ஏற்பாடுகள் இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ரூ.மி. 444 ஆக திருத்தம் செய்யப்பட்டதுடன், இதில் ரூ.மி. 416 ஆன தொகை செலவிடப்பட்டு 94% ஆன செயலாற்றுகை மட்டம் அடையப்பெற்றுள்ளது.

தமக்கென வீடொன்றை புதிதாக நிர்மாணித்துக் கொள்ளும் ஊக்கமும், ஆற்றலும்மிக்க மற்றும் தற்போது வீடமைப்பு நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதிச் சிக்கல்கள் காணப்படுகின்ற குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கடன் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

நகர மற்றும் பகுதியளவிலான நகர்ப்புற பிரதேசங்களில் நடுத்தர வருமானம் பெறுவோரின் வீடமைப்பு சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்காக நாட்டின் சகல தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் 100 வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ''சியபத்த தொடர்மாடி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை'' முன்னெடுக்க முடிந்ததுடன், அதன் ஆரம்ப கட்டமாக 9 மாகாணங்களிலும் ஒரு தொடர்மாடி வீடமைப்புத் திட்டம் வீதம் ஆரம்ப கட்டமாக மேல், சபறகமுவா மற்றும் வடமத்திய மாகாணத்தை உள்ளடக்கும் வகையில் வீடமைப்புத் தொகுதிகள் 03 இன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நிதி அமைச்சின் 03/2022 சுற்றறிக்கைக்கு அமைய மேற்படி நிர்மாணிப்புக்களை தற்காலிகமாக நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

தேசிய கொள்கைச் சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதில் அரச துறைக்கு உரித்தான நியாயாதிக்க நிறுவனங்கள் திறைசேரிக்குச் சுமையாக அமையாதவாறு பேணிவருவதற்கு கடந்த இரண்டு வருடங்களிலும் மிக்க ஊக்கத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதன் பெறுபேறாக இலங்கை வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தை இலாபம் உழைக்கும் நிறுவனமாக மாற்றியமைத்துக் கொள்ள முடிந்தது. தேசிய இயந்திரசாதன நிறுவனம் சுய நிலைத்திருத்தலை உறுதி செய்துகொண்டுள்ள நிலையை அடைந்துள்ளதுடன், அரச பொறியியல் கூட்டுத்தாபனமும் மிகவும் காத்திரமான முறையில் தமது நிலைத்திருத்தலை நிலைபேறானதாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ள போதிலும், 2022 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் நிலவிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அடைந்துகொண்டுள்ள வளர்ச்சிகளை தொடர்ச்சியாக பேணிவருவது கடினமாக இருந்தது.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நிலவிய மோதல் நிலைமை காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்காக அமுல்படுத்தப்பட்ட மீள்குடியேற்றும் பிரிவும், இந்த அமைச்சுடன் இணைக்கப்பட்டதை அடுத்து அமைச்சின் விடயப்பரப்பு மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றப் பிரிவானது 2020.08.09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய இந்த அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. மீள்குடியேற்றப் பிரிவினால் வடக்கு மற்றும் கிழக்கில் நிலவிய யுத்த சூழல் காரணமாக இடம்பெயந்திருந்த குடும்பங்களை மீளக் குடியமர்த்தத் தேவையான சகல நடவடிக்கைகளையும், ஒழுங்கு செய்வதும், ஒருங்கிணைப்புச் செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது.

வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களாவன,

- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
- ஓசன் வீவ் அபிவிருத்தி (தனியார்) கம்பனி
- கட்டிடத் திணைக்களம்
- அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம்
- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
- அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம்
- வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

1.2 அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி

நோக்கு

''யாவருக்கும் வீடு மற்றும் நிலைபேறான நிர்மாணிப்பு''

செயற்பணி

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, கட்டிடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டுத் துறைகளுக்கு தேசிய தலைமைத்துவத்தை வழங்குதல், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழிலை ஒழுங்குறுத்தல், நிதியீட்டல், வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மதியுரை ஊடாக தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவுதல், நிதி, தொழில்நுட்பம், மதியுரை, இயந்திரசாதனம் மற்றும் பொருட்கள் துறைகளில் நிர்மாணத்துறைக்கு உதவுதல் மற்றும் அரச நிறுவனங்களுக்கு நிர்மாணச் சேவைகள், வாய்ப்பு மற்றும் கட்டிடப் பராமரிப்பு சேவைகளைப் பெற்றுக் கொடுப்பது இந்த அமைச்சின் செயற்பணியாகும்.

அமைச்சின் விடயப்பரப்பு மற்றும் பிரதான விடயத்துறைகள;

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டுத்துறையின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் இத்துறைகளில் ஈடுபடுகின்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

1.3 அமைச்சின் கீழுள்ள பிரதான விடயத்துறைகள்

வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

1. வீடமைப்பு விடயம் தொடர்பிலான கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை ஆக்குதல், பின்னாய்வு மற்றும் மதிப்பீடு.
2. குறைந்த வருமானம் பெறுவோர், நடுத்தர வருமானம் பெறுவோர் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் உள்ளிட்ட மக்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வீடமைப்புத் திட்டங்கள், வீடமைப்பு நிதி உதவி மற்றும் கடன் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
3. வீடமைப்பு அபிவிருத்தித் தேவைகளுக்கு காணிகளை இனங்காணல், காணிகொள்ளல், சாட்டுதல் செய்துகொள்ளல், நீக்கம் செய்தல் மற்றும் உறுதிகளை வழங்குவது தொடர்பிலான நடவடிக்கைகள்

தொழில்நுட்பப் பிரிவு

1. நிர்மாண விடயம் தொடர்பிலான கொள்கைகள், சட்டங்களை ஆக்குவதும், பின்னாய்வு செய்வதும்.
2. நிர்மாணக் கைத்தொழிலைப் பேணிவரத் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்தல்.
3. அமைச்சின் கீழுள்ள அரசாங்க திணைக்களங்கள், நிர்மாணிப்பு தொடர்பிலான அதிகார அமைப்புக்களின் நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல் மற்றும் வழிகாட்டல்.
4. அரசின் சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கும் நிலையான தொழில்நுட்பக் குழுக்களின் பணிகளை நிறைவேற்றல்.

நிர்மாணப் பிரிவு


1. அமைச்சின் கீழுள்ள நிர்மாணத்துறை நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல்.
2. அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பம்சாரா நிறுவனங்களுக்கு நிர்மாணப் பணிகளின் போது தொழில்நுட்ப வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
3. நிர்மாணத் துறை தொடர்பான வெளிநாட்டு தொழில்வல்லுனர்கள் மற்றும் பயிலுனர்களான தொழில் வல்லுனர்களுக்கு விசாவை சிபாரிசு செய்தல்.

இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தும் பிரிவு

1. இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கிராமிய வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
2. நிலக் கண்ணிவெடி அகற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக அமுல்படுத்தல்.

1.4 அமைச்சின் ஒழுங்கமைப்பு மற்றும் மனிதவளத் தோற்றப்பாடு

நிறுவன ஒழுங்கமைப்பு



கணக்காளர் - கண.
சட்ட அலுவலர் ச.அ.
பிரதிப் பணிப்பாளர் பி.க.
உதவிச் செயலாளர் உ.செ.ந


உதவிப் பணிப்பாளர் - உ.ப.
நுவாக.அலுவலர்.நி.அ. .
தகவல் தொழில்நுட்ப அலுவலர் த.தெ.அ. அ
அபிவிருத்தி அலுவலர் அ.அ.அரச

மொழிபெயர்ப்பு அலுவலர் - மொ.அ.
புகைப்படக்கலைஞர் உ.பு.க.

தொழில்நுட்ப அலுவலர் - தொ.அ.
முகாமைத்துவ அலுவலர் அ.மு.உ வ
லுவலக சிற்றூழியர் அ.சி.சாரதி சா

உதவிகைப்படக்கலைஞர் உ.பு.க
ீடியோ கலைஞர் வி.க.

1.4 அமைச்சின் ஒழுங்கமைப்பு மற்றும் மனிதவளத் தோற்றப்பாடு



கணக்காளர் - கண. உதவிப் பணிப்பாளர் - உ.ப. மொழிபெயர்ப்பு அலுவலர் - மொ.அ. தொழில்நுட்ப அலுவலர் - தொ.அ. புகைப்படக்கலைஞர் - பு.க. உதவிகைப்படக்கலைஞர் உ.பு.க
பிரதிப் பணிப்பாளர் பி.க. சட்ட அலுவலர் ச.அ. தகவல் தொழில்நுட்ப அலுவலர் த.தெ.அ. அ லுவலக சிற்றூழியர் அ.சி. சாரதி சா. தெழர.ர இயக்குனர் கே.இ. ீடியோ கலைஞர் வி.க
உதவிச் செயலாளர் உ.செ.நி ருவாக அலுவலர் நி.அ. அபிவிருத்தி அலுவலர் அ.அ.அரச முகாமைத்துவ அ லுவலர் அ.மு.உ. வ

1.5 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற பிரதான பிரிவுகள் மற்றும் விடயத்துறைகள்

1.5.1 நிருவாகப் பிரிவு

நகர மற்றும் அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிர்மாணிப்புப் பிரிவின் பொது நிருவாகம் சம்பந்தமான அனைத்துப் பணிகள் மற்றும் மனிதவள முகாமைத்துவம் நிருவாகப் பிரிவுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பிரதான பணியாகும். அதற்கமைய அதற்குத் தேவையான சூலலை ஒழுங்குபடுத்தல், பௌதீக வளங்களை விளைத்திறன்மிக்கவாறு முகாமைத்துவம் செய்தல், அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் சகல தாபன நடவடிக்கைகள் மற்றும் மனிதவள முகாமைத்துவத்துக்கு வழிகாட்டுவது நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

நிருவாக பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சின் சகல பொது நிருவாக நடவடிக்கைகள் மற்றும் சகல அலுவலர்களினதும் தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
2. அமைச்சரின் பதவியணி அலுவலர்களின் தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
3. அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களில் அமைச்சின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்படுகின்ற சகல தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகளும்.
4. அமைச்சின் நிதி முகாமைத்துவம் தொடர்பில் நி.பி. 135 இன் கீழ் நிருவாகப் பிரிவு அலுவலர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல்.
5. நிருவாகப் பிரிவு தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயார் செய்து சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சர் அலுவலகம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பை செய்தல்.
6. பாராளுமன்றம் தொடர்பிலான உரிய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.
7. மனிதவள அபிவிருத்தி தொடர்பில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அலுவலர்களை அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.
8. அமைச்சின் இணை நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள், செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய ஒருங்கிணைப்பும், கண்காணிப்பும்.
9. கூட்டங்கள் மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
10. அமைச்சின் தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான முறையியலை மேம்படுத்துவதை ஒருங்கிணைப்புச் செய்யும் நடவடிக்கைகள்.
11. நிலையான சொத்து முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

1.5.2 திட்டமிடல் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் திட்டமிடப்பட்டவாறு முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு வழிநடாத்துவது இப்பிரிவின் பிரதான செயற்பணியாகும். வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டுத் துறையில் மற்றும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்ற மோதல்களினால் இடம்பெயர்ந்துள்ளவர்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுக்கும் பணிகளின் போது மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உரிய தரப்பினர்கள் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்துவதும் இதில் உள்ளடங்கும். மேலும், தேசிய கொள்கைகள் மற்றும் காலத்தின் தேவைகளை அடைந்துகொண்டு வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டுத் துறையின் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு நிறுவனங்களினால் தயார் செய்யப்படுகின்ற கருத்திட்டப் பிரேரணைகளை நிதி அமைச்சினூடாக அங்கீகரித்துக்கொள்ள உதவுவதும், அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சின் நோக்கு மற்றும் நோக்கங்களுக்கு ஏற்புடையதாக அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் செயல் ரீதியான திட்டத்தைத் தயார் செய்வது தொடர்பில் உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்
2. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கருத்திட்டப் பிரேரணைகளை, தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதும், ஒருங்கிணைப்புச் செய்வதும்.
3. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான தகவல்களைத் தயார் செய்வதும், அறிக்கையிடுவதும்.
4. கருத்திட்டங்களை பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
5. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய அறிக்கையிடல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
6. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் சம்பந்தமான அமைச்சரவை தீர்மானங்களை அமுல்படுத்துவது பற்றிய பின்னாய்வை மேற்கொள்ளல்.
7. அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையை தயார் செய்து உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைப்பதற்கு சமர்ப்பித்தல்.

8. செயலாற்றுகை அறிக்கையை தயார் செய்து உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைப்பதற்கு சமர்ப்பித்தல்.
9. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை ஒழுங்குசெய்தல், அறிக்கைகளை தயார் செய்தல் மற்றும் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைப்பதற்கு சமர்ப்பித்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.
10. வெளிநாட்டு உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களை உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.

1.5.3 வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

1.5.3.1 வீடமைப்புப் பிரிவு

வீடமைப்புத் துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வீடமைப்பு அபிவிருத்தி துறையின் கீழ் தேசிய கொள்கைகளைத் திட்டமிடல், திட்டங்களைத் தயார் செய்தல், வழிநடாத்தல், பின்னாய்வு, மற்றும் அத்துறையில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டல்களைச் செய்வது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

வீடமைப்புப் பிரிவின் பிரதான பணிகள்

1. கொள்கைகளை வகுத்தல்

- வீடமைப்புத் துறையின் முன்னேற்றத்துக்குத் தேவையான கொள்கைகளைத் தயார் செய்தல்.
- வீடமைப்புத் துறை சம்பந்தமான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் குறிப்புக்களைத் தயார் செய்தல்
- வீடமைப்புத் துறை சம்பந்தமான சட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் ஒழுங்குவிதிகளை ஆக்குதல்.
- வீடமைப்புத்துறைக்கு ஏற்புடையதான கொள்கைகளை ஏனைய அரசதுறை நிறுவனங்களுடன் இணைந்து அமுல்படுத்தல்.
- வேறு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு வீடமைப்புத்துறை தொடர்பான அவதானிப்புக்களை தயார் செய்து சமர்ப்பித்தல்.
- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினால் கௌரச அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகள் மற்றும் அவதானிப்புக்களை தயார் செய்து சமர்ப்பித்தல்.

2. வீடமைப்பு அபிவிருத்தி

- பங்கேட்பு முறையியலின் கீழ் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வீடமைப்புக் கடன் / உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்து விற்பனை செய்தல் (முன் விற்பனை அடிப்படையில்)
- தொடர்மாடி வீடமைப்புத்திட்டங்களை புனரமைப்புச் செய்தல் மற்றும் மீள் அபிவிருத்தி செய்வது சம்பந்தமான நடவடிக்கைகள்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தவது தொடர்பான நடவடிக்கைகள்.
- வேறு அரச நிறுவனங்களுடன் இணைந்து வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற வீடமைப்புக் கோரிக்கைகளை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்.

3. வேறு கடமைகள்

- உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் வீடமைப்பு விடயம் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் (UN-Habitat) இணைந்து மேற்கொள்ளும் ஏனைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தகவல் அறிக்கைகளை தயார் செய்து சமர்ப்பித்தல்.

1.5.3.2 காணிகள் பிரிவு

வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான காணிகளை இனங்காணல், உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு காணிகளை கொள்ளல் மற்றும் நீக்கம் செய்வதற்கான பணிகளை துரிதப்படுத்தல், காணி விடயம் தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற சிக்கல்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களுக்குத் தேவையான காணிகளை கொள்ளல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல் இப்பிரிவின் பிரதான பணியொன்றாகும்.

காணிகள் பிரிவின் பிரதான பணிகள்

1. வீடமைப்பு அபிவிருத்தி தேவைகளுக்கு காணிகளைச் சுவீகரித்தல்/ பொறுப்பேற்றுக் கொள்வது சம்பந்தமான நடவடிக்கைகள்.
2. வீடமைப்பு அபிவிருத்தித் தேவைகளுக்கு காணிகளை நீக்கம் செய்வது சம்பந்தமான நடவடிக்கைகள்
3. 1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 8(1) பிரிவின் கீழ் காணிகள்/ வீடுகளுக்கான சட்ட ரீதியான உரித்தினை பொதுமக்களுக்கு சாட்டுதல் செய்வதற்கு கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதை ஒருங்கிணைப்புச் செய்தல்.

4. கட்டிடத் திணைக்களம், அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம், வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட் கூட்டுத்தாபனம், அரச பொறியியல் கூட்டுத்தாபனம், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய இயந்திரசாதனங்கள் நிறுவகம் ஆகிய நிறுவனங்களுக்குத் தேவையான காணிகளை சாட்டுதல் செய்துகொள்ளல் பற்றிய நடவடிக்கைகள்.

நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்ட அலகு

நகர மற்றும் உப நகர்ப் பிரதேசங்களில் வாழும் நடுத்தர வருமானம் பெறும் மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் நடுத்தர வருமான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர மற்றும் உப நகர்ப் பிரதேசங்களைச் சூழ நடுத்தர வருமானம் பெறுவோருக்காக சகல வசதிகளையும் கொண்ட தொடர்மாடி வீடுகள் நியாயமான விலைக்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. இதன் போது முதலீடு, திட்டமிடல், நிர்மாணிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை ஆகிய பணிகள் தனியார் துறையினரால் மேற்கொள்ளப்படுவதுடன், அரசாங்கம் வீடமைப்புக் கருத்திட்டத்திற்கான பிரவேசம் வரை நீர், மின்சாரம், வீதி வசதிகளை பெற்றுக் கொடுப்பதையும், வீடமைப்புக் கருத்திட்டத்தினை நிர்மாணிக்கும் காணியின் அபிவிருத்தி விலையை மாத்திரம் அறவிட்டுக் கொண்டு கருத்திட்டத்திற்கு காணிகளைப் பெற்றுக் கொடுப்பதையும் மேற்கொள்கின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வினைத்திறனுடன் மேற்கொள்வது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள கருத்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவின் பணியாகும்.

1.5.3.3. தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்புப் பிரிவுக்கு உரித்தான தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவுக்கு 1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் தத்துவங்கள் மற்றும் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவின் பிரதான பணிகள்

1. வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
2. தேசிய வீடமைப்பு ஆணையாளர் சுவீகரித்துள்ள வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்தல்.
3. பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகள் தொடர்பில் அடிக்கடி எழுகின்ற சிக்கல்களைத் தீர்த்துவைத்தல்
4. மற்றும் அதன் விளைவாய்ந்தன்மைவாய்ந்த விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

1.5.4.தொழில்நுட்பப் பிரிவு

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திக்கான ஏற்பாடுகளை செய்தல், தரமான மற்றும் சுற்றாடலுக்கு சாதகமான நிர்மாணக் கைத்தொழிலை உருவாக்குவதற்கு தலையீடு செய்வது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தொழில்நுட்பப் பிரிவின் பிரதான பணிகள்

1. நிர்மாணத்துறையின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல்.
2. நிர்மாணத்துறை சம்பந்தமான சட்டவரைவுகள், சட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
3. தொழில்நுட்பத் துறையுடன் சம்பந்தப்பட்ட நிர்மாணக் கைத்தொழிலை ஒழுங்குறுத்தல் மற்றும் பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு வழிநடாத்தல்.
4. நிர்மாணத் துறைக்குத் தேவையான ஊழியப் படையணியை ஆயத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.
5. தொழில்வல்லுனர்கள் மற்றும் நிர்மாணக் கலைஞர்களை நிபுணத்துவம் மற்றும் அறிவுமிக்கவர்களாக்குவதற்கு மற்றும் தரமான நிர்மாணிப்பை மேற்கொள்வதற்கு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிப்படுத்தல்.
6. தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

1.5.5. நிர்மாணப் பிரிவு

இப்பிரிவானது, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம், கட்டிடங்கள் திணைக்களம், ஓசன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி, நடுத்தர வருமான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம், தேசிய இயந்திரசாதன நிறுவனம், வரை. கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணிப்பு சம்பந்தமான பணிகளை அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்வதை பிரதான செயற்பணியாகக் கொண்டுள்ளது.

2022.03.16 ஆம் திகதி முதல் அமைச்சின் கடமைகள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டதை அடுத்து அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம், தேசிய இயந்திரசானங்கள் நிறுவனம், வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணிப்பு சம்பந்தமான நடவடிக்கைகளின்

கண்காணிப்பு, முன்னேற்ற மீளாய்வு செய்தல், அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைப்பு ஒருங்கிணைப்பு செய்வது மேலதிக செயலாளர் (நிர்மாணிப்பு) இன் கீழ் நிறைவேற்றப்பட்டது.

நிர்மாணப் பிரிவின் பிரதான பணிகள்

1. உரிய நிறுவனங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.
2. உரிய நிறுவனங்களின் நிதிச் சிக்கல்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்.
3. நிர்மாணத் துறையை கண்காணிப்புச் செய்தல் மற்றும் மதியுரைச் சேவைகளை ஆற்றுதல்.
4. பெறுகை மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.
5. அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயார் செய்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.
6. நிபுணத்துவம்மிக்க இலங்கையர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு வெளிநாட்டு நிர்மாணத் துறையைச் சேர்ந்த விசேட நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள ஆட்களுக்கு வீசா பெற்றுக் கொள்வதற்கு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கு சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.

1.5.6 பொறியியல் சேவைகள் பிரிவு

2021.07.01 ஆம் திகதி பதவியணி திருத்தத்தை அடுத்து பணிப்பாளர் நாயகம் (பொறியியல் சேவைகள்) ஒருவரின் கீழ் தாபிக்கப்பட்ட பொறியியல் சேவைகள் பிரிவு பிரதானமாக அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய இயந்திரசாதன நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணப் பணிகள் மற்றும் இயந்திரசாதன சேவைகளை வழங்குவது தொடர்பில் அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்வதை மேற்கொண்டுள்ளது.

2022.03.16 ஆம் திகதி முதல் அமைச்சின் கடமைகளை மீண்டும் மீளாய்வு செய்த பின்னர் பணிப்பாளர் பொறியியல் சேவைகளின் கடமை நடவடிக்கைகள், தகவல் தொழில்நுட்ப பிரிவின் கடமை நடவடிக்கைகள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, ஓசன் வீவ் டிவலப்மன்ட் தனியார் கம்பனி, நடுத்தர வருமான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம் ஆகிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள், ஏனைய பொறியியல் நடவடிக்கைகளின் கண்காணிப்பு, முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்வது பணிப்பாளர் நாயகம் பொறியியல் சேவையின் கீழ் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதான பணிகள்

1. அரச நிறுவனங்களுக்கு அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய கையளிக்கப்படுகின்ற கட்டுமானக் கருத்திட்டங்களின் நிலையியற் தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரமாணக் குறிப்புகளின் விலைமனுக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளுக்குள் உள்ளனவா என்பதை பரிசோதித்துப் பார்த்து குழுவின் அங்கீகாரத்துக்காக மீண்டும் தயார் செய்தல்.
2. கட்டுமான ஒப்பந்தங்களின் மொத்த செலவின மதிப்பீட்டுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
3. அமைச்சுச் செயலாளரின் மற்றும் அமைச்சின் அதிகார எல்லைக்குள் நிர்மாண ஒப்பந்தங்களின் மாறுபாடுகளுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. தொழில்நுட்பம் அல்லாத அரசு நிறுவனங்கள் மற்றும் அமைச்சுகளின் கட்டுமான ஒப்பந்தம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு தேவையான ஆதரவையும் ஒருங்கிணைப்பையும் வழங்குதல்.
5. பெறுகை மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு.
6. அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயார் செய்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுத்தல்.
7. தகவல் தொழில்நுட்பத்துறை சம்பந்தமாக கோரிக்கைக்கு அமைய மென்பொருள் வடிவமைத்தல் மற்றும் தாபித்தல், உத்தியோகபூர்வ இணையத்தளத்தை வடிவமைத்தல், இற்றைப்படுத்தல், பேணிவருதல், கணினி வன்பொருள் மற்றும் அச்சு இயந்திரங்களின் தவறுகளை இனங்காணல், புதுப்பித்தலுக்கு சிபாரிசு செய்தல், கணினி வலையமைப்பு முறைமையின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் உட்பட அமைச்சின் சகல தகவல் தொழில்நுட்ப தேவைகளையும் இனங்காணல் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ளல்.
8. பிரிவின் கீழ் காணப்படுகின்ற தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, ஓசன் வீவ் டிவலப்பர்ஸ் தனியார் கம்பனி, நடுத்தர வருமான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம் ஆகிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்களின் நிர்மாணிப்பு மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள், ஏனைய பொறியியல் நடவடிக்கைகளின் கண்காணிப்பு, முன்னேற்ற மீளாய்வு மற்றும் அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்தல்.

1.5.7 நிதிப் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்புடையதாகின்ற நோக்கங்களை அடைந்துகொள்ளத் தேவையான நிதி வளம் மற்றும் ஆலோசனையைப் பெற்றுக்கொடுத்தல், மேற்படி வளங்களைப் பயன்மிக்கவாறும், வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைமை பற்றி ஆலோசனை வழங்குவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

நிதிப் பிரிவின் பிரதான பணிகள்

1. வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்க நிதி முகாமைத்துவ முறைமையை அமைச்சினுள் அமுல்படுத்தல்.
2. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கான பெறுகை குழுக்களைத் தாபித்தல்.
3. நிதி முகாமைத்துவம், நிதித் திட்டமிடல், வரவு செலவுத்திட்டமிடல், சொத்து முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு, முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு அறிவுரை மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
4. நிதி அமைச்சுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளைப் பேணிவருதல் மற்றும் அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்ளக்கூடியவாறான நிதி வளங்களை திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொண்டு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளித்தல்.
5. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதை பிரதானமாகக் கொண்டு அந்நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்து வருடாந்த வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்தல் மற்றும் ஆண்டு முழுவதிலும் வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாட்டுடன் நடவடிக்கை மேற்கொள்ளல்.
6. வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியை செலவிடும் போது உரியவாறு அறிக்கையிடல் மற்றும் மாதாந்த, வருடாந்த நிதி அறிக்கைகளை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்.
7. அரச கணக்காய்வுப் பிரிவு மற்றம் உள்ளக கணக்காய்வுப் பிரிவுடன் நல்லதொரு தொடர்ப்பை பேணிவருவதுடன் மேற்படி பிரிவுகளின் ஊடாக பிரேரிக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை அமுல்படுத்தல்.
8. அமைச்சின் சகல பெறுகை நடவடிக்கைகளையும் முறையாக மேற்கொள்ளல்.

1.5.8 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ளகூஇணை நிறுவனங்களின் உத்தேச நோக்கங்களை யதார்த்தமாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சிறந்த நிதி நிருவாகம் மற்றும் முறையான முகாமைத்துவத்தை தாபிக்கச் செயற்படல்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் நிதி நிருவாகம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்கேற்று அந்நடவடிக்கைகளை மென்மேலும் முறையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உதவுதல்.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.
2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சிக்கல்களை குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.
3. கணக்காய்வு மற்றும் விசாரணை நடவடிக்கைகளின் மூலம் நிறுவனங்களிலுள்ள சிக்கல்களை குறைத்துக் கொள்ள உதவுதல்.
4. அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மற்றும் அரச கணக்குகள் பற்றிய குழுவின் சிபாரிசுகள் மற்றும் கட்டளைகளை அமுல்படுத்துவது தொடர்பில் பின்னாய்வை மேற்கொள்ளல்.

1.5.9 மீள்குடியேற்றப் பிரிவு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக நிலவிய மோதல் நிலைமை காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள மற்றும் வெளிநாடு சென்று தமது நாட்டுக்கு வருகைதரும் மக்களை மீளக் குடியேற்றுவதற்குத் தேவையான சகல வசதிகளையும் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அப்பிரதேசங்களின் அத்தியாவசிய உட்கட்டமைபபு வசதிகள் கருத்திட்டங்கைள அமுல்படுத்துவது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மீள்குடியேற்ற பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற பிரதான செயற்பணியாகும்.

அதற்கமைய மீளக் குடியமர்த்துவது தொடர்பாக 2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு வட மாகாணத்தில் 180,793 குடும்பங்களுக்கு உரித்தான ஆட்கள் 575,012 பேரும் கிழக்கு மாகாணத்தில் 91,329 குடும்பங்களைச் சேர்ந்த ஆட்கள் 338,360 பேரும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். பொதுவாக நோக்கும் போது இந்த அமைச்சினால் 272,122 குடும்பங்களைச் சேர்ந்த ஆட்கள் 913,372 பேர் 2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மாவட்ட செயலகங்களினால் அறிக்கையிடப்பட்டுள்ள தரவுகளுக்கு அமைய தொடர்ந்தும் உறவினர்கள், நண்பர்களின் மற்றும் நலன்புரி நிலையங்களில் வாழும் 2626 குடும்பங்களைச் சேர்ந்த ஆட்கள் 7914 பேர் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்து உள்ளார்கள். இவர்களில் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நலன்புரி நிலையங்கள் 15 இல் 149 குடும்பங்களைச் சேர்ந்த ஆட்கள் 485 பேர் உள்ளார்கள்.

2022 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2109 குடும்பங்களைச் சேர்ந்த ஆட்கள் 3059 பேரை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள 59 குடும்பங்களுக்கு உரித்தான ஆட்கள் 117 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 03 தசாப்த காலத்திற்கும் மேலாக நிலவிய உள்ளக மோதல் நிலைமை காரணமாக தமது சொந்தக் கிராமங்களை இழந்து இடம்பெயர்ந்திருந்த மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் சம்பந்தமாக 2022 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மீள்குடியேற்ற பிரிவுக்கு ரூ.மி. 1319.50 ஆன ஏற்பாடுகள் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் தொற்று நோய் நிலைமைக்கு மத்தியில் ஆரம்ப ஏற்பாடுகள் திருத்தம் செய்யப்பட்டதுடன், இது ரூ.மி. 1180 ஆக திருத்தப்பட்டது.

மீள்குடியேற்றப் பிரிவின் பிரதான பணிகள்

1. வடக்கு கிழக்கில் நிலவிய மோதல் நிலைமை காரணமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்காக நிரந்தர வீடுகளை நிர்மாணித்தல்.
2. மோதல் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் காணி உரித்தற்ற குடும்பங்களுக்கு அரச உதவியின் கீழ் காணிகளைக் கொள்வனவு செய்து நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.
3. இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
   - குடிநீர் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
   - வீட்டு மின் இணைப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.
   - சேதமடைந்துள்ள வீடுகளை புதுப்பித்தல்.
   - துப்பரவேட்பாட்டு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
   - இடம்பெயந்த குடும்பங்கள் வாழும் பிரதேசங்களில் உள்ளக பிரவேச வீதிகளை நிர்மாணித்தல்.
   - சேதமடைந்த பாடசாலை கட்டிடங்கள் மற்றும் பாலர் பாடசாலை மற்றும் சுகாதார நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் புதுப்பித்தல்.
4. நிலக்கண்ணிவெடி மற்றும் வெடிபொருட்களை அகற்றும் நடவடிக்கைகளை சர்வதேச தரநியமங்களுக்கு அமைய வழிப்படுத்துவதும் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களை மீளக்குடியமர்த்தும் பணிகள் மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு காணிகளை விடுவிப்பதும்.
5. மீள்குடியேற்றப் பணிகளுக்கான வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற அமைப்புக்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
6. இடம்பெயர்ந்துள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

1.6 அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் கருத்திட்ட அலகுகள்

1.6.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கையின் வீடமைப்புத் துறையின் தீவிர சிக்கல்களுக்கு நேரடிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டிருப்பது, 1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் மூலமாகும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகம் கொழும்பு 02, சித்தப்பலம் ஏ கார்டினர் மாவத்தை இலக்கம் 34 எனும் இடத்தில் அமைந்துள்ளதுடன், 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் தாபிக்கப்பட்டுள்ள 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் கொழும்பு நகர அலுவலகங்கள் 02 இன் ஊடாக அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2164 பேரைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணி உள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போது உண்மையான பதவியணி சுமார் 2000 ஆக உள்ளதுடன் ''சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கைப் பிரகடனத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள வீடமைப்பு மற்றும் குடியிருப்புமயமாக்கல் கொள்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் இலங்கையில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் மகிழ்ச்சிகரமாக வசதியான வீடொன்றில் வாழ்வதை உண்மைப்படுத்துவதற்காக ''உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்'' வீடமைப்பு உதவி நிகழ்ச்சித்திட்டம், ''சபிறி தொடர்மாடி வீடுகள்'' நிகழ்ச்சித்திட்டம், ''சபிறி கிராமம்'' நிகழ்ச்சித்திட்டம், ''சபிறி நிவஹன்'' நடுத்தர வகுப்பினருக்கான தொடர்மாடி வீடமைப்புத்திட்டம், ''வங்கிகளுடன் இணைந்த சபிறி வீடமைப்புக் கடன்'' போன்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.6.2 ஓசன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி

ஓசன் வீவ் டிவலப்மன்ட் தனியார் கம்பனியானது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பங்கு மூலதனத்தைக் கொண்டதாக 1994 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆம் திகதிய 1982/17 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்டு 2007/7 ஆம் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு இலக்கம் பீவீ 17667 மூலம் மீள்பதிவு செய்யப்பட்டது.

அரச கம்பனி என்ற வகையில் ஆதன அபிவிருத்தி மற்றும் ஆதன முகாமைத்துவத்தில் உச்சநிலையை அடைந்துள்ள, அரச நிறுவனம் என்ற வகையில் நம்பகத்தன்மை, தனியார் கம்பனி என்ற வகையில் வினைத்திறனை அடிப்படையாகக் கொண்டு வாடிக்கையாளர்களுக்கு துரிதமான, உயர் தரம்மிக்க, சேவையைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு தனி வீடுகள் மற்றும் வீடமைப்புக் கருத்திட்டங்களை நிர்மாணித்து சந்தையில் போட்டித்தன்மை அடிப்படையில் நியாயமான விலைக்கு விற்பனை செய்வது இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

1.6.3 நடுத்தர வருமானம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம்

2016 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டமானது அரச மற்றும் தனியார் துறையில் சம்பளம் பெறும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சகல வசதிகளையும் கொண்ட வீடொன்றை உரித்தாக்கிக் கொடுக்கும் நோக்கத்துடன் வீடொன்றை உரிமையாக்கிக் கொள்ளும் வழியற்ற மற்றும் வீடு இல்லாத அரச, தனியார் துறையில் சம்பளம் பெறும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வசதிகளைச் செய்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் அவர்களின் சமூக நிலைத்திருத்தலை நல்லதாக மாற்றியமைத்தல் மற்றும் பொருளாதார சுபீட்சத்தை அடையச் செய்வது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

1.6.4 கட்டிடத் திணைக்களம்

1849 ஆம் ஆண்டு அரசாங்க வேலைகள் திணைக்களமாக ஆரம்பிக்கப்பட்ட கட்டிடத் திணைக்களம், 1969 இல் "ஏ" தொகுதியைச் சேர்ந்த திணைக்களமொன்றாக தாபிக்கப்பட்டதுடன், அரசாங்க வேலைகள் திணைக்களம் ரத்துச் செய்யப்பட்டதை அடுத்து அரசாங்கத்தின் கட்டடங்கள் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் துறையில் அதிகாரம்கொண்ட ஒரே நிறுவனமாகவும், ஆலோசனை வழங்கும் நிறுவனமாகவும் கட்டிடத் திணைக்களம் காணப்படுகின்றது.

தலைமை பொறியியலாளர் அலுவலகங்கள் 07 இன் மூலம் நாடு முழுவதிலும் கட்டிடக் கலை மற்றும் பொறியியல் வடிவமைப்பு, நிர்மாணிப்பு, பராமரிப்பு, கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப மதியுரைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அரசதுறையில் கட்டிட நிர்மாணிப்புக்கு சிறந்த சேவையை ஆற்றி வருகின்றது.

இந்த நிறுவனம் ISO 9001/2008 தரச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டுள்ளது.

1.6.5 அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்

அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களமானது 1849 ஆம் ஆண்டு அப்போதைய பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களினால் கொழும்பு ஐந்துலாம்புச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்டது. 1928 ஆம் ஆண்டு அரசாங்க வேலைகள் திணைக்களத்தின், இயந்திர வேலைத்தளமாக தற்போது கொலன்னாவை வளவில் அரச மற்றும் தனியார் துறையின் சகல இயந்திரப் பொறியியல் பணிகளையும் நிறைவேற்றுவதற்காக தாபிக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு "ஏ" தரத்தைச் சேர்ந்த திணைக்களமொன்றாக அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் மாற்றப்பட்டது.

தற்போது அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தினால் நீர்ப்பாசன திணைக்களத்துக்கு நீர் கட்டுப்பாட்டு கதவுகளை நிர்மாணித்தல், பொருத்துதல் மற்றும் பராமரிப்பு, தபால் திணைக்களத்தின் தினமுத்திரைகள் மற்றும் தினக் குற்றிகளை நிர்மாணித்து வழங்குதல், பொலிஸ் திணைக்களத்தின் இலக்கத் தகடுகள் மற்றும் சார்ஜன் பட்டிகளை உற்பத்தி செய்தல், தளபாடங்களை நிர்மாணித்து வழங்குதல், நீர் வழங்கல் சபையின் நீர் சுத்திகரிப்புத் தாங்கிகளை நிர்மாணித்தல், அரச வைபவங்களுக்கு வரவேற்பு மேடைகளை பொருத்துதல், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இரும்புப் பாலங்களை நிர்மாணித்துப் பொருத்தல், நிறுவனங்களின் அறைகளை பிரித்தல் (Aluminium Partition) மற்றும் பெயர்ப் பலகைகளை நிர்மாணித்துப் பொருத்தல், அரச நிறுவனங்களின் வாகனங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரிப்புச் செய்தல், இலங்கை புகையிரத திணைக்கத்திற்கு சீனச்சிட்டி, பிறேக் கட்டமைப்பு உள்ளிட்ட சீனச்சட்டி உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து வழங்குதல், பலகை மற்றும் இரும்பாலான வைத்தியசாலை உபகரணங்களை நிர்மாணித்து வழங்குதல், பொய்லர் மற்றும் கேஸ் குழாய்க் கட்டமைப்புக்களைப் பராமரிப்புச் செய்தல், தொழில்நுட்ப நிறுவனங்கள், பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் பொறியியலாளர்களுக்கு செயன்முறைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது நிறுவனம் ISO 9001/2015 தரச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டுள்ளது.

1.6.6 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்த அதிகாரசபை தாபிக்கப்பட்டது. நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல், பதிவுசெய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்துவது இந்தச் சட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

நிர்மாணக் கைத்தொழிலுக்கான தேசிய மதியுரை சபையைத் தாபித்தல், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல், நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான தொழில் வல்லுநர்கள், உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கலைஞர்களின் அபிவிருத்தி மற்றும் நலன்புரிக்கான ஏற்பாடுகளைச் செய்தல், நிர்மாண நடவடிக்கைகள் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்துவைத்தல், நிர்மாணக் கைத்தொழில் துறையில் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்தல் போன்ற பணிகளுக்காக அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

1.6.7 இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் பேணி வரப்படுகின்ற பகுதியளவான அரச நிறுவனமொன்றாகும். நிர்மாணிப்புத் துறையில் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், பொறியியல் சேவையை வழங்குதல், நிர்மாணிப்பு இயந்திர சாதனங்களை வழங்குதல், திட்டங்களை வடிவமைத்தல், முன்வலுவூட்டப்பட்ட கொன்க்ரீட் அம்சங்களை உற்பத்தி செய்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் போன்ற பணிகளை இந்நிறுவனம் நிறைவேற்றுகின்றது.

2009 ஆம் ஆண்டு முதல் ISO 9001/2000 தரச்சான்றிதழையும், ISO 14001/2004 சுற்றாடல் முகாமைத்துவச் சான்றிதழையும் பெற்று நிர்மாணத் துறையில் முன்னோடி நிறுவனமொன்றாக செயற்பட்டு வருகின்றது.

1.6.8 தேசிய இயந்திரசாதன நிறுவனம்

அரசாங்க நிறுவனங்களுக்கு இயந்திரசாதனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் தேசிய இயந்திரசான நிறுவனம் 1992 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் இயந்திர சாதனப் பிரிவாக தேசிய இயந்திர சாதன நிறுவகம் அதன் கீழ் கொண்டுவரப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் மற்றொரு அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கீழேயே முகாமைத்துவ சபையின் கீழ் இயங்கி வருகின்றது.

வனசீவராசிகள், மிருகக் காட்சிசாலைகள், நீர்ப்பாசனம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் புகையிரதத் திணைக்களத்தினால் கையளிக்கப்பட்ட விசேட ஒப்பந்தங்களின் மூலம் இந்நிறுவனம் முன்னணியில் உள்ளது. அச்சுத் தொழில்வல்லுனர்கள், பயிற்றப்பட்ட ஊழியர்கள், தொழிலாளர் மட்டத்திலான பதவியணியினர் இதில் சேவையாற்றுகின்றனர். மேலும், கனரக இயந்திர சாதனங்களைக் கொண்டதாகவும், நாடு முழுவதிலும் சகல மாவட்டங்களிலும் சேவை வழங்கும் டிப்போக் கட்டமைப்புக்களைக் கொண்டதாகவும், ஒவ்வொரு மாகாணத்திலும் அமைந்துள்ள சகல வசதிகளையும் கொண்ட இயந்திர வேலைத்தளங்களைக் கொண்டதாகவும் உள்ளது.

1.6.9 வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் 1971 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இதனையடுத்து 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வர்த்தக நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றியமைக்கும் சட்டத்தின் கீழ் மற்றும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1992 ஆம் ஆண்டில் 100% அரசாங்கத்திற்கு உரித்தான வரையறுக்கப்பட்ட பொறுப்புகளைக் கொண்டு பொதுக் கம்பனியாக இந்தக் கூட்டுத்தாபனம் மாற்றியமைக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. மீண்டும் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2007 இன் கம்பனிகள் சட்டத்தின் 07 ஆம் இலக்கத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டது.

16 கிளைகளை கொண்டதாக நாடளாவிய ரீதியில் அமைந்துள்ளதுடன், கட்டிடப் பொருட்கள் மற்றும் நிர்மாணிப்பு உபகரணங்களை போட்டித்தன்மைமிக்க விலையில் நுகர்வோருக்கு வழங்குதல் மற்றும் ஒரே கூரையின் கீழ் சகல கட்டிடப் பொருட்களையும், உபகரணங்களையும் பல்வேறு வழங்குநர்களிலிருந்து தெரிவு செய்து நுகர்வோருக்கு கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

1.7 வெளிநாட்டு உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

இந்திய அரசின் உதவியின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 5 இந்த அமைச்சின் கீழ் காணப்படுகின்றன.

கருத்திட்டம்	நிதிசார் பெறுமதி	கருத்திட்டக் காலஎல்லை	கருத்திட்ட நோக்கம்
சங்கைக்குரிய மாதுளுவாவே சோபித்த நாஹிமிகம கருத்திட்டம் (மஹவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவு)	1. இந்திய அரசு ரூ.மி. 300 2. இலங்கை அரசு ரூ.மி. 195	முதலாவது ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு இந்த ஆண்டில் CECB நிறுவனத்தின் மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நிர்மாணிப்புக்களை நிறைவு செய்யும் வரை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டுள்ளது.	அநுராதாபுரம் மாவட்டத்தின் மஹவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவின் எலபத்கம கிராம அலுவலர் பிரிவில் வறிய குடும்பங்கள் 153 இற்கு வீடுகளை பெற்றுக் கொடுப்பது உட்பட அடிப்படை சமூக உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல்.
நாடளாவிய மாதிரிக் கிராமம் கருத்திட்டம்	ரூ.மி. 300	நிர்மாணிப்புக்களை நிறைவு செய்யும் வரை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டுள்ளது.	வறிய குடும்பங்கள் 600 இற்கு பங்கேட்பு அணுகுமுறை அடிப்படையில் வீடுகளை நிர்மாணித்தல்.
ஹம்பாந்தோட்டை மாவட்ட மாதிரிக் கிராமம் கருத்திட்டம்	ரூ.மி. 300	நிர்மாணிப்புக்களை நிறைவு செய்யும் வரை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டுள்ளது.	வறிய குடும்பங்கள் 600 இற்கு பங்கேற்பு அணுகுமுறை அடிப்படையில் வீடுகளை நிர்மாணித்தல்.
தென் மாகாண மாதிரிக் கிராமம் கருத்திட்டம் 1	ரூ.மி. 300	நிர்மாணிப்புக்களை நிறைவு செய்யும் வரை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டுள்ளது.	வறிய குடும்பங்கள் 600 இற்கு பங்கேற்பு அணுகுமுறை அடிப்படையில் வீடுகளை நிர்மாணித்தல்.
வட மாகாண மாதிரிக் கிராமம் கருத்திட்டம்	ரூ.மி. 300	நிர்மாணிப்புக்களை நிறைவு செய்யும் வரை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டுள்ளது.	வறிய குடும்பங்கள் 600 இற்கு பங்கேற்பு அணுகுமுறை அடிப்படையில் வீடுகளை நிர்மாணித்தல்.

2 அத்தியாயம்

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு (பிரிவு அடிப்படையில்)

2.1 நிருவாகப் பிரிவு

2022 முன்னேற்றம்

➢ சுயவிபரக் கோப்புகளின் முகாமைத்துவம்

இந்த அமைச்சு சம்பந்தமான சகல அலுவலர்களினதும் சுயவிபரக் கோப்பு நடவடிக்கைகள் அதாவது வருடாந்த சம்பள ஏற்றங்களைப் பெற்றுக் கொடுத்தல், சேவையில் நிரந்தரமாக்குதல், பதவி உயர்வு, இடமாற்றம், பதில் கடமையாற்றுவதற்கு நியமனம் செய்தல் மற்றும் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுறுத்தல் போன்ற நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

➢ நிதி முகாமைத்துவம்

அமைச்சுச் செயலாளரினால் நிதிப் பிரமாணம் 135 இன் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில் நிருவாகப் பிரிவுக்குக் கிடைக்கின்ற சகல செலவின கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், இடர் கடன்/விசேட முற்பணங்களுக்கான கோரிக்கைகள் கொடுப்பனவுகளுக்காக செவ்வைபார்க்கப்பட்டு அங்கீகாரம் மற்றும் சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுப்பதும் தாமதமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

➢ அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்

2022 ஆம் ஆண்டில் ஏனைய பிரிவுகளிடமிருந்து கிடைத்த அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் 02 ஐ அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சரவைத் தீர்மானங்கள் 56 அமைச்சின் பிரிவுத் தலைவர்கள் மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. மேலும் இந்த அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட பாராளுமன்ற வினாக்கள் 10 தொடர்பான விடைகளை அனுப்பிவைப்பதற்கான ஒருங்கிணைப்பும் மேற்கொள்ளப்பட்டு உரியவாறு பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

➢ அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் செயலாற்றுகை அறிக்கைகள், ஆண்டறிக்கைகள் 2022

விபரம்	ஆண்டறிக்கைகள் / செயலாற்றுகை அறிக்கைகள்
பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆண்டறிக்கைகள் / செயலாற்றுகை அறிக்கைகள்	• கட்டிடத் திணைக்களத்தின் 2021 ஆண்டறிக்கை • அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் 2020 மற்றும் 2021 செயலாற்றுகை அறிக்கை • நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 ஆண்டறிக்கை • அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2016 மற்றும் 2017 ஆண்டறிக்கை • தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 ஆண்டறிக்கை
பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அடுத்த கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆண்டறிக்கைகள்/ செயலாற்றுகை அறிக்கைகள்	• நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை 2020 ஆண்டறிக்கை • தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை 2019 ஆண்டறிக்கை • அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆண்டறிக்கை

➢ நிலையான ஆதன முகாமைத்துவம்

- **வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு**

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறைப் பிரிவு மற்றும் மீள்குடியேற்றப் பிரிவு மற்றும் தற்காலிகமாக பெற்றுக் கொள்ளப்பட்ட 42 வாகனங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்காக ரூபா 11,821,489.57 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவின் வளிச்சீராக்கி இயந்திரங்கள், பிரதிபண்ணி இயந்திரங்கள், கணினி, அச்சு மற்றும் பெக்ஸ் இயந்திரங்கள், கைவிரல் அடையாள இயந்திரம், மென்பொருள், உள்ளக தொலைபேசிக் கட்டமைப்பு, கட்டிடப் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 2,174,596.62 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

- **மீள்குடியேற்றப் பிரிவு**

மீள்குடியேற்றப் பிரிவின் 14 வாகனங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்காக ரூபா 5,135,963.11 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.
மீள்குடியேற்றப் கட்டிடப் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 15,861,050.62 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

➢ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

அலுவலர்களின் திறன் விருத்திக்காக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவின் அலுவலர்கள் 58 பேருக்கு தமிழ் மொழிப் பயிற்சியும், பதவி நிலை அலுவலர்கள் 05 பேருக்கு உள்நாட்டுப் பயிற்சியும்

உள்ளடங்களாக அலுவலர்கள் 92 பேருக்கு மற்றும் மீள்குடியேற்றப் பிரிவின் அலுவலர் ஒருவருக்கு 2022 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அது முறையே ஒவ்வொரு பிரிவுகளிலும் ஒட்டுமொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் 1% முதல் 70% வரையான விகிதங்களைக் கொண்டதாக உள்ளது. நிலவிய கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் ஒன்லையின் முறை ஊடாக அலுலவர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன், ஒன்லையின் முறையியல் ஊடாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவின் பதவி நிலை அலுவலர் ஒருவருக்கு வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் கீழ் ஒவ்வொரு அலுவலருக்கும் 12 மணி நேர பயிற்சி வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை என்பதுடன், பயிற்சி வாய்ப்புக்களுக்கு விண்ணப்பித்த ஒவ்வொரு அலுவலருக்கும் யாதாயினுமொரு பயிற்சி வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

➢ பொது மக்களின் கோரிக்கைகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

2022 ஆம் ஆண்டு தொடர்பில் சனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்திடமிருந்து இந்த அமைச்சின் நிருவாகப் பிரிவுக்கு மக்களின் கோரிக்கை கடிதங்கள்கள் சுமார் 1,400 கிடைத்துள்ளதுடன், பிரதானமாக பொது மக்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது வீடமைப்புத் துறை தொடர்பிலாகும் என்பதுடன், அவ்வாறான கோரிக்கைகள் வீடமைப்புப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் ஊழியர்களின் தாபன சிக்கல்கள் மற்றும் தொழில்சார் சிக்கல்கள் தொடர்பில் 36 கடிதங்கள் கிடைத்துள்ளதுடன், மேற்படி கடிதங்கள் நேரடியாக உரிய நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்படுவதுடன், கிடைக்கின்ற விடைக்கு அமைய விண்ணப்பதாரிகளை அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அரசியல் பழிவாங்கல் தொடர்பில் 2022 ஆம் ஆண்டுக்கு 03 கடிதங்கள் கிடைத்துள்ளதுடன் மேற்படி கடிதங்கள் தொடர்பில் உரிய நிறுவனங்களிடம் வினவி கிடைக்கும் விடைக்கு அமைய விண்ணப்பதாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மேற்படி மக்களின் கோரிக்கைகளுக்கு தாமதிக்காது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், தாபன மற்றும் தொழில்சார் சிக்கல்கள் தொடர்பில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

➢ அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மனிதவள முகாமைத்துவம்

அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மனிதவள முகாமைத்துவத்துக்காக பின்வருமாறு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் ஆரம்ப வகுதியைச் சேர்ந்த (PL வகுதி) அத்தியாவசியமான பதவிகள் 77 ஐ ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டுள்ளன.
- அமைச்சின் சிபாரிசுடன் சமர்ப்பிக்கப்பட்ட, அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர், தொழில்நுட்ப சிறப்புத்தர சேவை வகுதிக்கு உரிய பதவி உயர்வு வழங்கும் 01 நடவடிக்கைமுறைக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட கனிய அளவை உதவியாளர் பதவிகளின் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதை மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- கட்டிட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக திருமதி கே.ஜி.எஸ். குமுதுனீ நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தேசிய ஆலோசனை சபைக்கு புதிய உறுப்பினர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தம் செய்ய சிபாரிசுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு அத்தியாவசியமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்ய அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- அரச பொறியியல் கூட்டுத்தாபத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையில் காணப்பட்ட சிக்கல் நிலைமைகளை தீர்த்துக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- நடுத்தர வருமான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித கருத்திட்டத்திற்கு, நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு பிரிவின் பதவிகளின் சேவைக் காலத்தை 2023.03.31 ஆம் திகதி வரை நீடிக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.
- வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட் கூட்டுத்தாபனத்திற்கு நிரந்தர பதவியணிக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் வரை ஒப்பந்த அடிப்படையில் அத்தியாவசிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்ய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- விருப்பத்தின் பேரில் ஓய்வுறுத்துவதன் மூலம் தேசிய இயந்திரசாதன நிறுவகத்தின் பதவியணியை திருத்தம் செய்வதற்குத் தேவையான ஆலோசனைகள் அமைச்சினால் தேசிய இயந்திரசாதன

நிறுவகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், திருத்திய பதவியணி வரைவு தேசிய இயந்திரசாதன நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

➢ தகவல் அறியும் சட்டத்தை அமுல்படுத்தல்

தகவல் அறியும் சட்டம் தொடர்பான 05 கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், ஒருங்கிணைப்புச் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2023 எதிர்கால நோக்கு

இப்பிரிவின் பணிகளை விளைதிறனுடனும், வினைத்திறன்மிக்கதாகவும் பேணிவரத் தேவையான தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2.2 திட்டமிடல் பிரிவு

2022 முன்னேற்றம்

- **வருடாந்த செயற்றிட்டம்**

ஒவ்வொரு வருடமும் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பிலான செயற்பாடுகள் மற்றும் மதிப்பீடுகளை உள்ளடக்கியதாக வருடாந்த செயற்றிட்டம் தயார் செய்யப்படுவதுடன், 2022 ஆம் ஆண்டுக்கும் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் வருடாந்த செயற்றிட்டம் தயார் செய்யப்பட்டது.

➢ முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்

வருடாந்த செயற்றிட்டத்திற்கு அமைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முறையாக அமுல்படுத்துவதை அவதானிப்புச் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சரின் தலைமையில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் 44 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. ஆண்டின் நடுப்பகுதியில் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலாயினும் எதிர்பார்த்தவாறு முன்னேற்ற மீளாயவுக் கூட்டங்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒன்லையின் முறையிலும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

➢ முன்னேற்றத்தை அறிக்கையிடல்

கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு காலாண்டு அடிப்படையிலும், வீடமைப்பு, நகர அபிவிருத்தி அமைச்சுக்கு மாதாந்தமும், அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் முன்னேற்றங்கள் தாமதமின்றி அறிக்கையிடப்பட்டன. இதற்கு மேலதிகமாக, சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்ற 'கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டம்' தொடர்பில் இந்த அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் குழுவுக்கு தாமதமின்றி மாதாந்தம் அறிக்கையிடப்பட்டன.

➢ அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டு உதவியைப் பெற்றுக் கொள்ளல்.

2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் இந்த அமைச்சின் கீழ் வெளிநாட்டு உதவியின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற 05 கருத்திட்டங்கள் காணப்பட்டன. மேற்படி சகல கருத்திட்டங்களுக்கும் நிதி உதவி வழங்கப்படுவது இந்திய அரசினாலாகும். அவற்றுக்கு உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அத்தியாவசிய மேலதிக வேலைகளுக்கு நிதி அமைச்சினாலும் ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

2018 யூலை 26 ஆம் திகதி நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட சங்கைக்குரிய மாதுளுவாவே சோபித்த நாஹிமிகம கருத்திட்டத்தின் ஒப்பந்த நடவடிக்கைகள் ஒப்பந்தக் கம்பனியின் பலவீனங்கள் காரணமாக இடைநடுவே தடைப்பட்டது. மேற்படி வீடமைப்புக் கருத்திட்டம் 2021 ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. வீடமைப்பு மற்றும் நகர அபிவித்தி கௌரவ அமைச்சரின் ஆலோசனையின் பேரில் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சரின் தலையீட்டுடன் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் நிதி அமைச்சுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களை அடுத்து புதிய மதிப்பீட்டுக்கு அமைய மேலதிகமாக செலவிடப்பட வேண்டிய தொகையை இலங்கை அரசினால் பெற்றுக் கொடுக்கும் இணக்கப்பாட்டுடன் மீண்டும் இதனை ஆரம்பிக்க முடிந்தது.

153 வீடுகளை பூர்த்தி செய்தல் மற்றும் விஹாரைகளை மையமாகக் கொண்டு அத்தியாவசியமான நிர்மாணிப்புக்களுக்கு இந்திய அரசினால் மேலும் வழங்கக்கூடியதாக உள்ள ரூ.மி. 253 இற்கு மேலதிகமாக ரூ.மி. 40 ஆன தொகையை இலங்கை அரசினால் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வனைத்து நிர்மாணிப்புக்களையும் பொறியியல் பணிகள் பற்றிய மத்திய மதியுரைப் பணியகத்தினூடாக நிறைவேற்றிக் கொள்ள அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, தற்போது இலங்கை அரசு வழங்கும் தொகைக்கு மேற்படி நிர்மாணப் பணிக்கான உடன்படிக்கையில் CECB நிறுவனத்துடன் கையொப்பமிட்டு நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம், CECB நிறுவனத்துடன் 122 வீடுகள் தொடர்பில் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு மேலதிகமாக 'ஸ்ரீ சோபித நாஹிமி கிராமத்துக்கு' குழாய் நீர் வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டு தற்போது அதன் வேலைகள் நிறைவு செய்யப்பட்டு சமுதாய நீர் சங்கம் ஒன்றின் ஊடாக பராமரிப்புப் பணிகளை பேணிவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஏனைய இந்திய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 04 உம் தற்போது குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை அடையப்பெற்றுள்ளன. 2400 வீடுகளில் 2086 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 607 வீடுகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். தற்போது நிலவும் கட்டிடப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் பயனாளிகளின் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக தற்போது நிர்மாணப் பணிகள் மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், உதவித் தொகையை அதிகரிப்பதற்காக இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு மேலதிக ஏற்பாடுகளை எதிர்பார்த்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்படுகின்றன.

2023 எதிர்கால நோக்கு

இன்று நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியிலாயினும், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அத்தியாவசிய நிர்மாணப் பணிகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகளை கிடைக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய தொடர்ச்சியாக பேணிவருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.3 – வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

2.3.1 வீடமைப்புப் பிரிவு

2022 இன் முன்னேற்றம்

- **"உங்களுக்கு வீடு – நாட்டுக்கு எதிர்காலம்" வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்**

வருடாந்தம் குறைந்த வருமானம் பெறுகின்ற 14,022 குடும்பங்களுக்கு ரூ. 650,000 எனும் உச்சளவுக்கு உட்பட்டு நிர்மாணிப்பின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டம் கட்டமாக உதவித் தொகை வழங்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் கீழ் 2022 ஆம் ஆண்டு 5878 வீடுகள் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளன.
இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குக் குழுவாக குறைந்த வருமானம் பெறுவோரின் பொருளாதாரத்துக்கு பலம் சேர்ப்பதற்காக மேற்படி குடும்பங்களை வீட்டுத் தோட்டப் பயிர் செய்கையில் ஈடுபடுத்துவதற்கும், அதற்குத் தேவையான விதைகள், கன்றுகள் மற்றும் விவசாய தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **"மிஹிந்து நிவஹன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்**

புத்த சாசனத்திற்கு பிள்ளைகளை அர்ப்பணித்துள்ள பொருளாதார ரீதியில் கடினமான நிலைமையில் வாழ்ந்துவரும் வீடுகள் இல்லாத அல்லது பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டு உரிமையாளர்களான பெற்றோரின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ரூபா 600,000 ஆன உச்சளவுக்கு உட்பட்டு வீடமைப்பு உதவிகளை வழங்குவது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.
2022 ஆம் ஆண்டில் பயனாளிகள் 77 பேருக்கு வீடமைப்பு உதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் 8 வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- **மிகிந்துபுர வீடமைப்புக் கருத்திட்டம்**

2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் மிகக் குறைந்த முன்னேற்றம் காணப்படுவதன் காரணமாக நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான அங்கீகாரங்களை பெற்றுக் கொள்வது உள்ளிட்ட ஆரம்ப கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் இக்கருத்திட்டத்தின் அபிவிருத்தியாளராக CDC Industrial Infras நிறுவனம் புதிய அபிவிருத்தியாளராக தெரிவு செய்யப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அபிவிருத்தியாளருக்கு இடையே உடன்படிக்கை செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இதனை அடுத்து நிர்மாணிப்புக்களை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- **"பவர் ஹைட்" வீடமைப்புக் கருத்திட்டம்**

இக்கருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் 25,000 இற்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கும், அவ்வாறு நிர்மாணிக்கப்படுகின்ற ஒவ்வொரு வீட்டினதும் கூரை மீது 20KW சூரிய மின் கலன்களை பொருத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நிதி வசதிகள் Bank of Australia மூலம் வழங்கப்படும் என்பதுடன், கருத்திட்டத்தின் அபிவிருத்தியாளராக Sunpower – Powerhyde Consortium செயற்படுகின்றது.

இதன் முதற் கட்டத்துக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 2015/2019 காலப்பகுதியில் மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளைப் பயன்படுத்திக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டது. கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு 20 வருட காலம் வரை வீடுகளின் உரிமை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தானதாகக் காணப்படும் என்பதுடன், சூரிய கலன்களின் உரித்து அபிவிருத்தியாளருக்கு உரிமையானதாக இருக்கும். 20 வருடங்களின் பின்னர் அதன் உரித்து பயனாளிக்குப் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. அதற்கமைய உருவாக்கப்படும் மின்சாரத்துக்கு மின்சார சபையினால் முதல் 20 வருடங்களில் அபிவிருத்தியாளருக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் என்பதுடன், அதன் பின்னர் பயனாளிக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

- **சொய்சாபுர மீள்வீடமைப்புமயமாக்கல் வீடமைப்புக் கருத்திட்டத்தின் கட்டம் III இன் கீழ் வயலம் II மற்றும் III இற்கு உரித்தான புதிய இரண்டு கட்டிடங்களை நிர்மாணித்தல்**

இக்கருத்திட்டத்தின் கீழ் 30 வீடுகளைக் கொண்டதாக 2 கட்டிடங்கள் முன் விற்பனை அடிப்படையில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக நிர்மாணிக்கப்படுகின்றன. இவற்றில் 10 வீடுகள் ஏற்கெனவே விற்பனை செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 20 வீடுகளுக்கும் பயனாளிகளைத் தெரிவு செய்துகொள்வது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
இதற்கு மேலதிகமாக,

- சியபத்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்
- ஹந்தானை வீடமைப்புக் கருத்திட்டம்
- உங்களுக்கு வீடு – நாட்டுக்கு எதிர்காலம் வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டம்

2.3.2 காணிகள் பிரிவு

- காணிகள் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்காக பிரதமர் அலுவலகம் மற்றும் சனாதிபதி செயலகத்திடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள மக்களின் கோரிக்கைகள் 45 உரிய பிரிவுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.
- அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்களுக்கும் உரித்தான காணிகளின் பதிவேடொன்றைப் பேணிவருதல்.
- காணிகள் கொள்ளலுக்காக காணிகள் ஆணையாளர், பிரதேச செயலாளர் மற்றும் உரிய திணைக்களங்களுக்கு 25 கோரிக்கைகள் சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டமை.
- 2022 ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களிலும் 1400 உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக 2018 இன் 23 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உறுதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக உரிய வீடமைப்புத் திட்டங்களின் கூட்டாட்சி வெளிப்படுத்தல்களை பதிவு செய்வதற்கு கட்டிடங்கள் திணைக்களத்தின் தகைமைச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்வது ஒருங்கிணைப்புச் செய்யப்படுகின்றது.

2.3.3 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

2022 முன்னேற்றம்

2022.01.01 ஆம் திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அலுவலகத்திற்கு வருகைதந்த மக்களின் சிக்கல்கள் மற்றும் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் கடமைசார் கடிதங்கள் 633 கிடைத்துள்ளதுடன், மேற்படி கோரிக்கைகளுக்கு தீர்வுகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தொலைபேசி மூலமும் பொது மக்கள் இப்பிரிவிடம் வினவும் பல்வேறு சிக்கல்கள் சம்பந்தமான விடயங்களுக்கு அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன. மேற்படி சிக்கல்களை முறையாக இனங்காண்பதற்காக வெளிக்கள பரிசோதனைகள் 06 மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அது பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும் 23 உறுதிகளின் பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் வழக்கு நடவடிக்கைகளுக்காக பல்வேறு நீதிமன்றங்களில் சாட்சியமளிப்பதற்காக ஆஜராவதும், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஆவணங்களைத் தயார் செய்வதும், சட்ட மாஅதிபருடன் நீதிமன்ற அலுவல்கள் தொடர்பிலான பணிகளை மேற்கொள்வதும், தேசிய வீடமைப்பு ஆணையாளர் தொடர்பான வழக்கு நடவடிக்கைகளுக்கு அவதானிப்புக்களை வழங்கி சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2023 எதிர்கால நோக்கு

- அண்மைக்காலம் வரை வெற்றிடமாகக் காணப்பட்ட 1973 இன் 1 ஆம் இலக்க வீட்டு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வீட்டு ஆதன உச்சவரம்பை மீளாய்வு செய்யும் சபை நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் தாமதமடைந்துள்ள உறுதிகளை வழங்குவதற்குத் தேவையான விலைமதிப்புச் செய்யும் பணிகளை துரிதப்படுத்தல்.
- வெளிக்கள பரிசோதனை மற்றும் அலுவலக பரிசோதனைகளை நடாத்தி வீடுகளில் வசிப்பவர்கள், வாடகைக் குடியிருப்பாளர்களின் சிக்கல்களைத் தீர்த்துவைப்பதன் மூலம் உறுதிகளைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வாடகை குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான ஆரம்ப கட்டப் பணிகளை மேற்கொள்ளல்.

- வழக்கு நடவடிக்கைகளுக்கு நீதிமன்றங்களில் சாட்சியளிப்பதற்கு ஆஜராதல், சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் சட்ட ஆலோசனைகளுக்கான கலந்துரையாடல்களில் பங்கேற்றல், சட்ட மாஅதிபருடன் நீதிமன்ற அலுவல்கள் தொடர்பில் ஏற்புடைய நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2.4 தொழில்நுட்பப் பிரிவு

2022 முன்னேற்றம்

2014 இன் 33 ஆம் இலக்க நிருமாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் 15 கட்டளைகளையும், 09 விதிகளையும் அங்கீகரித்தல் வேண்டும். இவற்றில் 13 கட்டளைகள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 06 விதிகள் தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன், மேலும் 02 கட்டளைகளையும், 03 விதிகளையும் வெளியிடத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
2014 இன் 33 ஆம் இலக்க நிருமாணத் தொழில் அபிவிருத்தி சட்டத்தை திருத்தம் செய்வதற்கான சட்டவரைவு தயார் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்வற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை கட்டிடக் கலைஞர் நிறுவகச் சட்டம் மற்றும் இலங்கை கனிய அளவை நிறுவக சட்டத்தை திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தனியார் உறுப்பினர் பிரேரணையொன்றாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்தை கூடுடிணைக்கும் சட்டவரைவு பற்றி சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் கருத்துக்களை பெற்றுக் கொண்டு கௌரவ அமைச்சரின் அறிக்கையைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு மேலதிகமாக இந்த ஆண்டிலும் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற நிர்மாண ஒப்பந்தங்கள் பற்றிய பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகள் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவை பற்றிய தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நிர்மாணத்துறை சம்பந்தமான நிறுவனங்களினால் அடிக்கடி சமர்ப்பிக்கப்படுகின்ற சிக்கல்கள் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்பட்டது.

2023 எதிர்கால நோக்கு

- நிர்மாண ஆலோசனை சபையின் கூட்டங்கள் ஒவ்வொரு காலாண்டுக்கும் நடாத்தப்பட்டு நிர்மாணங்கள் பற்றிய கொள்கைசார் தீர்மானங்கள் தொடர்பில் சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்ளல்.
- 2014 இன் 33 ஆம் இலக்க நிருமாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான சட்ட வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- 2014 இன் 33 ஆம் இலக்க நிருமாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் மேலும் அங்கீகரித்துக் கொள்ள வேண்டியுள்ள இரண்டு கட்டளைகள் மற்றும் மூன்று விதிகளை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடல் மற்றும் கட்டளைகளை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளல்.
- இலங்கை கட்டிடக் கலைஞர்களின் நிறுவன சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்று சட்ட வரையுள் சட்டவரைஞருக்கு அனுப்பி அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ளல்.
- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிகளை அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்தல்.
- நிர்மாணக் கைத்தொழில் பற்றி பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேரணைகள் மற்றும் சிக்கல்கள் தொடர்பில் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு தீர்வுகளை வழங்குதல்.

2.5 நிர்மாணப் பிரிவு

2022 முன்னேற்றம்

- **அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்தல்**

- நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 ஆண்டறிக்கையை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்.
- தேசிய இயந்திரசாதன நிறுவகத்தின் சலுகைக் காலத்தை நீடித்தல் மற்றும் நிர்மாண ஒப்பந்தத்தின் இன்றைய வரையறைகளை அதிகரிப்பதற்கான அங்கீகாரம்.
- இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நிர்மாணக் கைத்தொழிலின் நிலைத்திருத்தலுக்கான நிவாரண நடவடிக்கைகளை பின்பற்றல்.

- நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமைக்கு மத்தியில் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒப்பந்தங்களை கையளிப்பது தொடர்பான விலை வித்தியாசங்கள் பற்றிய ஆலொசனைகளை வழங்குதல்.
- வெலிகட சிறைச்சாலைகள் தொகுதியை பொரளையிலிருந்து ஹொரனை, மில்லேவ பிரதேசத்திற்கு கொண்டு செல்லல் மற்றும் வெலிகட வளவில் அமைந்துள்ள காணியை கலப்பு நகர அபிவிருத்திக் கருத்திட்டமொன்றுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கான உத்தேச ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- தேசிய இயந்திரசாதனங்கள் நிறுவகமானது இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்திலிருந்து பிரிந்து சுயாதீன நிறுவனமொன்றாக செயற்படுதல்.
- காலி மாகாண வீதிகளை காப்பட் இடும் கருத்திட்டத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பட்டியல்களுக்கு நிதி ஒதுக்குமாறு கோரல்.
- அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய இயந்திரசாதன நிறுவகத்தின் ஊழியர்களுக்கு உத்தேச சுயவிருப்பத்தின் பேரிலான ஓய்வூதியத்திட்டத்திற்கு அமைய சம்பளமற்ற லீவு பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பளித்தமை.
- நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள அரச பொறியியல் கூட்டுத்தாபனதிற்கு நேரடியாக ஒப்பந்தங்களை கையளித்தல்.
- இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய இயந்திரசாதன நிறுவகத்தின், 2022 ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களுக்கான நிலுவை சம்பளம் மற்றும் 2022 அக்டோபர் முதல் 2023 மார்ச் மாதம் வரை செலுத்த வேண்டிய சம்பளங்களுக்கு நிதி ஏற்பாடுகளை செய்துகொள்ளல்.
- இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய இயந்திரசாதன நிறுவகத்தை மீளத்தாபிப்பதற்கு அவசியமாகின்ற ஏற்பாடுகள் மற்றும் நிதி வளங்களை செய்துகொடுத்தல்.

➢ அமைச்சரவைக் குறிப்புக்களை சமர்ப்பித்தல்

- இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நிர்மாணக் கைத்தொழிலின் நிலைத்திருத்தலுக்காக நிவாரண செயன்முறையை பின்பற்றல்.

➢ ஏற்புடைய ஏனைய செயற்பணிகள்

- வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தை மீளமைக்கத் தேவையான ஏற்பாடுகள் மற்றும் நிதி வளங்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்.
- எமது பிரிவின் கீழுள்ள நிறுவனங்களிடமிருந்து வேறு அமைச்சுக்கள் திணைக்களங்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- எமது பிரிவின் கீழுள்ள நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகைகளை அறவிட்டுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மரந்தகஹமுல நெல் களஞ்சியம் மற்றும் வர்த்தக் கட்டிடத் தொகுதியை அபிவிருத்தி செய்தல். வர்த்தகக் கட்டிடத் தொகுதியில் 115 வர்த்தக நிலையங்களின் நிர்மாணப் பணிகளது எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்தல் மற்றும் மேற்படி வர்த்தக நிலையங்களை பராமரிப்புச் செய்து பேணிவருவதற்கு அமைச்சு மட்டத்தில் தலையீடு செய்தல்.
- கட்டுவாபிட்டி புனித செபஸ்தியன் தேவாலயத்தில் ஞாயிறு அறநெறிப் பாடசாலை கட்டிடத்தின் எஞ்சிய புனரமைப்புப் பணிகளை பூர்த்தி செய்துகொள்ளும் கருத்திட்டத்திற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தேசிய இயந்திரசாதன நிறுவனத்தை இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திலிருந்து பிரிந்து சுயாதீன நிறுவனமாக இயங்கச் செய்தல்.
- ரன்பொக்குனகம உத்தேச குறைந்த வருமானம் பெறுவோருக்கான மூன்று மாடிகளைக் கொண்ட தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்.
- அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்திற்கு வேறு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதான கருத்திட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளல்.
- வெரல்லவத்த வீடமைப்புத்திட்டம் தொடர்பான நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான உதவிகளை அமைச்சு மட்டத்தில் பெற்றுக் கொடுத்தல்.
- கம்பஹா மாவட்டத்தில் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வாழ்வாதார அபிவிருத்திக்கான உதவிகளை வழங்கும் நோக்கத்துடன், சேதன பசளை உற்பத்தியை மேம்படுத்துவது தொடர்பிலான கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை அவதானிப்புச் செய்தல்.
- கொழும்பு 10, சங்கராஜ மாவத்தை இலக்கம் 541 இல் அமைந்துள்ள எச்டிஎவ்சீ வங்கிக்கு உரித்தான காணி தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை தயார் செய்தல்.

2023 எதிர்கால நோக்கு

➢ அரச பொறியியல் கூட்டுத்தாபனம், தேசிய இயந்திரசாதன நிறுவகனம் மற்றும் வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட் கூட்டுதாபனம் ஆகிய நிறுவனங்களுடன் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்து கலந்துரையாடல். அதனூடாக ஒவ்வொரு நிறுவனத்தையும் முறையாக

இலாபம் உழைக்கும் நிறுவனங்களாக பேணிவரத் தேவையான அமைச்சின் பங்களிப்பை பெற்றுக் கொடுத்தல்.

- தற்போது அமுல்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை துரிதமாக நிறைவு செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய இயந்திரசாதன நிறுவகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்.
- மேற்படி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை நிறைவேற்றும் போது அமைச்சரவை அங்கீகாரம் அவசியமாயின் அதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- எமது நிர்மாணப் பிரிவுக்கு அமைச்சின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சகல செயற்பணிகளையும் பொறுப்பு மற்றும் இலகுகளுக்கு அமைய நிறைவேற்றும் வகையில் பிரிவு தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2.6 பொறியியல் சேவைகள் பிரிவு

2022 முன்னேற்றம்

➢ தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

- நிவ்ஹெம் ஸ்கெயார் தொடர்மாடி வீடமைப்புத்திட்டத்தின் 105 வீடுகளை புதுப்பிக்கும் கருத்திட்டத்தின் மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டியுள்ள நிதியை விடுவித்துக் கொள்வது தொடர்பாக உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.
- நாட்டில் ஏற்பட்ட பொருளாதார உறுதியின்மை நிலைமை காரணமாக நிர்மாணக் கருத்திட்டங்களில் இடம்பெற்றுள்ள சிக்கல்களுக்கு தொழில்நுட்ப ரீதியாக தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுத்தல்

➢ ஓசன் வீவ் டிவலப்மன்ட் தனியார் கம்பனி

- கஹதுடுவ வீடமைப்புக் கருத்திட்டத்தின் கட்டம் 11 இன் கீழ் உத்தேச 36 இரு மாடி வீடுகளில் 11 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அவற்றில் ஒரு மாதிரி வீட்டின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு முன் விற்பனை நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
- உத்தேச தெல்கந்த சொகுசு தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டத்திற்கு விருப்பங்களை கோருவதற்கு சட்ட மாஅதிபரின் ஆலோசனை உட்பட சகல நடவடிக்கைகளையும் ஆயத்தப்படுத்தல்.
- ஓசன் ரவர் கட்டிடத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கு ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்து கொள்வதற்கான பெறுகை நடவடிக்கைகளுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- **நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம் எனும் நிறுவனம்**
- நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நிலைமை காரணமாக சீ பிரீஸ் மற்றும் லாவன்யா ஹெயிட்ஸ் கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் நிதிசார் அடிப்படையில் ஏற்பட்ட தடைகளை தவிர்த்துக் கொள்ளத் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முன் விற்பனை நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு மற்றும் இற்றைப்படுத்தத் தேவையான அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயார் செய்வதற்கு அவதானிப்பு மற்றும் சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

➢ நிலையான தொழில்நுட்பக் குழு நடவடிக்கைகள்

- 2022 ஆம் ஆண்டு 66 கருத்திட்டங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமனுக்களுக்கு நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டமை.
- ஒரு ஒப்பந்த வித்தியாசம் திணைக்கள பெறுகைக் குழுவின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டமை.

➢ தகவல் தொழில்நுட்பப் பிரிவு

- இப்பிரிவுக்கு கடமை நடவடிக்கைகள் இணைப்புச் செய்யப்பட்ட பின்னர் அமைச்சின் சகல கணினி இயந்திரங்களையும் புதுப்பிக்கும் பணிகளை அமைச்சினுள்ளேயே செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொண்டமை.

2023 எதிர்கால நோக்கு

- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, ஓசன் வீவ் டிவலப்மன்ட் தனியார் கம்பனி, நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் எதிர்கால முன்னேற்ற மீளாய்வுக்கு உதவி வழங்கி தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல். வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தைக்

கட்டியெழுப்பத் தேவையான ஊந்துசக்தியை இந்த நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு, அந்நியச் செலாவணியை கொண்டுவரக்கூடிய வகையில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களை இற்றைப்படுத்த வழிகாட்டல்.

- எமது பொறியியல் பிரிவுக்கு அமைச்சின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சகல செயற்பணிகளையும் பொறுப்பு மற்றும் இலக்குகளுக்கு அமைய நிறைவேற்றும் வகையில் பிரிவு தொடர்பில் உரிய தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2.7 நிதிப் பிரிவு

2022 முன்னேற்றம்

2022 ஆம் ஆண்டுக்கு வரவு செலவுத்திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டள்ள மூலதன மற்றும் மீண்டெழும் ஏற்பாடுகள் தொடர்பிலான கட்டுநிதியைப் பெற்றுக் கொண்டு அத்தொகையை உச்சளவு வினைத்திறன்மிக்கதாக்க நிறுவனத்திற்குள் உரிய நேரத்திற்குள் விநியோகித்து அறிக்கைகளைப் பேணிவருதல் மற்றும் மாதாந்து, வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்து உரிய நேரத்திற்கு பெற்றுக் கொடுப்பதும் நிதிப் பிரிவின் பிரதான செயற்பணியாகும்.

2022 ஆம் ஆண்டுக்கு ரூ.மி. 3713.12 மற்றும் 452.456 முறையே மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களாக வரவு செலவுத்திட்டத்தினால் ஒதுக்கப்பட்டிருந்தது. மேற்படி நிதி ஏற்பாடுகளில் மூலதன செலவினத்திற்கு ரூ.மி. 2684.19 உம், மீண்டெழும் செலவினத்திற்கு ரூ.மி. 416.893 உம் செலவிடப்பட்டுள்ளது.

2023 எதிர்கால நோக்கு

அமைச்சின் வினைத்திறனை வளர்ப்பதற்காக அவ்வவ் பிரிவுகளுடன் நல்லதொரு ஒருங்கிணைப்பைப் பேணி அமைச்சுக்குத் தேவையான சகல பொருட்களையும் உச்ச வினைத்திறனுடன் பெறுகை மற்றும் களஞ்சியப்படுத்தல், விநியோகிப்பதன்
மூலம் அமைச்சின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவது மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறே நல்லதொரு நிதிசார் கட்டுப்பாட்டைப் பேணிவருவதற்கான புதிய முறையியல்களை அறிமுகம் செய்வதும் நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2.8 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

2022 முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டில் 04 கணக்காய்வு அறிக்கைகளின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2022.12.31 ஆம் திகதிக்கு கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட்டுள்ளன. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் 11 விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 05 விசாரணைகளின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023 எதிர்கால நோக்கு

2023 ஆம் ஆண்டில் கூடுதல் எண்ணிக்கையான விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனைகளுக்கு கூடுதல் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 ஐ காலாண்டு அடிப்படையில் நடாத்தவும் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.9 மீள்குடியேற்றப் பிரிவு

2022 முன்னேற்றம்

- **புதிய வீடுகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம்**

2022 ஆம் ஆண்டில் 1720 வீடுகளை நிர்மாணிப்பதை நிறைவு செய்வதற்கும், 1302 வீடுகளை கூரை மட்டம் வரையும், 309 வீடுகளை சுவர் மட்டம் வரையும், 63 வீடுகளை அடித்தள மட்டம் வரையும் நிர்மாணிப்பதை பூர்த்தி செய்ய முடிந்தது.

- **மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் துப்பரவேட்பாட்டு வசதிகளில் குடிநீர் கருத்திட்டங்கள், விவசாயத்துக்குத் தேவையான நீர்க் கருத்திட்டங்கள், வீட்டு மின் இணைப்புகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் காணிகளை இழந்துள்ள

மீளக் குடியமர்த்தப்படும் குடும்பங்களுக்கு காணிகளை கொள்வனவு செய்தல் போன்ற கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்ட போதிலும், நாடு முடக்கப்பட்டமை மற்றும் கட்டுநிதி கிடைக்காமை காரணமாக கையிலுள்ள பட்டியல்களுக்காக ரூ.மி. 390.347 மற்றும் மேலும் வேலைகளை நிறைவு செய்வதற்கு எஞ்சியுள்ள தொடர்ச்சியான கருத்திட்டங்களுக்கு ரூ.மி. 41.80 ஆன தொகை அமைச்சின் பொறுப்புக்களாக எஞ்சியிருந்தது.

அதற்கமைய 2022 ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூ.மி. 150.00 ஆன தொகை போதியதாக இருக்காமை காரணமாக வேறு செலவுத் தலைப்புக்களின் கீழ் காணப்பட்ட ஏற்பாடுகளையும் மாற்றம் செய்ததன் மூலும் ரூ.மி. 195.51 செலவிடப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டங்கள் 298 நிறைவு செய்யப்பட்டன.

- **நெனோ மற்றும் RO தொழில்நுட்பத்தைக் கொண்ட குடிநீர் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்**

மீளக்குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் வாழும் பிரதேசங்களில் நிலவும் கடும் சிறுநீரக நோய் வியாபிப்பதை தடுத்துக் கொள்வதற்காக சுத்தமான குடிநீர் பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற அசௌகரியங்களை கவனத்தில் கொண்டு நெனோ மற்றும் RO தொழில்நுட்பத்தைக் கொண்ட குடிநீர் கருத்திட்டங்களை அமுல்படுத்துவது 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான 50 அலகுகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி 50 அலகுகளில் 04 முல்லைத்தீவு மாவட்டத்திலும், 23 அலகுகள் கிளிநொச்சி மாவட்டத்திலும், 23 அலகுகள் வவுனியா மாவட்டத்திலும் தாபிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி சுத்திகரிப்பு அலகுகளில் 25 அலகுகளை பூர்த்தி செய்து சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இக்கருத்திட்டத்தின் ஊடாக பயனாளிகளான குடும்பங்கள் 19,015 இற்கு சுத்தமான குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

- **இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு முன்பூர்த்தி செய்யப்பட்ட கொன்க்ரீட் பெனல் வீடுகளை நிர்மாணித்தல்**

மோதல் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து தமது சொந்தக் கிராமங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு முன் பூர்த்தி செய்யப்பட்ட 300 கொன்க்ரீட் பெனல் வீட்டு அலகுகள் 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, திருகோணமலை மாவட்டத்தில் 150 வீடுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 100 வீடுகளும், அம்பாறை மாவட்த்தில் 50 வீடுகளுமாக நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அவற்றில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இந்த நிர்மாணிப்புக்களின் முன்னேற்றம் ஓரளவுக்கு கடந்த ஆண்டில் குறைந்த பெறுமதியை வெளிப்படுத்திருந்ததுடன், இந்த நிர்மாணப் பணிகள் 2022 ஆம் ஆண்டில் அமைச்சின் ஏற்பாடுகளின் மூலம் ரூ.மி. 38.02 ஆன தொகை ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. தற்போது 12 வீடுகள் முழுமையாக நிர்மாணித்து முடிக்கப்பட்டன.

- **நிலக்கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கை தேசிய நிலையம்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்தும் எஞ்சியுள்ள நிலக்கண்ணி வெடிகள் மற்றும் வெடிக்காது எஞ்சியுள்ள ஆயுத எச்சங்களை அகற்றும் செயன்முறையானது மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கு பெரும் உதவியாக அமைவதுடன், மேற்படி நிலக்கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காது எஞ்சியுள்ள ஆயுத எச்சங்களை அகற்றும் செயன்முறைக்குரிய கருத்திட்டத்திற்கென அமைச்சுக்கு 2022 ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 20 ஆன ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி ஏற்பாடுகள் இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான நிலக்கண்ணி வெடி அகற்றும் அலகின் தேவைகள் மற்றும் செலவினங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டதுடன், அதற்கு மேலதிகமாக நிலக்கண்ணி வெடிகள் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அதாவது அபாயகரமான வலயங்களிலுள்ள ஆட்களை விழிப்புணர்வூட்டி அவர்களின் அன்றாற வாழ்க்கையை பாதுகாத்து நிலக்கண்ணிவெடி விபத்துக்களை தடுத்துக் கொள்வது இதன் பிரதான நோக்கமாகும். மேலும் இதன் மூலம் நிலக்கண்ணி வெடி மற்றும் வெக்காதுள்ள ஆயுதப்பகுதிகள் காரணமாக இடம்பெறுகின்ற மரணங்கள் மற்றும் காயமடைவது மற்றும் அதன் மூலமான சமூக, பொருளாதார தாக்கங்களை குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது

.

மேலும், நிலக்கண்ணி வெடிகள் மற்றும் வெடிக்காதுள்ள ஆயுதப் பகுதிகள் மூலம் அனர்த்தத்திற்கு ஆளாகும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அவர்களுக்குத் தேவையான உளவியல் ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிக் கவனம் செலுத்தி அதற்கான வேலைத்திட்டங்களை திட்டமிட்டு அமுல்படுத்துவதும் இந்த நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளில் உள்ளடங்கும்.

நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவது 2022 ஆம் ஆண்டு முதல் இதுவரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதன் போது நிலக்கண்ணி வெடிகளை செயலிழக்கச் செய்து நிலத்தை விடுவித்தமை மற்றும் அதன் போது கண்டெடுக்கப்பட்ட நிலக்கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காதிருந்த ஆயுதப்பகுதிகள் பற்றிய தகவல்கள் கீழே அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதன் முன்னேற்றம

நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ள மொத்த காணிப்பகுதி (ச.மீ.)	தொடர்ந்தும் அகற்றப்பட வேண்டியுள்ள அளவு (ச.மீ.)	ஆட்கொல்லி நிலக்கண்ணி வெடி (1)	யுத்தத் தாங்கி அழிப்பு நிலக்கண்ணி வெடி (2)	சிறு ஆயுத் (3)	வெடிக்காதுள்ள ஆயுதப் பகுதிகள் (4)	1+2+3+4 மொத்தம்
5,166,388	14,568,863	24,008	66	22,446	3,810	50,330

2023 இன் எதிர்கால நோக்கு

இல.	விபரம்	2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடு (ரூ.மி.)
மீள்குடியேற்றப் பிரிவு		10,133.11
செயற்பாட்டு நடவடிக்கைகள்		461.00
	அமுலில் உள்ள கருத்திட்டங்கள	
01	மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (புதிய கருத்திட்டம்)	1000.00
02	மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (கையிலுள்ள பட்டியல்கள்)	390.34
03	மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (தொடர்ச்சியான வேலைகள்)	41.80
04	மீள்குடியேற்றும் செயலணி மூலம் நீண்டகாலமாக இடம்பெயர்ந்துள்ளவர்களுக்காக அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் கையிலுள்ள பட்டியல்கள்	206.85
05	நலன்புரி நிலையங்களிலுள்ள குடும்பங்களுக்கு காணிகளை கொள்வனவு செய்தல்	88.20
06	நிலக்கண்ணி டிவகளை அகற்றும் நிகழ்ச்சித்திட்டம்	130.00
07	வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மோதல்களினால் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு செங்கல் மற்றும் சீமேந்து மூலமான வீடுகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் * (2023 புதிய நிர்மாணிப்புக்கள்)	7,390.40
08	வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மோதல்களினால் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு செங்கல் மற்றும் சீமேந்து மூலமான வீடுகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் (கையிலுள்ள பட்டியல்கள்)	453.95
09	வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மோதல்களினால் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு செங்கல் மற்றும் சீமேந்து மூலமான வீடுகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் (தொடர்ச்சியான வேலைகள்)	116.03
10	வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மோதல்களினால் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிக்கமான கொன்க்றீட் பெனல் மூலமான நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம்	273.18
11	மீள்குடியேற்ற செயலணியினால் நீண்டகாலமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் (கையிலுள்ள பட்டியல்கள்)	36.36
12	நலன்புரி நிலையங்களிலுள்ள குடும்பங்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்	6.00
	மொத்த ஏற்பாடு	**10,133.11**

.....

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

டப்ளியு. எஸ். சத்யானந்த
செயலாளர

2023.02.28

03. அத்தியாயம்

3. 2022 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதி செயற்திறன்

3.1 நிதி செயற்திறன் கூற்று

தயவு செய்து பக்க இல 22 பார்கவும்

3.2 நிதி நிலபரம் தொடர்பிலான கூற்று

தயவு செய்து பக்க இல 23 பார்கவும்

3.3 காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று

தயவு செய்து பக்க இல 24 பார்கவும்

3.4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

தயவு செய்து பக்க இல 25 பார்கவும்

3.5 வருமானங்களினைத் திரட்டும் செயற்திறன்

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்துவதன் செயற்திறன் இறுதி ஒதுக்கீடு தொகையின் % என ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டது

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.7 நி.பி. 208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவர் ஒருவராக இத் திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.8 நிதி அல்லாத சொத்துக்களினை அறிக்கையிடுவதன் செயற்திறன்

தயவு செய்து பக்க இல 27 பார்கவும்

3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

தயவுசெய்து இணைப்பு 01 பார்க்கவும்

4 அத்தியாயம்

4. செயலாற்றுகைச் சுட்டிகள்;

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

விசேட சுட்டிகள்	எதிர்பார்த்த பெறுபேறுகளின் விகிதமாக (%) உண்மையாக பூர்த்தி செய்யப்பட்டவை		
	100%-90%	75%-89%	50%-74%
குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதன் கீழ் நாட்டின் சகல கிராம அலுவலர் பிரிவிலும் புதிதாக ஒரு வீட்டை நிர்மாணித்தல். • **உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம் நிகழ்ச்சிட்டம்** - 1465 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 19 வீடுகளின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. • **உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம் நிகழ்ச்சிட்டம்** - 8153 வீடுகளில் 4078 வீடுகளின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. • **மிகிந்து நிவஹன நிகழ்ச்சித்திட்டம் -** 77 புதிய வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 08 வீடுகளின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. • **மிகிந்து நிவஹன நிகழ்ச்சித்திட்டம் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டம் -** 557 வீடுகளில் 208வீடுகளின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டன.			✓ ✓ ✓ ✓
பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ள வீடுகளுக்கு கடன் உதவி வழங்குதல். ரூ.மி. 299 ஆன இலக்கின் கீழ் ரூ.மி. 258 ஆன முன்னேற்றம் அடையப்பெற்றது.		✓	
வழக்கு கிழக்கு பிரதேசங்களில் இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் 3324வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1720 வீடுகளின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.		✓	
வடக்கு, கிழக்கில் யுத்தம் நிலவிய பிரதேசங்களில் வெடிபொருட்களை அகற்றி நிலத்தை விடுவித்துக் கொள்ளல். 8.50 ச.கி.மீ. இல் 05.16 ச.கி.மீ. விடுவிக்கப்பட்டுள்ளது. (புதிய ஆய்வுக்கு அமைய 11.21 சதுர கி.மி. புதிதாக இனங்காணப்பட்டுள்ளன)			✓

குறிப்பு - அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான சுட்டிகள் அவ்வவ் நிறுவனங்களினால் தனித்தனியே சமர்ப்பிக்கப்படுகின்ற செயலாற்றுகை அறிக்கைகள் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

5 அத்தியாயம்

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (ளுனுபு) நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை

5.1 இனங்காணப்பட்ட குறித்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

இலக்கு/நோக்கங்கள்	இலக்கு	வெற்றிகளின் சுட்டி	இதுவரை பெற்றுக் கொண்ட வெற்றிகளின் முன்னேற்றம்		
			0% - 49%	50% -74%	75-%100%
• அரச மற்றும் தனியார் பங்குடைமையின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்களில் கொள்வனவாளர்களின் வருமானத்தின் அடிப்படையிலான இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டங்கள் மூலம் தேவையுள்ளவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுத்தல்.	09 மாகாணங்களிலும் 09 வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணித்தல்	மேல் மற்றும் சபறகமுவா ஆகிய 02 மாகாணங்களிலும் 02 வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.	✓ *		
• நீண்டகால இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் நகர்ப்புறப் பிரதேசமொன்றில் வீடொன்றைக் கொள்வனவு செய்வதற்கு இளம் ஜோடிகளுக்கு இயலுமாகின்றவாறு அரச தனியார் பங்குடைமையின் கீழ் விசேட வீடமைப்புக் கருத்திட்டங்களை நாடு முழுவதிலும் அமுல்படுத்தல்.	நாட்டின் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒரு வீடமைப்புக் கருத்திட்டம் என்ற வகையில் 160 வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணித்தல்	ද්‍ திவுலப்பிட்டி தேர்தல் தொகுதியில் ரன்பொகுனகம மற்றும் அநுராதபுர தஹய்யாகம வீடமைப்புக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	✓ *		

*** 03/2022 சுற்றறிக்கைக்கு அமைய நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளன.**

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள் விரிவாக

நிலைபேறான அபிவிருத்தித் தேசிய சபையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய அமைச்சின் விடயப்பரப்பு தொடர்பிலான நிலைபேறான அபிவிருத்தித் திட்டம் 2022 ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்டு முறையாக அமுல்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

6 அத்தியாயம்

6. மனித வளத் தோற்றப்பாடுகள்

6.1 பதவியணி முகாமைத்துவம்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் மீள்குடியேற்றப் பிரிவு

மட்டம்	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி		தற்போது உள்ள பதவியணி		பதவியணி பற்றாக்கு/மிகை	
	வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை	மீள்குடியேயற்றப் பிரிவு	வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை	மீள்குடியேயற்றப் பிரிவு	வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை	மீள்குடியேயற்றப் பிரிவு
சிரேஷ்ட மட்டம்	35	19	21	9	14	10
மூன்றாம் நிலை மட்டம்	06	5	02	01	04	04
இரண்டாம் நிலை மட்டம்	106	96	90	91	16	05
ஆரம்ப மட்டம்	52	27	29	18	23	09

6.2 இந்த அமைச்சின் நாடளாவிய சேவைகளில் ஒருசில பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்ட்துடன், அதற்கு முழுநேர அடிப்படையில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு மற்றும் பதில் கடமையாற்றுவதற்கு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், மேற்படி பதவிகளை நிரந்தரமாக நிரப்ப வேண்டிய தேவை அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்:ராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய வீடமைப்பு நிர்மாணத்துறைப் பிரிவு மற்றும் மீள்குடியேற்றப் பிரிவு உள்ளடங்களாக நிலவும் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை இவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நாடளாவிய சேவையின் சிரேஷ்ட மட்டம்
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் மீள்குடியேற்றப் பிரிவு

சேவை	வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை -2022.01.01) (2022.12.31 திகதிக்கு
செயலாளர்	01
மேலதிக செயலாளர் (இ.நி.சே.)	01
மேலதிக செயலாளர் (இ.பொ.சே.)	02
பணிப்பாளர் நாயகம் - இல. பொறி. சேவை	01
தேசிய வீடமைப்பு ஆணையாளர்	01
பணிப்பாளர் - இ.தி.சே.	02
பணிப்பாளர் - இ.நி.சே.	01
பணிப்பாளர் - இ.பொ.சே.	01
உள்ளகக் கணக்காய்வாளர் - இ.க.சே.	01
கணக்காளர் - இ.க.சே.	01
சிரேஷ்ட உதவிச் செயலாளர் - இ.நி.சே.	01
சிரேஷ்ட மீள்குடியேற்ற வசதிகள் வழங்குநர்	01

மூன்றாம் நிலை

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் மீள்குடியேற்றப் பிரிவு

சேவை	வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை (2022.12.31-2022.01.01) திகதிக்கு
நிருவாக அலுவலர் (முகாமைத்துவ சேவை அலுவலர் வகுதியின் சிறப்புத் தரம்)	01
மொழிபெயர்ப்பாளர் சேவை	03
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் சேவை	01
புள்ளிவிபரவியல் அலுவலர்	02

இரண்டாம் மட்டம்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் மீள்குடியேற்றப் பிரிவு

சேவை	வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை (2022.12.31-2022.01.01) திகதிக்கு
அபிவிருத்தி அலுவலர் சேவை	02
தொழில்நுட்ப அலுவலர் சேவை	03
முகாமைத்துவ உதவியாளர் சேவை	15
கனிய அளவை அலுவலர்	01
இலிகிதர் (மீள்குடியேற்றப் பிரிவு)	01

ஆரம்ப மட்டம்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் மீள்குடியேற்றப் பிரிவு

சேவை	வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை (2022.12.31-2022.01.01) திகதிக்கு
அலுவலக சிற்றூழியர் சேவை	18
சாரதி	14

6.3 மனிதவள அபிவிருத்தி

வீடமைப்பு நிர்மாணத்துறைப் பிரிவு

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் மற்றும் நடாத்தப்பட்ட நிறுவனம்	பயிற்றப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டத்தின் காலஎல்லை	ஒட்டுமொத்த முதலீடு		நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாடு / வெளிநாடு)	முடிவு / பெற்றுக் கொண்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		

Seminar on Solutions to Urban Environmental Sanitation Treatment system.) online)	01	02 to 22 November 2022	-	-	வெளிநாடு	
அறிவு முகாமைத்துவப் பயிற்சி	05	நாள்1	ரூ. 15,000	-	உள்நாடு	அறிவை முகாமைத்துவம் செய்து கொண்டு கடமைகளை நிறைவேற்ற வேண்டிய முறை.
தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணம்	03	நாள்2	ரூ. 21,000	-	உள்நாடு	தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணம் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக் கொடுத்தல்.
சாரதிகளுக்கான பாடநெறி (பல்தேவை)	05	மணி.2	-	-	உள்நாடு	சாரதிகளாக ஆட்சேர்ப்புச் செய்து கொள்ளப்பட்ட பல்தேவை ஊழியர்களுக்கான ஆரம்ப பயற்சி
விலை மனுக் கோரல் ஆவணங்களை தயார் செய்தல்	01	நாள்2	ரூ. =/7,000	-	உள்நாடு	பெறுகை செயன்முறையின் போது விலைமனுக் கோரல் ஆவணங்களை தயார் செய்வது பற்றிய பயிற்சி
வருடாந்த பொருட் கணிப்பீடு	01	நாள்2	ரூ. =/8,500	-	உள்நாடு	பொருட் கணிப்பீடு பற்றிய நடவடிக்கைகள் சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொடுத்தல்.
ஆவணங்களைக் கோப்பிடல்	01	நாள்2	ரூ. =/7,000	-	உள்நாடு	ஆவணக் கோப்புக்களை தயார் செய்வது பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல்
Diploma in Professional English	01	மணி.240	ரூ. /80,000 =	-	உள்நாடு	கடமை நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆங்கில அறிவைப் பெற்றுக்

						கொடுத்தல்.
அரசாங்க பெறுகை செயன்முறை	01	நாள்2	ரூ. =/7,500	-	உள்நாடு	அரசாங்க பெறுகை செயன்முறை பற்றிய பயிற்சி
e-procurement seminar	01	நாள்1	ரூ. =/7,750	-	உள்நாடு	
லீவு எழுதுனரின் செயற்பணி	01	நாள்2	ரூ. =/7,500	-	உள்நாடு	அரச அலுவலர்களுக்கு உரித்தான லீவுகள் பற்றி விழிப்புணர்வூட்டல்
அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயார் செய்தல்	01	நாள்2	ரூ. =/8,500	-	உள்நாடு	அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயார் செய்வது தொடர்பில் பயிற்றுவித்தல்
Transport Management	01	நாள்2	ரூ. =/7,500	-	உள்நாடு	வாகன முகாமைத்துவம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல்
தமிழ் மொழிப் பயிற்சி	01	மணி.200	ரூ. /15,000 =	-	உள்நாடு	தமிழ் மொழியை எழுதுதல், பேசுதல் வாசித்தல்
சுயவிபரக் கோப்புக்களை பேணிவருதல்	01	நாள்2	ரூ. =/7,500	-	உள்நாடு	அரச அலுவலர்களின் சுயவிபரக் கோப்புக்களை தயார் செய்தல் மற்றும் பேணிவருவது பற்றிய பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்.
தமிழ் மொழிப் பயிற்சி	33	மணி.150	ரூ. 56,250	-	உள்நாடு	தமிழ் மொழியை எழுதுதல், பேசுதல் வாசித்தல்
அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்தல்	27	மணி.2	-	-	உள்நாடு	அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயார் செய்வது தொடர்பில் பயிற்றுவித்தல்

புதிய அபிவிருத்தி அலுவலர்களுக்கான சேவைசார் ஆரம்பப் பயிற்சி	20	மணி.6	-	-	உள்நாடு	
சாரதிகளுக்கான கோட்பாடுசார் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்	22	மணி.6	ரூ. 2400	-	உள்நாடு	வீதி சமிஞ்சைகள், வீதி சட்டங்கள், ஒழுக்கம், நன்னெறிகள் மற்றும் சாரதிகள் மேற்கொள்ளும் தவறுகளுக்கு அறவிடும் தண்டப்பணம் பற்றி விழிப்புணர்வூட்டல்
களஞ்சிய முகாமைத்துவம், பொருட் பதிவேட்டுக் கட்டுப்பாடு, வருடாந்த பொருட் கணிப்பிடு மற்றும் சொத்துக்களை அகற்றல்	03	நாள்2	ரூ. 22,500	-	உள்நாடு	பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் பற்றி விழிப்புணர்வூட்டல்
தமிழ் மொழிப் பயிற்சி	20	மணி.150	-	-	உள்நாடு	தமிழ் மொழியை எழுதுதல், பேசுதல் வாசித்தல்

மின்குடியேற்றப் பிரிவு

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் மற்றும் நடாத்தப்பட்ட நிறுவனம்	பயிற்றப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டத்தின் காலஎல்லை	ஒட்டுமொத்த முதலீடு		நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாடு / வெளிநாடு)	முடிவு / பெற்றுக் கொண்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
சுய விபரப் கோப்புக்களை முகாமைத்துவம் செய்தல்	01	ஒரு மாதம் 01	ரூ. 8,500	-	உள்நாடு	வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது.

நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிப்புச் செய்வது எவ்வாறு என்பதை சுருக்கமாக விபரிக்குக.

- அரச சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு அவர்களின் கடமைசார் விடயப்பரப்பு தொடர்பாக பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அலுவலர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறமைகள் மேம்படுத்தப்படுவதன் காரணமாக வினைத்திறன்மிக்க அரச சேவையைப் பொது மக்கள் பெற்றுக் கொள்ள இயலுமாகின்றது.

07 ஆம் அத்தியாயம்

7. இயைபு அறிக்கை

இலக்கம்	ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு	இயைபு நிலைமை (ஏற்புடையதாகின்றது /ஏற்புடையதாவதில்லை)	ஏற்புடையதாவதில்லை எனின் அதற்கான சுருக்கமான விளக்கம்	ஏற்புடையதாகாமையை எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்காக பிரேரிக்கும் சரியான தீர்மானம் நடவடிக்கை
1	**கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	ஏற்புடையதாகின்றது		
1.2	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு	ஏற்புடையதாகின்றது		
1.3	தொழில் மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு)	ஏற்புடையதாவதில்லை	ஏற்புடையதன்று	
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	ஏற்புடையதாவதில்லை	ஏற்புடையதன்று	
1.5	விசேட முற்பணக் கணக்கு	ஏற்புடையதாவதில்லை	ஏற்புடையதன்று	
1.6	வேறு	ஏற்புடையதாவதில்லை	ஏற்புடையதன்று	
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவருதல் (நி.பி. 445)**			
2.1	பொது நிருவாக சுற்றறிக்கை 267/2018 இற்கமைய நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவருதல்	ஏற்புடையதாவதில்லை	இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது	
2.2	ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேடு / ஆட்களின் சம்பள அட்டைகளை பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.3	கணக்காய்வு வினாக்களுக்கான பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.5	சகல மாதாந்த கணக்குப் பொழிப்பு அறிக்கைகளையும் தயார் செய்து பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.7	பொருட் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.8	இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.9	நட்டம் இழப்பு பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.10	பொறுப்புகள் பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.11	உபஆவணப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் (புயு-C20)	ஏற்புடையதாகின்றது		
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகள் பகிரப்பட்டிருத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		

3.2	நிதி அதிகாரத்தை பொறுப்பளிப்பது பற்றி நிறுவனத்திற்குள் விழிப்புணர்வூட்டியிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் அலுவலர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் ஊடாக அங்கீகரிக்கப்படக் கூடியவாறு அதிகாரம் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரச சம்பள ஆவண மென்பொருள் பொதி (பெகேஜ்) யை பயன்படுத்தும் போது கணக்காளரின் நிருவாகத்திற்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		
4	**வருடாந்த திட்டங்களைத் தயார் செய்தல்**			
4.1	வருடாந்த செயற்றிட்டத்தை தயார் செய்தல்	ஏற்புடையதாகின்றது		
4.2	வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயார் செய்தல்	ஏற்புடையதாகின்றது		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல்	ஏற்புடையதாகின்றது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயார் செய்து தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திடம் உரிய திகதியில் சமர்ப்பித்தல்	ஏற்புடையதாகின்றது		
4.5	வருடாந்த காசோட்டக் கூற்றை உரிய திகதியில் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதியில், சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி. 134(2) னுஆயு.:.1-2019 இற்கமைய, ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல்	ஏற்புடையதாகின்றது		
6.2	ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலப்பகுதிக்குள் விடையளித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
6.3	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உட்பிரிவுக்கு அமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
6.4	நிதிப் பிரமாணம் 134(3) இற்கமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA சுற்றறிக்கை 1-2019 இற்கமைய, ஆகக் குறைந்துத கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 உரிய ஆண்டில் நடாத்தியிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
8	**சொத்து முகாமைத்துவம்**			

8.1	01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திடம் சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
8.2	மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதை ஒருங்கிணைப்புக்கு பொருத்தமான ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை நியமனம் செய்து மேற்படி அலுவலர் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
8.3	அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இற்கமைய பொருட் கணிப்பீட்டை நடாத்தி குறித்த அறிக்கைகளை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
8.4	வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறை மற்றும் வேறு சிபாரிசுகளை சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொண்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
8.5	சேதமடைந்த பொருட்களை அகற்றுவதை நி.பி. 772 இற்கமைய மேற்கொள்ளல்	ஏற்புடையதாவதில்லை	குறித்த காலப்பகுதியில் நிறைவு செய்வது நடைமுறை சிக்கல்கள் காரணமாக தாமதமடைந்தது	
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கு நாளாந்த பயணக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயார் செய்து உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல்	ஏற்புடையதாகின்றது		
9.2	வாகனங்கள் சேதமடைந்து 6 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றியிருத்தல் (வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு)	ஏற்புடையதாகின்றது	சேதமடைந்த வாகனங்கள் இல்லை	
	வாகனங்கள் சேதமடைந்து 6 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றியிருத்தல் (மீள்குடியேற்றப் பிரிவு)	ஏற்புடையதாவதில்லை	மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தினால் பதிவுரத்துச் செய்யப்பட்டதை அடுத்து இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபைக்குகற்கை நடவடிக்கைகளுக்காக இந்த வாகனத்தை கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	துரிதமாக அகற்றும் நடவடிக்கைகளை நிறைவு செய்தல்
9.3	வாகன லொக் புத்தகங்களைப் பேணிவருவதுடன் அவற்றை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		

9.4	ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் நி.பி. 103,104,109, மற்றும் 110 இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பற்றி மீள் பரிசீலனை செய்தல் (வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு)	ஏற்புடையதாகின்றது (நடைமுறையிலுள்ள எரிபொருள் விலைகள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக 2022 ஆம் ஆண்டுக்கு எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை.		கியுஆர் கோட் முறை ஊடாக எரிபொருள் பெற்றுக் கொள்வது ஆரம்பிக்கட்டதை அடுத்து எரிபொருள் பரிசோதனை மீண்டும் மேற்கொள்ளப்படவில்லை
	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பற்றி மீள் பரிசீலனை செய்தல் (மீள்குடியேற்றப் பிரிவு)	ஏற்புடையதாகின்றது (நடைமுறையிலுள்ள எரிபொருள் விலைகள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக 2022 ஆம் ஆண்டுக்கு எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை.		2023 ஆம் ஆண்டுக்கு எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்ளல்.
9.6	லீசின் கொள்வனவுக் கால எல்லையின் பின்னர், லீசின் கொள்வனவு வாகனங்கள் லொக் புத்தகங்களில் முழு உரித்தையும் சாட்டுதல் செய்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
10	**வங்கிக் கணக்கு முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதிக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயார் செய்து சான்றுப்படுத்தி அவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
10.2	மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்பட்டுள்ள செயற்படாத வங்கிக் கணக்குகளை தீர்த்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற மற்றும் சீராக்கல் செய்ய வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி நிலுவைகளை ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்த்திருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
11	**ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்**			
11.1	செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை தாண்டாதவாறு செலவிடல்	ஏற்புடையதாகின்றது		
11.2	நி.பி. 94(1) இற்கமைய செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் பயன்படுத்திய பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஏற்பாடுகளை வரையறைகளைத் தாண்டாதவாறு பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	வரையறைகளுக்கு ஏற்புடையதாதல்	ஏற்புடையதாகின்றது		
12.2	நிலுவையாக உள்ள கடன் நிலுவைகள் பற்றிய காலப் பகுப்பாய்வை மேற்கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		

12.3	ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக காணப்பட்டு வருகின்ற நிலுவையாக உள்ள கடன் நிலுவைகளைத் தீர்த்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பூர்த்தியடைந்த வைப்புக்கள் தொடர்பில் நி.பி. 571 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசேட்டின் மீதி திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
14.2	நி.பி. 371 இற்கமைய வழங்கப்பட்ட குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி, மேற்படி பணி நிறைவு செய்யப்பட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்பட்டிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
14.3	நி.பி. 371 இற்கமைய அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளைத் தாண்டாதவாறு குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
14.4	கட்டுநிதிக் கணக்கின் மீதி, திறைசேரியின் பதிவேடுகளுடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல்.	ஏற்புடையதாகின்றது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	குறித்த ஒழுங்குவிதிகளுக்கு அமைய சேகரிக்கப்பட்ட வருமானத்தில் மீளச் செலுத்தல்கள் செலுத்தப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
15.2	சேகரிக்கப்பட்ட வருமானங்கள், வைப்புக் கணக்கில் செலவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு செலவு வைத்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
15.3	நி.பி. 176 இற்கமைய நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
16	**மனிதவள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வரையறைக்குள் பதவியணியை பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
16.2	பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
16.3	20.09.2017 ஆம் திகதிய ஆளுனு சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இற்கமைய சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
17	**பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்**			
17.1	தகவல் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தகவல் அலுவலர் ஒருவரை நியமனம் செய்து தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்.	ஏற்புடையதாகின்றது		

17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளம் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், இணையத்தளம் அல்லது மாற்றுவழிமுறைகள் ஊடாக நிறுவனம் பற்றி பொது மக்களின் பாராட்டுக்கள் / பிரேரணைகளை வெளியிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
17.3	தகவல் அறியும் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளுக்கு அமைய ஒவ்வொரு வருடமும் இரண்டு தடவை அல்லது ஒரு வருடத்தில் ஒரு தடவை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
18	**பிரசைகள் பிரகடனத்தை அமுல்படுத்தல்**			
18.1	05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2018(1) ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகள் / சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்து அமுல்படுத்தியிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
18.2	மேற்படி சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு அமைய, பிரசைகள் /சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தும் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல், மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தினால் முறையியல் ஒன்று தயார் செய்யப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
19	**மனிதவள திட்டத்தை தயார் செய்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 இன் மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் மனிதவளத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளமை	ஏற்புடையதாகின்றது		
19.2	பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணி நேரத்திற்குக் குறையாத பயிற்சி வாய்ப்பை மேற்படி மனிதவளத் திட்டத்தில் உறுதி செய்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
19.3	மேலுள்ள சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
19.4	மேற்படி சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு அமைய மனிதவள அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் பொறுப்புக்கள் அளிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
20	**கணக்காய்வு பந்திகள் தொடர்பில் பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்**			
20.1	கடந்த ஆண்டுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீராக்கல் செய்யப்பட்டுள்ளமை.	ஏற்புடையதாகின்றது		

3. கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நிலங்கள் அபிவிருத்திப் பிரிவு

03. கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நிலங்கள் அபிவிருத்திப் பிரிவு

(முன்னிருந்த கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு)

பக்க இலக்கம்

01. அத்தியாயம்

1. நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு ..... 116 –119

1.1 அறிமுகம் .....

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்.....

1.3 பிரதான செயற்பாடுகள் .....

1.4 நிறுவன விளக்கப்படம் .....

1.5 கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நிலங்கள் அபிவிருத்தி பிரிவின் கீழுள்ள நிறுவனங்கள் .....

02. அத்தியாயம்

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்..... 120 - 132

2.1. விசேட சாதனைகள், சவால்கள் எதிர்கால இலக்குகள் .....

2.1.1 விசேட சாதனைகள்

2.1.2 சவால்கள்

2.1.3 எதிர்கால இலக்குகள்

2.1.4 கருத்திட்டங்களின் முன்னேற்றம்

- கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்
- கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை
- இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

03. அத்தியாயம்

3. வருடத்துக்கான ஒட்டு மொத்த நிதி செயலாற்றுகை..... 133 - 134

3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று .....

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று .....

3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று .....

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் .....

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை .....

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை .....

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் /மாவட்டச் செயலகம் /மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு .....

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை .....

3.9 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை .....

04. அத்தியாயம்

4. செயலாற்றுகை சுட்டிகள் எய்தப்பெறுவதிலுள்ள முன்னேற்றம் - 2022..... 135 - 136

05. அத்தியாயம்

5. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை ... 137 - 140

5.1. அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்.....
5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்.

06. அத்தியாயம்

6. மனித வள விபரம்..... 141 - 146

6.1. ஆளணி முகாமைத்துவம் (2022.12.31 திகதியிற்கு) நிறுவனத்தின் செயலாற்றுகையினை பொருட்டு மனிதவள பற்றாக்குறை அல்லது மிகையினை ் பாதித்துள்ள விதம்.....
6.2. மனித வள முகாமைத்துவம் .....

07. அத்தியாயம்
7. இணக்க அறிக்கை ..... 147 - 154

அத்தியாயம் 01

1. நிறுவனம்சார் தோற்றப்பாடு மற்றும் அமுல்படுத்தும் பொழிப்பு

1.1 அறிமுகம்

முன்னர் காணப்பட்ட கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்ச

சமுத்திர வளங்களை பாதுகாத்தல் மற்றும் தாழ்நிலத் துறையின் அபிவிருத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தி தேசிய மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு 2021.07.07 ஆம் திகதிய 2235/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபீவருத்தி இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டது. அதற்கமைய இந்த இராஜாங்க அமைச்சு 2022.04.27 ஆம் திகதி வரை இயங்கி வந்ததுடன், 2022.04.28 ஆம் திகதி 2277/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கரையோர பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு என்று திருத்தம் செய்யப்பட்டது. கரையோர பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு 2022.05.26 ஆம் திகதி வரை இயங்கி வந்ததுடன், 2022.05.27 ஆம் திகதிய 2281/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய இந்த இராஜாங்க அமைச்சுக்கு உரித்தான விடயப்பரப்பு, நிறுவனங்கள் மற்றும் அமுல்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிடம் பொறுப்பளிக்கப்பட்டன.

எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டு காணப்பட்ட இராஜாங்க அமைச்சின் (தற்போது பிரிவொன்றாக இயங்கி வருகின்ற செலவுத் தலைப்புக்கு அமைய கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாதைம்துவ திணைக்களம், சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஆகிய மூன்று நிறுவனங்களினதும் மூலதன ஏற்பாடுகளாக ஒதுக்கப்பட்ட ரூ.மி. 1523.34 இல் 92.4 % ஆன நிதிசார் முன்னேற்றத்தை அடைந்துகொண்டு சமுத்திர வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் தாழ்நிலத்துறையின் வளர்ச்சிக்கு விசேடமான பல கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

2022 ஆம் ஆண்டு இலங்கை எதிர்கொண்ட பாரிய பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனா தொற்று நிலைமைக்கு மத்தியில் சமுத்திர வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் தாழ்நிலத் துறையில் மாத்திரமன்றி ஒட்டுமொத்த துறையையும் நோக்காகக் கொண்ட இலக்குகளை அடைந்துகொள்வதில் தடை ஏற்பட்ட போதிலும், அதனை ஆகக் குறைந்த மட்டம் முகாமைத்துவம் செய்வதற்கு உச்சளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டாக 2022 ஆம் ஆண்டை அறிமுகம் செய்ய முடியும்.

எவ்வாறாயினும், இவ்வனைத்து தடைகளுக்கும் மத்தியில் சமுத்திர வளங்களை பாதுகாத்தல் மற்றும் தாழ்நிலத்துறைக்கு உரித்தான கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் சகல சம்பந்தப்பட்ட தரப்பினர்களினதும் முனைப்பான பங்களிப்பு மற்றும் பங்கேட்பை கூடுதலாகப் பயன்படுத்திக் கொண்டு இந்த அமைச்சு 2022 ஆம் ஆண்டு அடையப் பெற்றுள்ள செயலாற்றுகை பற்றிய பொழிப்பு இந்த அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1.2 முன்னர் காணப்பட்ட கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

நோக்கு

கரையோரம், சமுத்திர வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் தாழ்நிலங்களை அபிவிருத்தி செய்வதில் பிராந்தியத்தில் முன்னோடி அரச நிறுவனமாதல்.

செயற்பணி

சுற்றாடலுக்கு சாதகமான கொள்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் நிலைபேறான எதிர்காலத்திற்கு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளல்.


நோக்கங்கள்

- சுற்றாடலுக்கு சாதகமான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் மூலம் கரையோர சுற்றாடலின் நிலைமையை மேம்படுத்தல்.
- கரையோர பூங்காக்கள் போன்ற அழங்காரக் கட்டமைப்புக்களை ஒன்றிணைப்பதன் மூலம் கரையோர வலயத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் முகாமைத்துவத்தின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு கூடுதல் பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
- கரையோர வளங்களைப் பயன்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல்.
- கரையோர சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் சமூக, பொருளாதார நிலைமையை உயர்த்தல்.
- கரையோரப் பிரதேச மக்களுக்கு அனர்த்தங்கள் காரணமாக இடம்பெறுகின்ற தாக்கத்தை குறைத்தல்.
- தாழ்நில பிரதேச வணிக மட்டத்திலான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உகந்தவாறு தயார் செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தல்.
- கால்வாய்களில் கழிவுப் பொருட்கள் குவிவதை தடுத்தல், முறையாக தயார் செய்தல், மேம்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதன் மூலம் பொது மக்களின் சுகாதாரம் மற்றும் துப்பரவேட்பாட்டு நிலைமையை மேம்படுத்தல்.

1.3 பிரதான பணிகள்

- சமுத்திரம்சார் சுற்றாடல் மாசடைவதை தடுப்பதற்கு உகந்த செயற்றிட்டத்தை அறிமுகம் செய்தல்.
- கடல் அரிப்பை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள் அகற்றப்படுவதன் காரணமாக கரையோரப்பகுதிக்கு மற்றும் ஆழ்கடலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை தடுத்துக் கொள்வதற்காக சமுத்திர சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
- வெள்ளம் அற்ற வாழ்விடங்களை ஏற்படுத்தல் மற்றும் சுற்றாடலை பாதுகாப்பதை நோக்காகக் கொண்ட தாழ்நில அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

1.4 முன்னர் காணப்பட்ட கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு



1.4 ** முகாமைத்துவ சேவைகள் தினைக்களத்தினால் அலுவலருக்கு தனிப்பட்ட வகையில் ஏறபுடையவாறு மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) பதவி அங்கீகரிக்கப்படிருந்த போதிலும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மேறபடி பதவிக்கு அலுவலர் ஒருவரை நியமனம் செயயவில்லை.

1.5 முன்னர் காணப்பட்ட வரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்பட்ட திணைக்களங்கள்

01. கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம்

- **முன்னர் காணப்பட்ட வரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்பட்ட நிறுவனங்கள்**

01. சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை
02. இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

அத்தியாயம் 02

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 விசேட வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

2.1.1 விசேட வெற்றிகள்

	திணைக்களம்/ நிறுவனம்	விசேட வெற்றிகள்
01	கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம்	❖ 2022 ஆண்டு ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி மந்நும் பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் இலங்கையின் கரையோர வலயத்தில் 3430 மீற்றர் பிரதேசத்தை கடலரிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக கரையோர பாதுகாப்பு கட்டமைப்புக்களை நிர்மாணித்தல் கரையோரத்தை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் 45 மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 07 ஐ நடாத்தியமை.
02	சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை	❖ அதிகாரசபையின் வருடாந்த வருமானத்தை ரூ.மி. 146.4 ஆக அதிகரித்துக் கொள்ள முடிந்தமை. ❖ மூலதன செலவினங்களுக்கு தனியார் துறையிடமிருந்து ரூ.மி. 9.86 ஆன அனுசரணை பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை. ❖ அகற்றல் உரிமப்பத்திரம் வழங்கியதன் மூலம் ரூ.மி. 70 ஆன பதிவு செய்யப்பட்ட வருமானத்தை பெற்றுக் கொண்டமை. ❖ உலக உணவு நிறுவனத்திடமிருந்து (WFP) ரூ.மி. 4 ஆன கொடையை பெற்றுக் கொண்டமை, அதன் மூலம் பிரதேச மட்டத்தில் திறன் விருத்தி செய்தல் மற்றும் தேசிய எண்ணெய் மற்றும் இரசாயன தெளித்தலின் போது அமுலில் உள்ள அவசர திட்டத்தை அமுல்படுத்துவது (NOSCOP) தொடர்பில் உரிய மாவட்டங்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மன்னார், காலி, மட்டக்களப்பு, மாத்தறை மற்றும் களுத்துறையில் நடாத்தப்பட்டன. ❖ MV X-PRESS HOOGLY கப்பலினால் 2022.07.02 ஆம் திகதி பங்கர் எண்ணெய் பரவல் கட்டுப்பாட்டு மற்றும் குற்றவயில் பொறுப்பின் கீழ் ரூ.மி. 15 பெற்றுக் கொள்ளப்பட்டமை. ❖ MT New Diomaon கப்பல் விபத்தின் சிவில் பொறுப்புக்களுக்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, 35 ஆம் இலக்க சமுத்திர மாசடைதலை தடுத்தல் சட்டத்தின் கீழ் 2022.09.02 ஆம் திகதி சட்ட மாஅதிபர் திணைக்களம் ஊடாக கொழும்பு அத்மிரல்ட் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ❖ Commonwealth Litter நிகழ்ச்சித்திட்டத்தின் கொடையாக கிடைத்த நுண்பிளாஸ்ரிக் ஆய்வுகூடம் திறந்து வைக்கப்பட்டமை. ❖ மாத்தறை மாவட்டத்தில் பவளப்பாறை சதுர மீற்றர் 200 ஐ மீளத் தாபித்தல் மற்றும் தலவில மற்றும் முல்லைத்தீவு, மட்டக்களப்பில் தனியார் துறையினரின் ஒத்ததழைப்புடன் பவளப்பாறைகளை மீளத்தாபித்தமை. ❖ யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், கிளிநொச்சி, ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கண்டல் தாவரங்களை 8.2 ஏக்கர்களில் மீளத்தாபித்தல். ❖ அனுசரணை பெற்றுக் கொள்ளப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு நாளாந்தம் கரையோரப் பிரதேசத்தில் சுமார் 91 கிலோ மீற்றர் தூரதத்தை சுத்தமாக பேணிவருதல். ❖ சயுர ரக்கின ரெல்ல எனும் நிகழ்ச்சித்திட்டம், சர்வதேச சமுத்திர

		தினம் மற்றும் சர்வதேச கடற்கரையை சுத்தம் செய்யும் தினத்தை முன்னிட்டு அனுசரணையாளர்களின் நிதி ஏற்பாடுகள் மற்றும் பொருள் உதவிகளைப் பயன்படுத்தி கரையோரத்தை சுத்தம் செய்தல், நீருக்கு கீழே சுத்தம் செய்தல் மற்றும் மீன்பிடி துறைமுகத்தை சுத்தம் செய்யும் 268 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமை. ❖ அனுசரணையாளர்கள் ஊடாக களுத்துறை – ஆப்ரு கால்வாய், காலி வண்ணாத்திப்பூச்சு பாலத்திற்கு அருகே மற்றும் காலி மாவகட கால்வாயில் கழிவு வடிகட்டிகள் பொருத்தப்பட்டமை. ❖ MV X-Press Pearl கப்பல் விபத்து சம்பந்தமாக தொடர்ச்சியாக 465 நாட்கள் கரையோரத்தை சுத்தம் செய்தல் (மனித நாட்கள் 103,532, கழிவுப்பொருட்கள் 1,725 Mt சேகரிக்கப்பட்டமை), நிபுணர் குழுவினால் சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டின் இரண்டாவது இடைக்கால அறிக்கை தயர் செய்யப்பட்டமை. ஆழ்கடலில் காணப்பட்ட கழிவுப்பொருட்கள், கொள்கலன் மற்றும் பாதிக்கப்பட்ட கப்பலை அகறறும் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தமை.
03	இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்	2022 ஆம் ஆண்டு பின்வரும் சேவை பெறுநர்களின் கருத்திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டன. 1. உத்தேச அம்பலாங்கொடை நடைபாதையை நிர்மாணித்தல். 2. மொனராகலை, நெளும்வெவ நகர அபிவிருத்தி மற்றும் அழங்கார நடவடிக்கைகளை மேற்கொண்டமை. 3. யக்கல சுதேச மருத்துவ பல்கலைக் கழகத்தின் நடைபாதையை நிர்மாணித்தல். 4. கம்பஹா, ஹெனரத்கொட நடைபாதையை நிர்மாணித்தல். 5. பலபிட்டி, கிரில்ல கால்வாய் நடைபாதையை அபிவிருத்தி செய்தல். 6. நுவரெலியா, கிரகரி வாவியின் நடைபாதையை அபிவிருத்தி செய்தல். 7. பெலிஅத்த, அம்பிட்டிய வாவியைச் சூழ நடைபாதையை நிர்மாணித்தல். 8. மோரகொட ஏரியில் நடைபாதையை அபிவிருத்தி செய்தல். 9. நெளும்வில, மாகேவிட்ட உத்தேச நடைபாதையை நிர்மாணித்தல் - கட்டம் I 10. நெளும்வில, மாகேவிட்ட உத்தேச நடைபாதையை நிர்மாணித்தல் - கட்டம் II 11. பேரலந்த ஈரவலய அபிவிருத்திக் கருத்திட்டம் கட்டம் II 12. கொடகல ஈரவலய அபிவிருத்திக் கருத்திட்டம் கட்டம் II

2.1.2 சவால்கள்

	திணைக்களம்/நிறுவனம்	சவால்கள்
01.	கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம்	• நாட்டில் நிலவிய எரிபொருள் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் விலை ஏற்றம் காரணமாக கரையோரப் பாதுகாப்புக்கான நிர்மாணிப்புக்களுக்குத் தேவையான லோடர் மற்றும் எஸ்கவேடர் இயந்திரங்களை பெற்றுத்தரும் வழங்குநர்கள் அவர்களை வழங்குவதில் அலட்சியம் காட்டினார்கள். குறிப்பாக கேள்வி கோரலுக்கு நாடளாவிய ரீதியில் விளம்பரம் செய்யப்பட்ட போதிலும், சிலவேளை இயந்திரங்களை வழங்குவதற்கு வழங்குநர்களிடமிருந்து பதில் கிடைக்கவில்லை என்பதுடன், பிரதானமாக உப்புக் கலந்த சூழல் காரணமாக வழங்குநர்கள் இயந்திரங்களை வழங்குவதில் அலட்சியம் காட்டினார்கள். மேலும், QR குறியீடு மூலம் தனியார் இயந்திர வழங்குநர்கள் எரிபொருள் பெற்றுக் கொள்ளும் போது எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைப்பதன் காரணமாகவும் சிக்கல்கள் எழுந்தன.

		• அவசர கரையோர பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடப்பட்ட வேலைகளுக்குத் தேவையான பூமி மேலுறை அத்தியாவசியமான நிர்மாண மூலப்பொருட்களில் ஒன்றாகும் என்துடன் அவற்றை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இறக்குமதி செய்ய வேண்டி ஏற்படுகின்றது. எனவே, நாட்டில் நிலவும் டொலர் சிக்கல் காரணமாக வழங்குநர்களுக்கு நாணயக் கடிதங்களை திறந்து கொள்ள முடியாமை மற்றும் உரிய நேரத்திற்கு பொருட்களை வழங்குவதில் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இது குறிப்பாக அவசர பாதுகாப்பு நடவடிக்கைகளின் போது சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. • வெடிமருந்துப் பற்றாக்குறை மற்றும் அவற்றின் விலை அதிகரிப்புக் காரணமாக கருங்கற்களை பெற்றுக் கொள்வதிலுள்ள அசௌகரியங்கள். • மனிதவளப் பற்றாக்குறை (பொறியியலாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள், நீரியல்சார் அளவையாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத ஊழியர்களுக்கான பற்றாக்குறை)
02.	சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை	• பதவியணியில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் (உதா. சிரேஷ்ட பதவியணியில் பதவிகள் 21 இல் 10 வெற்றிடமாக உள்ளமை.) • சட்டத்தை திருத்தம் செய்வதிலுள்ள தடைகள் • MV X-Press தொடர்பான சிக்கல்கள், • கரையோரத்தை சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொள்ளத் தேவையான நிதியை திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்ளல். • இழப்புக்களை மதிப்பீடு செய்வது பற்றிய நிபுணர் குழுவின் செலவினம் - அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் • வெளிநாட்டு ஆய்வுகூடங்களுக்கு மாதிரிகளை அனுப்புதல். • மூலதனக் கருத்திட்டங்களுக்கு முதல் காலாண்டுக்கு திறைசேரியினர் நிதி வழங்கப்படாமை. • கரையோர வைத்தியசாலைகளின் மூலம் சாய்சாலை கழிவுநீர் கரையோரப் பிரதேசங்களுக்கு பொருத்தமற்ற முறையில் வெளியேற்றப்படல். (திருகோணமலை வைத்தியசாலை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, மாத்தறை வைத்தியசாலை, தங்காலை வைத்தியசாலை) • சமுத்திர அனர்த்த நிலையம் ஒன்றை தாபிப்பதற்கு ஏனைய நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளல். • கொழும்பு மாநகர சபையினால் நீண்டதூர குழாய்கள் ஊடாக சுத்திகரிப்புச் செய்யப்படாத கழிவுநீர் மற்றும் கழிவுப் பொருட்கள் அகற்றப்படல். • கரையோர வலயம் - கரையோர உள்ளூராட்சி மன்றங்களில் முறையாக கழிவுப்பொருட்களை சேகரிக்கும் பொறிமுறை இல்லாமை. • கடற்றொழில் சார்ந்ததாக இடம்பெறுகின்ற சுற்றாடல் மாசடைவதை முறையாக கட்டுப்படுத்தாமை. (கடற்றொழில் துறைமுகங்கள், இறங்குதுறை, சிறு படகுகள், கறுவாடு மற்றும் ரின் செய்யும் கைத்தொழில்சாலைகள் சார்ந்ததாக)
03.	இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்	❖ **நிதிசார் சவால்கள் :** 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் ஆண்டின் நடுப்பகுதியில் குறைக்கப்பட்டமை காரணமாக வருடாந்தம் இடம்பெறுகின்ற கருத்திட்டங்களை நிலையான செயற்றிட்டத்திற்கு அமைய அமுல்படுத்த வசதிகள் கிடைக்கவில்லை. ❖ **வேறு சவால்கள் - காணிகளை சாட்டுதல் செய்துகொள்வதில் எழும் சிக்கல்கள் :** 1. முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு காணிகளை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கும் போது காணிகளை விலைமதிப்புச் செய்வதற்கு கனிசமான காலம் எடுத்தல். 2. சட்ட விரோத நிர்மாணிப்புக்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களினால் வீதவரி இலக்கம் வழங்கியமை, நீர் மின்சாரம் வழங்கியுள்ளமை

காரணமாக இந்த சட்ட விரோத நிர்மாணிப்புக்களை அகற்றுவதில் சிக்கல் எழுந்துள்ளமை.

- எனவே சட்ட விரோத நிர்மாணிப்புக்களுக்கு நீர் மற்றும் மின்சாரம் வழங்காதிருக்க உகந்த நடவடிக்கை மேற்கொள்ளல்.

3. காணிகளை கொள்ளல் செய்யும் போது காணி உரிமையாளர்களுக்குக் கிடைக்கின்ற நட்டஈட்டுத் தொகை மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுவதனால் பொது மக்களின் எதிர்ப்பு மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற கூடுதல் போக்கு காணப்படல்.
   - குறித்த பணிகளுக்குரிய நிறுவனங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய அலுவலர்களைக் கொண்ட குழுவின் ஊடாக தீர்மானம் மேற்கொள்ளப் பிரேரித்தல். (தற்போது வீதி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுகின்ற (LARC) லார்க் (SUPER LARC) சுப்பர் லார்க் முறையியல் போன்ற முறையியல்)
4. ஈரநிலம் மற்றும் கால்வாய் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை பிரகடனம் செய்யும் நடவடிக்கைகளின் போது பிரதேச செயலாளர்கள் சிபாரிசுகளை சமர்ப்பிப்பதில் இடம்பெறுகின்ற தாமதங்கள்.
5. காணிகளை கொள்ளல் செய்யும் நடவடிக்கைகளின் போது காணி அமைச்சின் திரட்டிய ஏற்பாடுகளிலிருந்து (நி.பி. 53 இன் கீழ்) நட்டஈடு செலுத்தப்படும் சந்தர்ப்பங்களில் நிதி அமைச்சின் சிபாரிசை பெற்றுக் கொடுப்பதிலுள்ள தாமதங்கள் (கொலன்னாவை கருத்திட்டத்திற்கு சிபாரிசு கோரப்பட்டு தற்போது ஒரு வருடத்திற்கும் அதிக காலம் கடந்துள்ளது.)

2.1.3. எதிர்கால இலக்குகள்

	திணைக்களம்/நிறுவனம்	எதிர்கால இலக்கு
01	கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம்	• திணைக்களத்திற்கு வருமானம் உழைக்கும் வகையில் அரச – தனியார் பங்குடைமை (PPP) முறையில் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் சுற்றுலா வாய்ப்புக்களை கொண்ட இடங்களை அபிவிருத்தி செய்தல்.
02	சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை	• கழிவுப் பொருட்களை மீளப்பெறல் சேவைகளை வழங்குவதற்கான ஒழுங்குவிதிகளை திருத்தம் செய்தல் மற்றும் வருமானங்களை டொலர்களில் பெற்றுக் கொள்ளல். • இலங்கையில் இடம்பெறுகின்ற எண்ணெய் பரவல் பற்றி செய்மதியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளும் அவதானிப்புச் சேவைகள் பற்றிய முன்னோடிக் கருத்திட்டத்தை அமுல்படுத்தல். (வெளிநாட்டு நிதியக் கருத்திட்டம் (FFP)-601, 810.00 €) • பூகோல கருத்திட்டங்களின் பெறுபேறுகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் அமுல்படுத்தல்®. (GloFouling, GloLitter, Green Voyage) • எண்ணெய் மற்றும் இரசாயனப் பதார்த்தங்கள் பரவுவது பற்றி தேசிய பயிற்சிச் செயலமர்வொன்று நடாத்தப்பட்டமை (SPILLEX) மற்றும் மாவட்ட மட்டத்தில் NOSCOP பற்றி விழிப்புணர்வூட்டும் 06 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியமை. • MV Xpress Pearl கப்பல் விபத்துக்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான சுற்றாடல் அறிக்கைகளை தயார் செய்யத் தேவையான உதவியை சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுத்தல். • வெல்லவத்த, முகத்துவாரம் மற்றும் கொக்கலை ஆகிய தூர குழாய்களை மையமாகக் கொண்ட நீரின் நிலைமையை அவதானிப்புச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். • நுண் பிளாஸ்ரிக் கருத்திட்டம் - 14 மாவட்டங்களில் நுண் பிளாஸ்ரிக் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், தேசிய சேதமடைந்த இடிபாடுகள் பற்றிய கொள்கை மற்றும் உபாயமுறையை தயார் செய்தல்.

		• கரையோரத்தை அரவணைப்புச் செய்வோரை தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் கடுமையாக மாசடைந்துள்ள கரையோரப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபடுத்தல். • சமுத்திர சுற்றாடல் கட்டமைப்பை மதிப்பீடு செய்தல் (ESI கருத்திட்டம்) – கொவியாபான முதல் வெருகல் வரை வரைபடமாக்கல். • பவளப்பாறை -600 m2 ஐ மீளத் தாபித்தல் மற்றும் கண்டல் தாவரங்கள் 7 ஏக்கரை மீளத்தாபித்தல். • சட்டத்தை திருத்தம் செய்தல் மற்றும் ஒழுங்குவிதிகளை தயார் செய்தல். • MEPA பயிற்சி நிறுவனம் - பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 10 ஐ நடாத்தல்.
03	இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்	1. தற்போது வேலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மழை கழிவுநீர் அகற்றல் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டங்களில் விரைவில் வேலைகளை நிறைவு செய்து அதன் பயன்களைப் பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தல். • வேரஸ்கங்க கருத்திட்டம் • ஒலியமுல்ல கருத்திட்டம் • கொலன்னாவ கருத்திட்டம் 2. தற்போது திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மழைநீர் கழிவுநீர் அகற்றல் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டங்களின் உரியதிட்டமிடல் மற்றும் வடிவமைப்பு நடவடிக்கைகளை கூடிய விரைவில் நிறைவு செய்து அமுல்படுத்த வசதி செய்தல். • மாதிவெல தெற்கு திருப்பக் கருத்திட்டம் • முதுன் எல கருத்திட்டம் • இரத்மலானை – மொரட்டுவை கருத்திட்டம் • பிலியன்தல கருத்திட்டம் 3. தற்போது வடிவமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற களனி கங்கையை மையமாகக் கொண்ட கறுப்புப் பாலத்திற்கு அருகே உத்தேச பம்பியறையை நிர்மாணிக்குப் பணிகளை நிறைவு செய்தல். 4. 2021 ஆம் ஆண்டில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கொழும்பு தலைநகரை மையமாகக் கொண்ட நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளை இலங்கை காணி அபிவிருத்திக கூட்டுத்தாபனம் மூலம் பேணிவருதல். தற்போது மேற்படி பம்பியறைகள் அனைத்திலும் கூட்டுத்தாபன பதவியணியினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். கடந்த காலங்களில் இடம்பெற்ற அதிக மழைவீழ்ச்சி காரணமாக மேற்படி பம்பியறைகளை இயங்கச் செய்து வெள்ள அனர்த்த நிலைமை ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 5. அரச, தனியார் பங்குடமை (PPP) மூலம் கடல் மணல் அகழ்வுக் கருத்திட்டத்தை அமுல்படுத்தல். தற்போது இதற்காக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. • மணல் அகழ்வுக் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் பிரதேசத்தில் வாழும் மீனவர் சமுதாயத்தினரின் அன்றாட வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு தாக்கம் ஏற்படுகின்றது. இது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளது. • அதற்கமைய பிரதேசத்தின் மீன்பிடித் துறைமுகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கான நிதிசார் ஏற்பாடுகள் தொடர்பில் மேற்படி திணைக்களம் கோரிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளது. • இக்கருத்திட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களின் தொடரொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இன் முதற் கட்டமடாக மணல் அகழ்வு கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் செயலமர்வு 2022.12.28 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதில் அரச அலுவலர்கள் சுமார் 120 பேர் பங்கேற்றார்கள். இதன் அடுத்த கட்டமாக உரிய பிரதேசங்களின் சமயத் தலைவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றை 2023 சனவரி மாதம் மூன்றாம் வாரம் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனை அடுத்து மீனவர்களுடனான சந்திப்பு நடாத்தப்படவுள்ளது.

		• இந்த செயன்முறை நிறைவடைந்த பின்னர், தேவையான கொள்கைசார் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். 6. கிரிமண்டல மாவத்தை, ராகம மற்றும் பிற்றகோட்டையில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான காணிகளை முதலீட்டு வாய்ப்புக்களுக்கு முறையானவாறு பெற்றுக் கொடுத்தல். ஒட்டுமொத்தமாக கவனத்தில் கொள்ளும் போது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு மழைநீர் அகற்றல், ஈரநிலங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் தேசிய அபிவிருத்திக் கொள்கைகளுக்கு சமாந்தரமாக சுற்றாடலுக்கு சாதகமான மற்றும் நிலைபேறான சூழலை உருவாக்க மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னர் காணப்பட்ட வரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிசார் முன்னேற்றம்

முன்னர் காணப்பட்ட இராஜாங்க அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்களான கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம், சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை, இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட மூலதன ஏற்பாடுகள் மற்றும் காணப்பட்ட இராஜாங்க அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட மூலதன ஏற்பாடுகளின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

தொடர் இல.	செலவுத் தலைப்பு	நிறுவனம்	2022 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடு (ரூ.மி.)	2022.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)
01.	123-1-19	முன்னர் காணப்பட்ட இராஜாங்க அமைச்சர் அலுவலகம்	0.543	0.543
02.	123-1-20	முன்னர் காணப்பட்ட இராஜாங்க அமைச்சு அலுவலகம்	12.923	10.55
03.	291-1-01	கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம்	191.09	165.767
04.	123-2-21-007	சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை	20.00	14.1
05.	123-2-21-002	இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்	500.00	500.00
05.1	123-2-21-003	வேரஸ் கங்கை சூறாவளி கழிவு நீர் அகற்றல் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டம்	480.00	480.00
05.2	123-2-21-004	பெரே வாவி நீரின் தரத்தை வழமைக்குக் கொண்டுவருதல்	20.00	19.53
05.3	123-2-21-005	ஒலியமுல்ல சூறாவளி கழிவு நீர் அகற்றல் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டம்	200.00	155.00
05.4	123-2-21-005	கொலன்னாவ கால்வாய் கழிவு நீர் அகற்றல் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டம்	100.00	61.69
மொத்தம்			**1,524.53**	**1,407.18**

2022 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம்

❖ கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் (291)

கருத்திட்டம்	கருத்திட்டக் காலம்	மதிப்பீட்டு மொத்த செலவினம் (TEC) (ரூ.மி.)	2022 ஆம் ஆண்டு ஒதுக்கிய ஏற்பாடு (ரூ.மி.)	2022.12.31 திகதிக்கு திரட்டிய நிதிசார் முன்னேற்றம்	2022.12.31 திகதிக்கு திரட்டிய பௌதீக முன்னேற்றம் (எழுத்தில்)	2022.12.31 திகதிக்கு திரட்டிய பௌதீக முன்னேற்றம் (விகிதமாக)
115 மீற்றர் ரவட்மன்ட் சுவரை நிர்மாணித்தல் முத்துபந்திய வடக்கு – புத்தளம் 2021 முதல்	2021.08.02-2022.12.31	8.3	3.0	8.2	நிர்மாணிப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.	100%
400 மீற்றர் ரவட்மன்ட் சுவரை நிர்மாணித்தல் கெலிடோ களுத்துறை 2021 முதல்	2021.02.01 2022.12.31	44.2	8.0	48.0	எரிபொருள் சிக்கல் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த நிர்மாணிப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	55%
120 மீற்றர் நடைபாதையை நிர்மாணித்தல் - மிரிஸ்ஸ, பண்டரமுல்ல மாத்தறை – 2021 முதல்	2021.02.08 2022.12.31	2.92	0.02	2.92	40 மீற்றர் நீளம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இரண்டு காணி உரிமையாளர்களினால் மேன்முறையிட்டு நீதிமன்றத்தில் ரீட் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிர்மாண நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. தற்போது காணப்படுகின்ற வழக்கின் தீர்ப்பு பெற்றுக கொள்ளப்பட்ட பின்னர் தீர்மானிக்கப்படும்	30%
260 மீற்றர் ரவட்மன்ட் சுவரை நிர்மாணித்தல் - இரண்டாம் கட்டம் - மெடில்ல, தங்காலை, ஹம்பாந்தோட்டை 2021 முதல	2021.08.02 2022.04.30	18.27	5.77	18.27	நிர்மாணிப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.	100%
40 மீற்றர் குரொயின் 06 ஐ நிர்மாணித்தல் - மஹவெவ தொடுவாவ வடக்கு (இறுதிக் கட்டம்) புத்தளம் - 2021 முதல்	2021.02.01 2022.05.31	27.4	2.1	27.40	நிர்மாணிப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.	100%
400 மீற்றர் ரவட்மன்ட் சுவரை நிர்மாணித்தல் - தலைமன்னார் 2021 முதல்	2021.05.01 2022.04.30	55.8	5.4	55.80	நிர்மாணிப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.	100%
கரையோரப் பாதுகாப்பு – திக்வெல்ல பொது	2022.11.01	4.0	4.0	3.0	நிர்மாணிப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.	100%

விளையாட்டு மைதானத்திற்கு அருகே	2022.12.31					
30 மீற்றர் நீளமான குரொயின் 06 ஐ நிர்மாணித்தல் - நிந்தவூர் அம்பாறை	2022.11.01 2022.12.31	9.0	9.0	0.26	நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	5%
கேபியன் பெட்டிகள் 500 கொள்வனவு செய்தல்	2022.04.01 2022.12.31	7.0	7.0	7.05	கேபியன் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.	100%
பூமி மேலுறைகள் 40000 ச.மீ. கொள்வனவு	2022.03.07 2022.12.31	23.2	23.2	23.7	பூமி மேலுறைகள் வழங்கப்பட்டுள்ளன.	100%
அவரச கரையோர பாதுகாப்பு நடவடிக்கைகள்	2022.01.01 2022.12.31	50.0	50.0	44.97	அவசர பாதுகாப்பு நடவடிக்கைகள் 12 நிறைவு செய்யப்பட்டுள்ளன.	100%
500 மீற்றர் ரவட்மன்ட் சுவரை மீண்டும் நிர்மாணித்தல் - லுனாவ கொழும்பு 2021 முதல்	2021.02.01 2022.12.31	19.3	12.0	17.91	எரிபொருள் சிக்கல் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த நிர்மாணப்பு பணிகள் அடுத்த வாரம் திணைக்களத்தின் பொறிகளைப் பயன்படுத்தி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன	35%
அம்பலாங்கொட வாடிவீட்டுக்கு அருகே குளிக்கும் இடத்தை அபிவிருத்தி செய்தல் - 2021 முதல்	2021.10.01 2022.12.31	5.65	5.65	3.5	பூமி மேலுறைகளைப் பயன்படுத்தி பக்கத்தோற்ற சுவர்கள் இரண்டு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.	60%
200 மீற்றர் ரவட்மன்ட் சுவரை நிர்மாணித்தல் - மோரவல – பிட்டிபன 2021 முதல்	2021.03.02 2022.04.30	18.3	10.4	18.3	நிர்மாணிப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.	100%
80 மீற்றர் ரவட்மன்ட் சுவர் மற்றும் 03 குரொயின்களை புதுப்பித்தல் - போருதொட்ட – கம்பஹா – 2021 முதல்	2021.02.01 2022.12.31	8.7	3.5	6.32	02 குரொயின்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.	70%
110 மீற்றர் கேபியன் சுவரை புதுப்பித்தல் - திருக்கோவில், அம்பாறை	2022.11.01 2022.12.31	7.0	7.0		மூலப் பொருட்களுக்கு கேள்வி கையளிக்கப்பட்டுள்ளது.	05%
கரையோர பொறியியல்சார் நிர்மாணிப்புக்கள்	2022.01.01 2022.06.30	0.1	0.1	0.1	வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் நிறைவு செய்யப்பட்டுள்ளன.	100%

கரையோர பொறியியல் ஆய்வு	2022.01.01 2022.11.30	5.7	5.7	4.92	முத்துபந்திய மற்றும் உடப்புவ கரையோரப் பிரதேசத்தில் ஆழ்குழி ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது	100%
இணையத்தை இற்றைப்படுத்தல்	2022.06.01 2022.11.30	0.2	0.2		நிறைவு செய்யப்பட்டுள்ளது.	100%
உரிமப்பத்திர செயற்பாடு	2022.01.01 2022.12.31	4.86	4.86	1.57	1831 விண்ணப்பங்களில் 1496 உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.	82%
சட்டவிரோத நிர்மாணிப்புக்களை இடித்து அகற்றல், சட்டவிரோத மணலை அகற்றல், கண்காணிப்பு	2022.01.01 2022.12.31	0.8	0.8	0.51	காலி யாகொட்டுவெல்ல மற்றும் தெவட்ட பிரதேசங்களில் சட்டவிரோத நிர்மாணிப்புக்கள் 28, மாத்தறை மிதிகம மற்றும் திக்வெல்ல பிரதேசங்களில் சட்டவிரோத நிர்மாணிப்புக்கள் 05 இடித்து அகற்றப்பட்டன.	
கரையோர மாசடைவதை குறைத்தல்/ கரையோரத்தை சுத்தம் செய்தல்	2022.01.01 2022.12.31	0.7	0.7	2.59	2022 ஆகஸ்ட் மாதம் முதல் இதுவரை புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கரையோர வலயத்தை உள்ளடக்கும் வகையில் 45 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.	100%
கண்டல் பிரதேசங்களை மீளத் தாபித்தல்	2022.01.01 2022.12.31	0.2	0.2	0.04	காலி, களுத்துறை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் 06 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.	100%
கல்வி/விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்	2022.01.01 2022.12.31	1.0	1.0	0.18	நீர்கொழும்பு நகர சபையில் அரச அலுவலர்கள் மற்றும் அரசியல் தலைவர்களுக்கான ஒரு நாள் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று 2022.02.22 ஆம் திகதிய நடாத்தப்பட்டது. குறுந் திரைப்பட சஞ்சிகை நிகழ்ச்சி, இதற்கு மேலதிகமாக 07 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.	100%
கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வலய முகாமைத்துவத் திட்டத்தை திருத்தம் செய்தல்	2022.05.01 2022.12.31	5.6	5.6	3.35	ஆரம்ப அறிக்கை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.	70%

❖ சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை (123)

கருத்திட்டம்	**கருத்திட்டக் காலம்**	**மதிப்பீட்டு மொத்த செலவினம் (ரூ.மி.)**	**ஒதுக்கிய ஏற்பாடு (ரூ.மி.)**	**திரட்டிய நிதிசார் முன்னேற்றம்**	**திரட்டிய பௌதீக முன்னேற்றம்**	**திரட்டிய பௌதீக முன்னேற்றம் (விகிதமாக)**
மூலதனக் கருத்திட்டம் - MEPA	2022/01/01 முதல் 2022/12/31	20	15	14.44	❖ கப்பல் கழிவுப்பொருட்களை மீளப்பெறுவதற்கான வசதிகளை பெற்றுக் கொடுக்கும் உரிமப்பத்திரங்கள் 1400 விநியோகித்தமை. ❖ பங்கரின் சேவையை அமுல்படுத்துவதற்கு 10 உரிமப்பத்திரங்கள் மற்றும் ரோட் ரேன்கர் மற்றும் ரேன்க் பமருக்கு 02 உரிமப்பத்திரங்களை விநியோகித்தமை. ❖ ஹோட்டல் கைத்தொழிலுக்கு டம்பின் உரிமப்பத்திரங்கள் 304 விநியோகித்தமை. ❖ எண்ணெய் பரவுதல் அவசர திட்டமிடல் ஒழுங்குவிதிகளின் கீழ் 12 உரிமப்பத்திரங்களை அமுல்படுத்தும் நிலையில் பேணிவருதல். ❖ MV X-PRESS HOOGLY கப்பலினால் 2022.07.02 ஆம் திகதி பங்கர் எண்ணெய் பரவியதை கட்டுப்படுத்தல் மற்றும் குற்றவியல் பொறுப்புக்களின் கீழ் ரூ.மி. 15 ஐ பெற்றுக் கொண்டமை. ❖ MV X-PRESS கப்பலிடமிருந்து குற்றவியல் பொறுப்புக்களின் கீழ் அதிகாரசபைக்கு ரூ.மி. 12 ஐ பெற்றுக் கொண்டமை. ❖ அதிகாரசபையின் வருடாந்த வருமானத்தை ரூ.மி. 146.4 ஆக அதிகரித்துக் கொள்ள முடிந்தமை. ❖ உலக உணவு திட்டத்திடமிருந்து (WFP) ரூ.மி. 4 ஆன கொடையை பெற்றுக் கொண்டமை, அதன் மூலம் பிரதேச மட்டத்திலான திறன் விருத்தி செய்தல் மற்றும் தேசிய எண்ணெய் மற்றும் இரசாயன பரவலின் போது அமுல்படுத்தப்படும் அவசர திட்டம் தொடர்பாக (NOSCOP) விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் 5 நடாத்தப்பட்டமை. ❖ Commonwealth Litter நிகழ்ச்சித்திட்டத்தின் கொடையொன்றாக கிடைத்திருந்த நுண் பிளாஸ்ரிக் ஆய்வுகூடத்தை திறந்துவைத்தல் மற்றும் நுண் பிளாஸ்ரிக் ஆய்வுகள் 03 ஐ நடாத்தியமை. ❖ ஆழ்கடலில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் 'உனவட்டுன நில் தஜ' முன்னோடி கருத்திட்டம் பற்றிய கூட்டமொன்றை நடாத்தியமை. ❖ தத்துவமளிக்கும் அலகுகளுக்கான 12 கூட்டங்கள் மற்றும் 16 அவதானிப்பு விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டமை. ❖ மீன்பிடி துறைகளை அவதானிப்புச் செய்ல் மற்றும் 06 கூட்டங்கள் மற்றும் அவதானிப்பு விஜயங்கள் 21 ஐ மேற்கொண்டமை.	85%
					❖ மாத்தறை மாவட்டத்தில் பவளப்பாரை 200 சதுர மீற்றர் மீளத்தாபித்தமை மற்றும் தலவில மற்றும் முல்லைத்தீவு மட்டக்களப்பு லக்விஜய மின் உற்பத்தி நிலையம், Earth Lanka Pvt Ltd மற்றும் Rocklands ஒத்துழைப்புடன் பவளப்பாறை மீளத்தாபித்தல் மேற்கொள்ளப்பட்டமை. ❖ யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், கிளிநொச்சி, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கண்டல் தாவரங்களை 8.2 ஏக்கர்களில் மீளத்தாபித்தல் மற்றும் களுத்துரை மாவட்டத்தில் கண்டல் தாவர நாற்றங்கால்களை மேற்கொள்ளுதல் ❖ அனுசரணையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கிட்டத்தட்ட 4.1 மில்லியன் ஆன	

					ஏற்பாடுகளைப் பயன்படுத்தி நாளாந்தம் கரையோரப் பிரதேசத்தில் சுமார் 91 கிலோ மீற்றர் தூரத்தை சுத்தமாக பேணிவருதல். ❖ "சயுர ரக்கின ரெல்ல" எனும் நிகழ்ச்சித்திட்டம், சர்வதேச சமுத்திர தினம் மற்றும் சர்வதேச கடற்கரையை சுத்தம் செய்யும் தினத்தை முன்னிட்டு அனுசரணையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 1.4 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகள் மற்றும் பொருள் உதவிகளைப் பயன்படுத்தி கரையோரத்தை சுத்தம் செய்தல், நீருக்கு கீழே சுத்தம் செய்தல் மற்றும் மீன்பிடி துறைமுகத்தை சுத்தம் செய்யும் 268 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமை. ❖ அனுசரணையாளர்கள் ஊடாக களுத்துறை – ஆப்ரு கால்வாய், காலி சமனல பாலத்திற்கு அருகே மற்றும் காலி மாவகட கால்வாயில் கழிவு வடிகட்டிகள் பொருத்தப்பட்டமை. ❖ சட்டத்தை திருத்தம் செய்வது தொடர்பாக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட எண்ணக்கருப் பத்திரத்திற்கு நிறுவன மட்டத்தில் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள கலந்துரையாடல்களை நடாத்தியமை. ❖ "சயுர ரக்கின ரல்ல" அறிக்கைகள் நிகழ்ச்சியை தயார் செய்தல், பத்திரிகை அறிவித்தல்களை வெளியிடல். ❖ MEPA Academy கைவினைஞர் நிறுவனத்தினால் பயிற்சி செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டமை. ❖ காலியில் அமைந்துள்ள ஆய்வுகூடத்தினால் வணிக நடவடிக்கைகளுக்கு மாதிரிப் பரிசோதனைகள் 182 உம், எமது நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் பரிசோதனைகள் 457 உம் நடாத்தப்பட்டமை. ❖ வாகனங்களை பழுதுபார்த்தல் ❖ தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், நீரின் நிலைமையை பரிசோதிக்கும் உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ❖ ஊழியர் பயிற்சிக்கான 02 செயலமர்வுகளை நடாத்தியமை.	

வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள் - சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை

கருத்திட்டத்தின் பெயர்	பங்களிப்பு செய்யும் முகவராண்மை	கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவினம்	கருத்திட்டத்தின் காலஎல்லை
இலங்கையில் செய்மதியை அடிப்படையாகக் கொண்டு எண்ணெய் பரவுவதை அவதானிப்புச் செய்யும் சேவையின் முன்னோடிக் கருத்திட்டம் (Pilot Project on Satellite Based Oil Spill Monitoring Service in Sri Lanka)	AMBASSADE DE FRANCE A SRILANKA ET- AUX MALDIVES	601,810.00€	02. Years (2022 / 2023)

❖ இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

மாதிரிப்படிவம் 01

கருத்திட்டம்	கருத்திட்டக் காலம்	மதிப்பீட்டு மொத்த செலவினம் (TEC) (ரூ.மி.)	2022 ஆம் ஆண்டு ஒதுக்கிய ஏற்பாடு (ரூ.மி.)	2022.12.31 திகதிக்கு திரட்டிய நிதிசார் முன்னேற்றம்	2022.12.31 திகதிக்கு திரட்டிய பௌதீக முன்னேற்றம் (எழுத்தில்)	2022.12.31 திகதிக்கு திரட்டிய பௌதீக முன்னேற்றம் (விகிதமாக)
இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (123-02-21-002-2506)	2022.01.01 ~ 2022.12.31	500.00	500.00	500.00	வருடாந்தம் இடம்பெறுகின்ற பராமரிப்பு நடவடிக்கைகள், மீளத்தாபித்தல் நடவடிக்கைகள் மற்றும் நீர் வழங்கல் திட்டமிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.	100%
வேரஸ் கங்கை சூறாவளி கழிவு நீர் அகற்றல் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டம் (123-02-21-003-2506)	2017 எப்ரல் ~ 2021.12.31	11,050.00	480.00	10,671.00	நீர்வழங்கல் நிர்மாணிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. -100%	100%
ஒலியமுல்ல சூறாவளி கழிவு நீர் அகற்றல் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டம் (123-02-21-005-2506)	2018 மார்ச் ~ 2022 டிசம்பர்	3,000.00	200.00	2,041.70	* மீள்குடியேற்றல் செயன்முறையில் 90% ஆன முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. * பாலம் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு பொது மக்களுக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. * வலது கரையை தாபிப்பது ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பம்பியறை II இன் சிவில் கட்டமைப்பை நிர்மாணிப்பது 90% இலும் பார்க்க பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. * நுழைவாயில், தங்கும் சுருக்கக் குறிப்புக்கள் மற்றும் கழிவுகளுக்கான பிரதேசத்தை தாபிக்கும் செயன்முறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. * PS II தற்போது பம்பி மற்றும் என்ஜினை பொருத்துவது ஆயத்தமாக உள்ளது. வலது கரையை தாபிப்பதில் தற்போது முன்னேற்றம் உள்ளது.	68.3%

கொலன்னாவ கால்வாய் கழிவு நீர் அகற்றல் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டம் (123-02-21-006-2506)	2018 ஜூலை ~ 2024 டிசம்பர்	8,300.00	100.00	580.78	* நிலத் தொழில்நுட்பத் திட்டமிடலுக்கு தரவுகளை சேகரித்தல் - ஒட்டுமொத்த கருத்திட்டம் * மல்புர மதகை நிர்மாணித்தல் * வலிவல கெபியன் நிர்மாணித்தல் * விவேகாராம வாவியை நிர்மாணித்தல் * துப்பவெல வாவியை வடிவமைப்பதை ஆரம்பித்தல் * கால்வாயின் பராமரிப்பு நடவடிக்கைகள், உத்தேச காணி கொள்ளல் எல்லைகளை நிர்ணயித்தல்	7.6%
பெரே வாவி நீரின் தரத்தை வழமைக்குக் கொண்டுவருதல் (123-02-21-004-2506)	2022.01.01~ 2022.12.31	20.00	20.00	20.00	* தென் மேற்கு வாவியில் மிதக்கும் ஈரநிலத்தை தாபித்தல் * நீரின் நிலைமையை மேம்படுத்த நிலைபேறான நீண்ட காலத் தீர்வுகளை கண்டறிதல். * உயிரியல் பரிகார வாவி பராமரிப்பு நடவடிக்கைகளின் மூலம் நீரித் தரத்தை மேம்படுத்தல். 94% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.	100%

.....

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

டப்ளியு. எஸ். சத்யானந்த
செயலாளர

அத்தியாயம் 03

3. 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை

சமுத்திர வளங்களை பாதுகாத்தல் மற்றும் தாழ்நிலத் துறையின் அபிவிருத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தி தேசிய மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு 2021.07.07 ஆம் திகதிய 2235/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவருத்தி இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டது. அதற்கமைய இந்த இராஜாங்க அமைச்சு 2022.04.27 ஆம் திகதி வரை இயங்கி வந்ததுடன், 2022.04.28 ஆம் திகதி 2277/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கரையோர பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு என்று திருத்தம் செய்யப்பட்டது. கரையோர பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு 2022.05.26 ஆம் திகதி வரை இயங்கி வந்ததுடன், 2022.05.27 ஆம் திகதிய 2281/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய இந்த இராஜாங்க அமைச்சுக்கு உரித்தான விடயப்பரப்பு, நிறுவனங்கள் மற்றும் அமுல்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிடம் பொறுப்பளிக்கப்பட்டன. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் சமர்ப்பிக்கப்படுகின்ற வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2022 இல் முன்னர் காணப்பட்ட கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கு (தற்போது இராஜாங்க பிரிவாக காணப்படுகின்ற) உரிய நிதிசார் செயலாற்றுகை உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.1 நிதி செயற்திறன் கூற்று

தயவு செய்து பக்க இல 22 பார்கவும்

3.2 நிதி நிலபரம் தொடர்பிலான கூற்று

தயவு செய்து பக்க இல 23 பார்கவும்

3.3 காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று

தயவு செய்து பக்க இல 24 பார்கவும்

3.4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

தயவு செய்து பக்க இல 25 பார்கவும்

3.5 வருமானங்களினைத் திரட்டும் செயற்திறன்

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்துவதன் செயற்திறன் இறுதி ஒதுக்கீடு தொகையின் % என ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டது

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.7 நி.பி. 208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவர் ஒருவராக இத் திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.8 நிதி அல்லாத சொத்துக்களினை அறிக்கையிடுவதன் செயற்திறன்

தயவு செய்து பக்க இல 27 பார்கவும்

3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

தயவுசெய்து இணைப்பு 01 பார்க்கவும்

அத்தியாயம் 04

4. செயலாற்றுகை சுட்டியை அடைந்துகொள்வதன் முன்னேற்றம் - 2022

❖ **முன்னர் காணப்பட்ட கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் பிரிவுகளுக்கு அமைய 2022 ஆம் ஆண்டின் பணிகள்**

	பிரிவு	விசேட சுட்டிகள்	எண்ணிக்கை
1	**திட்டமிடல் பிரிவு**	ஆண்டின் இறுதியில் நடாத்தப்பட்டுள்ள முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை	06
		ஆண்டில் தயார் செய்து முடிக்கப்பட்ட மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளின் எண்ணிக்கை	06
2	**நிருவாக பிரிவு**	ஆண்டின் நிறைவு செய்யப்பட்டுள்ள வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டு படிவங்களின் எண்ணிக்கை	08
		தேவைகளுக்கு அமைய ஆண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை	26
3	**கணக்குகள் பிரிவு**	ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட பெறுகைகளின் எண்ணிக்கை	02
4	**உள்ளகக் கணக்காய்வு பிரிவு**	ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு வினாக்களின் எண்ணிக்கை	04
		ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை	04
5	**பொறியியல் பிரிவு**	கொடுப்பனவு சான்றுப்படுத்தப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை	05

❖ **கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் – செயலாற்றுகைச் சுட்டிகள்**

விசேட சுட்டிகள்	எதிர்பார்த்த பெறுபேறுகளின் விகிதமாக (%) உண்மையாக பூர்த்தி செய்யப்பட்டவை		
	100% - 90%	75% - 89%	50% - 74%
விளைதிறன்மிக்க பாதுகாப்பான கரையோரம்		76	
விளைதிறன்மிக்க செயற்கை மணல் போசிக்கப்பட்ட கரையோரம்			0
சுத்தப்படுத்தப்பட்ட கரையோரம்	100		
பேணப்பட்ட உணர்வுப்பூர்வமான கரையோர வலய வகைகளின் எண்ணிக்கை			0
மீளத் தாபிக்கப்பட்ட கண்டல் தாவரங்களின் எண்ணிக்கை		75	
கரையோர நீரின் தன்மை ph 8 இலும் பார்க்க கூடுதல் மட்டத்தில் உள்ளதா என்பதை பரிசோதித்தல்	100		
அபிவிருத்தி உரிமப்பத்திரம் வழங்குதவன் எண்ணிக்கை		82	
விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	100		

❖ சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை - செயலாற்றுகைச் சுட்டிகள்

விசேட சுட்டிகள்	எதிர்பார்த்த பெறுபேறுகளின் விகிதமாக (%) உண்மையாக பூர்த்தி செய்யப்பட்டவை		
	100%- 90%	75%-89%	50%- 74%
1. கப்பல்களுக்கு கழிவுப்பொருள் மீளப் பெறல் சேவையை வழங்குவது தொடர்பான உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை	93%		
2. ஹோட்டல்கள் மற்றும் கைத்தொழில்களுக்கு வழங்கப்படும் டம்பின் உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை			73%
- உத்தேச செயற்றிட்ட முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அவற்றில் பொருத்தமான செயற்றிட்டங்களை இனங்காணல், சாத்தியவள ஆய்வு, செயற்றிட்டங்களை செயற்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், கள மதிப்பாய்வு, முன்னேற்ற மீளாய்வு, நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் உள்ளடங்கலாக முன்னேற்ற அறிக்கையை தயார் செய்தல் மற்றும் உரிய நிறுவனத்திற்கு ஆற்றுப்படுத்தல்
- கிராமியப் பிரதேசங்களில் வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு விசேட செயற்றிட்டங்களை அமுல்படுத்தல், உரிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் வசதிகளை வழங்குதல்
- தோட்ட சமூகத்தின் அடிப்படை தேவைகள் பற்றிய தகவல்களை இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லல்
- பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதிகளை வழங்குகின்ற அலுவலர்கள் மற்றும் சமூக சக்தி அலுவலர்களின் இயலளவு அபிவிருத்தி தொடர்பாக பயிற்சி மற்றும் அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- தோட்ட வீடமைப்பு பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயார் செய்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- தோட்ட வீடமைப்பு பிரிவின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயார் செய்தல்.
- வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல்
- நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- தேசிய மட்டத்தில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக அமைச்சு தொடர்பாக பிரதிநிதித்துவத்தைச் செய்தல்
- கிராமிய சமூக உட்கட்டமைப்பு வசதிகள் குழுச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் power point சமர்ப்பிப்புக்களைத் தயார் செய்தல்.

1.5.5. கணக்கு பிரிவு

தோட்ட வீடமைப்பு பிரிவு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கு தேவையான பொருட்களையும் சேவைகளையும் பெறுகைச் செயற்பாட்டினூடாக வழங்குதல், சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகளை வழங்குதல், அபிவிருத்தி செயற்பாடுகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், பேணல், அரசாங்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கும் பொறுப்பாக இருப்பது கணக்குப் பிரிவாகும்.

- தோட்ட வீடமைப்பு பிரிவின் செயற்பரப்பிற்குள் அமைந்த பிரிவுகள் மற்றும் நிறுவனங்களில் நிதி முகாமைத்துவம்.

- கொள்வனவு ஏற்பாட்டு திட்டத்தைத் தயார் செய்தல் மற்றும் முகாமை செய்தல்.
- சொத்து முகாமைத்துவம்.
- நிதி முகாமைத்துவம் தொடர்பான புதிய தொழில் நுட்பங்களை உபயோகித்தல்.
- நிதி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள்.
- கணக்காய்வு தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பு செய்தல்.

1.5.6. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

தோட்ட வீடமைப்பு பிரிவின் நிதிச் செயற்பாடுகள் தொடர்பாக காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை மதிப்பீடு செய்வதுடன் குறைபாடுகளை ஒழித்தலும் இனங்காணலுக்கும் பயன்படுத்தப்படுகின்ற உள்ளக சோதனைகளின் ஒழுங்குகள் மற்றும் போதிய இருப்பு பற்றி தொடர்மதிப்பீடு செய்தலும், வருடாந்த நிதி ஒதுக்கீடு மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் உத்தேச திட்டங்களை செயற்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து தீர்மானங்கள் எடுப்பதில் உதவுதலும், முன்னேற்ற கலந்துரையாடலின் போது குறித்த விடயங்களை சுட்டிக்காட்டுதலுடன் வருடாந்த கணக்காய்வு திட்டமிடல், கணக்காய்வு விமர்சனங்கள் மூலம் குறைபாடுகளை நிவர்த்தி செய்தலும், கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதலும் ஒருங்கிணைப்பும் தோட்ட வீடமைப்பு பிரிவின் உள்ளக நிருவாக தொகுதிகளை மதிப்பிடல் மற்றும் தோட்ட வீடமைப்பு பிரிவினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களைப் போலவே தோட்ட வீடமைப்பு பிரிவின் ஏனைய செயற்பாடுகளையும் கணக்காய்வு அறிக்கைகளையும் அரசாங்க திறைசேரிக்கு சமர்ப்பித்தல் ஆகியன உள்ளக கணக்காய்வுப் பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும் முக்கிய பொறுப்பாகும்.

1.5.7. பொறியியல் பிரிவு

- Architecturel மற்றும் Design Drawings இற்கு அனுமதி அளித்தல்
- விபரக்குறிப்புக்கள் மற்றும் மதிப்பீடுகளுக்கு(Estimate) பரிந்துரை செய்தல்.
- பலவிதமான நிதி மூலங்களுக்கூடாக செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வையிடுதல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- செயற்றிட்டங்களை மேற்பார்வை செய்தல்.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப கணக்காய்வுகளுக்கு பங்களித்தல்
- நிர்மாணிப்பு செயற்றிட்டங்களுக்கு புதிய முறைமைகளை அறிமுகம் செய்தல்.
- களப்பரீட்சிப்புக்கள், மேற்பார்வை மற்றும் கள விஜயங்களை மேற்கொள்ளல்.
- வெளிநாட்டு நிதி உதவியுடன் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடுகளை தயார் செய்தல்.

1.6 தோட்ட வீடமைப்பு பிரிவின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

1.6.1. சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்

இலங்கையின் சகல சமூகங்களுக்கும் இடையில் சமாதானம், சகவாழ்வு, புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தல், இனங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் சமூக மீள் கலப்பினை மேம்படுத்தல் மற்றும் உற்சாகப்படுத்தல், இலங்கையர்கள் மத, கல்வி, தொழில்சார், சமூக, அரசியல், பொருளாதார, அழகியல்சார் மற்றும் பௌதீக அபிவிருத்தியை மேம்படுத்தல், இலங்கையர்களின் பொருளாதார, அரசியல், கல்வி, கலாச்சார, சமூக மற்றும் அழகியல் துறைகளில் அறிவு மற்றும் புரிந்துணர்வை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களின் ஊடாக சிறந்த சமூகமொன்றை உருவாக்குவதற்காக "சௌமியமூர்த்தி ஞாபகார்த்த மன்றம்" 2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் ஊடாக அவ்வருடத்தில் தாபிக்கப்பட்டது.

08 பேர்களினால் உருவாக்கப்பட்ட முகாமைத்துவ சபையினால் இந்த மன்றம் நிருவகிக்கப்படுவதுடன் மன்றத்தின் கீழ் 04 நிறுவனங்கள் செயற்படுகின்றன. இந்த நிறுவனங்கள் 04 இன் செயற்பாட்டு பணிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் வேதனம் உள்ளடங்கலாக தோட்ட வீடமைப்பு பிரிவின் மூலம் ரூபா 136.20 மில்லியன் 2022.12.31 ஆந் திகதியன்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் ரூபா 136.15 மில்லியன் 2022.12.31 ஆந் திகதியாகும் போது செலவிடப்பட்டுள்ளது.

1.6.1.1. ஹட்டனில் அமைந்த தொண்டமான் தொழில் பயிற்சி நிலையம்

இந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் வருடத்திற்கு 400 மாணவர்களை பயிற்றுவிப்பதற்கான வசதிகள் உள்ளதுடன் பயிற்சியாளர்களுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் உணவும் (சுமார் 200 பயிற்சியாளர்களுக்கு) அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது. தற்போது 04 வருடாந்த பாடநெறிகள் மற்றும் 13 அரையாண்டு பாடநெறிகள் உட்பட 17 தொழில் பாடநெறிகள் வருடத்திற்கு இரு பிரிவுகளின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றன. அதன்படி இந்த தொழிற் பயிற்சி நிலையம் அனைத்து வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் (NVQ) தரமான 17 பாடநெறிகளில் வருடத்திற்கு 500 தேர்ச்சிச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் அவர்களால் 60மூ சுய தொழில்கள் ஆரம்பித்திருப்பதும், 40 மூ தேர்ச்சி பெற்று தொழிற் சந்தையில் பிரவேசித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. அவையாவன

- மோட்டார் வாகனத் தொழிற்துறை
- மின்சாரத் தொழிற்துறை
- ICTT
- மின் உபகரணப் பராமரிப்புத் தொழிற்துறை (தொலைக்காட்சி, வானொலிப்பெட்டி திருத்தம்)
- மின் உபகரணப் பராமரிப்புத் தொழிற்துறை(வீட்டு மின்சாரம்)
- உருக்கியொட்டல் தொழிற்துறை (Welder)
- அலுமினிய பெப்ரிக்டர் (fabricator)
- தையல் தொழிற்துறை
- ஹோட்டல் பாடநெறி (அறைச் சேவை, பொறுப்பாளர்)
- மரவேலை தொழிற்துறை (Carpenters)
- இயந்திர உபகரண தொழிற்துறை (Mechanic)
- மருந்தக பாடநெறி (Pharmacy)
- ஆரம்பப்பள்ளி ஆசிரிய பாடநெறி
- தொலைக்காட்சி கலை/ சிகை அலங்காரம்
- முச்சக்கர வண்டி திருத்த பாடநெறி
- தாதி உதவிப் பாடநெறி

அனைத்து பாடநெறிகளுக்குமான மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்வதற்காக ஆங்கில பாடநெறியும் நடாத்தப்படுவதுடன் அனைத்து பாடநெறிகளினதும் இறுதியில் முறையாக பாடநெறியை பூரணப்படுத்தும் மாணவர்களுக்கு அவ்வப்பாட நெறிகளுக்கேற்ப NVQ Level 2,3,4 தரச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்ப்போருக்காக தொழிற்சார் மூன்றாம் நிலை ஆணைக்குழு மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய தொழிற் தகைமை NVQ தரத்திற்கேற்ப சான்றிதழ் பெற்றோருக்கு உயர் தொழில்களுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு அதிகரிக்கின்றமையால் NVQ தரத்தை மேலும் உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1-7- 2016-2022 வரை பயிற்சி பெற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு

இல	வருடம்	பயிற்சி நெறிகளின் எண்ணிக்கை	பயிற்சி அளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	பயிற்சி பெற்ற பிரிவுகளின் எண்ணிக்கை
1	2016	12	263	2
2	2017	12	335	2
3	2018	12	228	2
4	2019	12	276	2
5	2020	12	211	1
6	2021	17	287	1
7	2022	17	248	2
மொத்தம்			**1848**	

1.6.1.2. ரம்பொடையில் அமைந்துள்ள தொண்டமான் கலாச்சார நிலையம்

குறைந்த வசதிகளைக் கொண்ட பெருந்தோட்ட சமுதாயத்தினரின் கலாச்சார மற்றும் கலைத்திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் இங்கு கற்றல்களை முறைசார் மற்றும் முறைசாரா விதமாக வேறாக்கியுள்ளதுடன் முறைசார் பயிற்சியின் கீழ் தேசிய கல்வி நிறுவனத்துடன் (NIE) இணைந்து அதன் பாடத்திட்டத்திற்கு ஏற்ப முழு நேர பாடநெறிகளை நடாத்துவதற்கும் அரையாண்டு பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. முறைசாரா பயிற்சியின் கீழ் வயது வேறுபாடின்றி எவருக்கும் தமது ஆர்வத்தின் படி மரபு ரீதியான கலைத் திறன்களை வெளிக்கொணர்வதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். இதன் ஊடாக நாளாந்தம் அழுத்தம் நிறைந்த தொழில்களில் ஈடுபடுகின்ற பெருந்தோட்ட சமூகத்தின் மனவழுத்தத்தை குறைத்துக் கொள்வதற்கும் அவர்களுக்கு அழகியற்கலை பெறுமானங்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். இதற்கு மேலதிகமாக பலதரப்பட்ட விழாக்கள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பாக மண்டப வசதிகளை வழங்குவதும் ரம்பொடையில் அமைந்துள்ள தொண்டமான் கலாச்சார நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அட்டவணை 1-8 தை மாதம் தொடக்கம் ஐப்பசி மாதம் வரை ரம்பொடையிலுள்ள தொண்டமான் கலாச்சார நிலையங்கள் மூலம் பயிற்சி பெற்ற மாணவர்கள் பின்வருமாறு

இல	பாடம்	மாணவர்களின் எண்ணிக்கை
01	நடனம்	99
02	சங்கீதம்	58
03	கலைகள்	29
04	வீணை	19
05	வயலின்	30
06	மிருதங்கம்	4
07	ஆர்மோனியம்	12
மொத்தம்		251

1.6.1.3. நோர்வூட்டில் அமைந்துள்ள தொண்டமான் விளையாட்டு அரங்குத் தொகுதி

விளையாட்டின் ஊடாக பயன் பெறுகின்ற இளைஞர் யுவதிகளின் பௌதீக அபிவிருத்தி மட்டுமல்லாது உள அபிவிருத்தி மற்றும் பொழுதுபோக்கு நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த விளையாட்டுத் தொகுதி பேணப்பட்டு செல்வதுடன் அதற்கு மேலதிகமாக அருகிலுள்ள பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்கள் பலவற்றுக்கு பலதரப்பட்ட விளையாட்டு போட்டிகள் மற்றும் செயற்பாடுகளை நடாத்துவதற்கு அங்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று அதன் பகுதியொன்றில் நோர்வூட் தமிழ் பாடசாலையின் ஆரம்ப பிரிவு வகுப்புக்களை நடாத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டு கட்டிடத்தொகுதியில் பிரதானமாக உடல்வலிமை நிலையமொன்றும் இருப்பதுடன் டெனிஸ், பெட்மின்டன், வலைப்பந்து, கரப்பந்து, கைப்பந்து, கூடைப்பந்து ஆகிய விளையாட்டுக்களுக்கு உள்ளக விளையாட்டு அரங்கொன்றும் கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களுக்கு வெளியக விளையாட்டு மைதானமும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்பொழுது உதைப்பந்து சம்மேளனத்திற்கு வழங்கப்படுவதன் மூலம் தொண்டமான் விளையாட்டு கட்டிடத்தொகுதியை புதிய விதத்தில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்ககூடியதாக இருக்கும். அதன் பிரகாரம் சர்வதேச தரத்திற்கு பொருந்தும் வகையில் விளையாட்டு கட்டிடத்தொகுதியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மூன்று கட்டங்களின் கீழ் விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **உடல் வலிமை மற்றும் பொழுதுபோக்கினை மேம்படுத்தும் விளையாட்டுக்கள்**

இதன் கீழ் உடல்வலிமை பயிற்சியாளர்கள் 44 பேர் பயிற்றுவிக்கப்பட்டு அவர்கள் சகல சமூக வலு நிலையங்களுக்கும் இணைப்புச் செய்யப்பட்டு தோட்ட பிரதேசத்தை அண்டிய இளைஞர் யுவதிகள் உடல்வலிமை பயிற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று உள்ளக விளையாட்டுக்கள் தொடர்பாக இளைஞர் யுவதிகளை ஈடுபடுத்துவதற்கும் மேம்படுத்துதற்கும் இதன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. வருடாந்தம் 12 போட்டிகளை நடாத்தி பயனாளிகளின் எண்ணிக்கையை 2000 வரை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

- **போட்டிகளை நோக்காக கொண்ட விளையாட்டுக்கள்**

  விளையாட்டுக்களில் திறமைகளை வெளிப்படுத்தும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு தேவையான அனைத்து வசதிகள் மற்றும் வழிநடத்தல்களை மேற்கோண்டு தேசிய மட்ட வெற்றிகளை ஈட்டுவதற்கு அவர்களை வழிநடத்துவது இதன் நோக்கமாகும். வருடாந்தம் 100 போட்டிகளை நடாத்தி தெரிவு செய்யப்பட்ட 5 போட்டியாளர்களை ஆசிய மற்றும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு அனுப்புவதே இதன் நோக்கமாகும்.

- **பொருளாதார நோக்கம் கொண்ட விளையாட்டுக்கள்**
  நுவரெலியா மாவட்டம் பல வெளிநாட்டவர்களின் மனதை கொள்ளை கொள்ளும் பிரதேசமாக இருப்பதுடன் இதுவரை நுவரெலியா மாவட்டத்தில் சர்வதேச மட்டத்தில் விளையாட்டு மைதானத் தொகுதியொன்று இல்லாமையினால் தொண்டமான் விளையாட்டரங்கு கட்டிடத்தொகுதியை சகல வசதிகளும் கொண்ட சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதான தொகுதியாக உருவாக்கி அதன் ஊடாக வருமானத்தை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

1.6.1.4 பிரஜா சக்தி அபிவிருத்திச் செயற்றிட்டம் (E- KIOSK Centers)

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை முழுமையாக பயன்படுத்தி குறைந்த வரப்பிரசாதங்களைக் கொண்ட இனக் குழுக்களுக்கு முழுமையானதும் விளக்கமானதுமான சமூக பொருளாதார அபிவிருத்தியை உரிமையாக்கிக் கொடுத்தல் இந்த செயற்றிட்டத்தின் நோக்கமாகும். அது தொடர்பாக சமூகத்திற்கு தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பத்தை வழங்கும் நோக்கில் பெருந்தோட்டப் பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையில் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பிரஜா சக்தி அபிவிருத்தி செயற்றிட்டம் நுவரெலியா, பதுளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை, கழுத்துறை, காலி, மாத்தறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 44 பிரஜா சக்தி நிலையங்கள் (E- KIOSK Centers) ஊடாக அமுல்படுத்தப்படும்.

தோட்ட பிரதேசங்களில் முதலாம் ஆண்டு முதல் உயர் கல்வியைத் தொடர்கின்ற மாணவ மாணவிகளுக்கும் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுவதிகளுக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை வழங்கும் கேந்திர நிலையமாக பிரஜா சக்தி நிலையம் செயற்படும். அதேபோன்று கல்வி நோக்கங்கள் தொடர்பாக இணையத்தள வசதிகள் தேவையானோர் தொடர்பாக இலவசமாக அந்த வசதிகளை வழங்குவதற்கும் நூல்நிலைய வசதிகளை வழங்குவதன் ஊடாக அவர்களுடைய வாசிப்பு மற்றும் அறிவு வளர்ச்சிக்கும் கவிதை, நாடகம் மற்றும் பேச்சு போட்டிகளின் ஊடாக ஆளுமை விருத்திக்கும் இந்த நிலையத்தின் ஊடாக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று பலதரப்பட்ட செயலமர்வுகள் மற்றும் விரிவுரைகளை நடாத்துவதும் பலதரப்பட்ட கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும் இதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

அதேபோன்று சுகாதாரம் மற்றும் பெண்களை வலுப்படுத்தல், சூழல் பிரச்சினைகள், சுய தொழில்கள், தோட்டத்துறையின் பிள்ளைகள் தொடர்பாக தாக்கம் செலுத்துகின்ற பலதரப்பட்ட பிரச்சினைகள், ஊக்கப்படுத்தல் செயற்பாடுகள், போதைவஸ்து நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள், ஊட்ட சத்து நிலையை மேம்படுத்தல் (சமூக சமையலறை திட்டம்), கொரோனா கட்டுப்பாட்டு செயற்றிட்டங்கள் மற்றும் சாகுபடி திட்டங்கள் போன்ற பலதரப்பட்ட தலைப்புக்களின் ஊடாக தோட்டச் சமூகத்தை அறிவுறுத்துவதற்காக பிரஜா சக்தி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் ஊடாக பலதரப்பட்ட சமூக அடிப்படை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன் விசேடமாக அவர்களுடைய வருமானம், உழைப்பு, வருமான வழிகளை அதிகரித்தல் (சுயதொழில்) தொடர்பாகவும் தலைமைத்துவ திறன்கள் மற்றும் பௌதீக அபிவிருத்தி தொடர்பாகவும் ஊக்கப்படுத்தல் செயற்பாடுகள் இதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

அதேபோன்று கல்வி நோக்கங்களுக்காக இணையத்தள வசதிகள் தேவையானவர்களுக்கு இலவசமாக வழங்குதல் இதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

பிரஜா சக்தி நிலையங்களின் ஊடாக தகவல் தொழில் நுட்பம் தொடர்பாக பின்வரும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

1. தகவல் தொழில்நுட்பத்தின் அறிமுகம்
2. வன்பொருள; (Hardware)
3. விண்டோஸ் (Windows)
4. மென்பொருள;- Paint, Microsoft word, Mirosoft Excel, Micro soft Power Point, Microsoft Access
5. இணையம் மற்றும் மின்னஞ்சல்
6. Graphic Design- Gorel Draw, Photoshop, HTML,Page Maker
7. Scanning
8. அச்சிடுதல; (Printing)

அட்டவணை 1-9 2022 ஆம் ஆண்டில் பிரஜா சக்தி நிலையங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் பின்வருமாறு

இல	திட்டத்தின் பெயர்	திட்டங்களின் எண்ணிக்கை	பங்கு பற்றியவர்களின் எண்ணிக்கை
01	கல்வித்திட்டங்கள்	4	254
02	வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டம்	9	158
03	சமூக மற்றும் சமூகம் அடிப்படையிலான திட்டம்	7	460
04	சுகாதாரத்திட்டங்கள்	10	498
மொத்தம்			**1370**

1.6.2 பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு

பெருந்தோட்ட துறையில் வசிக்கின்ற மக்களின் வாழ்வாதார வழிகளை மேம்படுத்தும் நோக்கில், 1992 செப்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றாக "தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நிதியம்" தாபிக்கப்பட்டது.

1992 இல் அரசினால் எடுக்கப்பட்ட கொள்கைக்கு ஏற்ப JEDB (ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை) Elkaduwa மற்றும் SLSPC (இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்) இன் கீழ் உள்ள பெருந்தோட்ட கம்பனிகள், பிரதேச பெருந்தோட்ட கம்பனிகள் 23 இன் கீழ் அவர்களுடைய முகாமையை கையளிப்பதன் ஊடாக தனியார் மயப்படுத்தப்பட்டது.

தனியார் மயப்படுத்தலின் பின்னர் குறுகிய காலத்தினுள் JEDB மற்றும் SLSPC சமூக நிறுவனம், பெருந்தோட்ட மக்களின் சுகாதாரம், சமூக நலன்புரி மற்றும் வாழ்வாதாரச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக PHSWT (தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நிதியம்) ஆக ஒன்றிணைக்கப்பட்டது. 2002 ஒக்டோபர் 25 ஆம் திகதி இந்த அமைப்பு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு (PHDT) என மீள் பெயரிடப்பட்டதுடன் இந்த நிதியத்தின் ஊடாக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்பட்டது.

தோட்ட மக்களின் நலன் கருதி தாபிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனம், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை செயற்படுத்தும் போது அரசின் உரிய அமைச்சு, தொழிற்சங்கங்கள், பிரதேச பெருந்தோட்ட கம்பனிகள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் பிற உள்நாட்டு அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றது.

PHDT யின் நடவடிக்கைகள் ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படும் தலைவரின் கீழ் இயங்கும் பணிப்பாளர் சபையினூடாகவே செயற்படுத்தப்படும். அதில் அரசாங்க திறைசேரி , பிராந்திய பெருந்தோட்ட கம்பனி மற்றும் தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் உள்ளடங்குவர். இதன் பிரதான காரியாலயம் பத்தரமுல்லையில் அமைந்துள்ளதுடன் 7 பிராந்திய காரியாலயங்கள் இரத்தினபுரி, பதுளை, கேகாலை, கண்டி, ஹட்டன் மற்றும் நுவரெலியாவில் அமைந்துள்ளன. அத்துடன் பிரதேச காரியாலயங்களின் நடவடிக்கைகள் பிரதேச பணிப்பாளர் மற்றும் தொழில்நுட்ப, சுகாதார, நிதி மற்றும் நிர்வாக செயற்குழு மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

தோட்ட வீடமைப்பு பிரிவின் நிதியேற்பாட்டின் ஊடாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்கள்

தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி

தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டில் புதிய செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்காக ஒதுக்கீடாக ரூபா 275 மில்லியன் தோட்ட வீடமைப்பு பிரிவிற்கு

கிடைக்கப்பெற்றது. அந்த நிதி ஏற்பாட்டின் மூலம் அமுல்படுத்தப்பட்ட வீடமைப்பு செயற்றிட்டங்களின் முன்னேற்ற அறிக்கை பின்வருமாறு

அட்டவணை 1-10 2022.12.31 திகதியன்று புதிய வீடமைப்பு திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்

பிரதேச / மாவட்ட செயலகம்	பிரதான செயற்பாடுகள் மற்றும் அத்திவாரம் பூர்த்தியான வீடுகளின் எண்ணிக்கை	சுவர் மட்டம் வரை பூர்த்தியான வீடுகளின் எண்ணிக்கை	கூரை மட்டம் வரை பூர்த்தியான வீடுகளின் எண்ணிக்கை	இறுதி கட்டத்திலுள்ள வீடுகளின் எண்ணிக்கை	கட்டி முடிக்கப்பட்ட வீட்டு அலகின் எண்ணிக்கை	மொத்த வீட்டு அலகின் எண்ணிக்கை
காலி	15	15	0	21	2	53
இரத்தினபுரி	0	9	4	18	35	66
பதுளை	0	0	0	0	0	0
கேகாலை	18	19	0	0	55	92
கண்டி	58	36	90	61	71	316
ஹட்டன்	165	137	78	62	113	555
நுவரெலியா	86	125	43	95	50	399
களுத்துறை	0	17	0	0	16	33
மொத்தம்	**342**	**358**	**215**	**257**	**342**	**1514**

அட்டவணை 1-11 2022.12.31 ஆந் திகதி வரையான உட்கட்டமைப்பு வசதிகள் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

செயற்றிட்டம்	செயற்றிட்டங்களின் எண்ணிக்கை	அமுல்படுத்தப்பட்டுவரும் செயற்றிட்டங்களின் எண்ணிக்கை	பூரணப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை
தோட்ட உட்பிரவேச பாதை அபிவிருத்தி	24	01	23
நீர் விநியோக செயற்றிட்டம் ஆரம்பித்தல்/ அபிவிருத்தி	3	0	3
ஆரம்ப கல்விக்கான அபிவிருத்தி வசதிகளை ஏற்படுத்தல்	6	1	5
பழுதடைந்த வரிசை (லயன்) அறைகளின் கூரைகள் திருத்தல்	2 (5 வரிசை (லயன்) அறை அலகுகள்)	0	2 (5 வரிசை (லயன்) அறை அலகுகள்)
சுகாதார வசதிகளை மேம்படுத்தல்	1	0	1
விளையாட்டு மைதான அபிவிருத்தி	5	2	3
கள இளைப்பாறும் விடுதி	3	0	3
வழிபாட்டு தளங்கள்	31	8	23
வைத்தியசாலைகள்	1	0	1
பக்கச் சுவர், மதில் அபிவிருத்தி	8	1	7
மொத்தம்	**84**	**13**	**71**

2022 ஆம் ஆண்டு உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக மனித வள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்புக்கு ரூபா 120 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அந்த நிதி ஒதுக்கீட்டில் ரூபா 104.90 மில்லியன் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு செலவிடப்பட்டுள்ளது.

1.6.3. பெருந்தோட்டப் பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

பெருந்தோட்ட சமூகத்தின் முன்னேற்றத்திற்காக செயற்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளை துரிதமாக நிறைவேற்றும் நோக்கில் அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள அரச நிறுவனமொன்றை பேணிச் செல்ல வேண்டிய தேவையின் காரணமாக 2018.06.25 ஆம் திகதி "பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை" யை தாபிப்பதற்கு செயற்படுவதுடன் அதனுடன் தொடர்புடைய 2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது. அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டின் பெப்ருவரி 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த அதிகாரசபையின் முகாமை 13 நபர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட முகாமைத்துவ சபையினைக் கொண்டிருப்பதுடன் அதிமேதகு சனாதிபதி அவர்கள் இதன் தலைவரை நியமனம் செய்கின்றார். அதேபோன்று " பணிப்பாளர் நாயகம்" அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராவார். பதவியணி தொடர்பாக 13 பிரிவுகளின் கீழ் 27 பதவிகள் உள்ளன.

2022 ஆம் ஆண்டு பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 16 மில்லியன் (தனியாள் வேதனம் ரூபா 7மில்லியன், மீண்டுவரும் செலவீனம் ரூபா 4 மில்லியன் மற்றும் மூலதன செலவீனம் ரூபா 5 மில்லியன்) ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதி ஒதுக்கீட்டில் 2022 ஆண்டில் ரூபா 7.395 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையினுடாக முன்னெடுக்கப்படும் திட்டங்கள் / செயற்பாடுகளின் முன்னேற்றம் பின்வருமாறு

- வதிவிடங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக மதிப்பீட்டு ஆராய்ச்சி
- UNFPA உடன் பங்காண்மை
- oDoc உடன் பங்காண்மை
- தோட்டங்களில் பாதிக்கப்படக்கூடிய பாடசாலை மாணவர்களுக்கு 1000 மெற்றிக் தொன் அரிசி வழங்குதல்
- பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- பிரித்தானிய ஆதரவுடன் புத்தகங்கள் நன்கொடையாக வழங்குதல்

1.7. வெளிநாட்டு உதவியுடன் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களின் விபரம்

1.7.1 இந்திய நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள்.

பெருந்தோட்ட சமூகம் தொடர்பாக முழுமையான அடிப்படையில் வீட்டு அலகுகள் 14,000 ஐ வழங்குவதற்கு இந்திய அரசினால் நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் கீழ் இச்செயற்றிட்டங்கள் மூன்று கட்டங்களாக அமுல்படுத்தப்படுவதுடன் முதலாம் மற்றும் இரண்டாவது கட்டத்தின் (Stage 01 & 02) ,ன் கீழ் வீட்டு அலகுகள் 4,000 மற்றும் மூன்றாம் கட்டத்தின் (ளுவயபந 03) கீழ் வீட்டு அலகுகள் 10,000 செயற்படுத்தப்படும். ஒரு வீட்டின் பெறுமதி ரூபா 1.00 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இச் செயற்றிட்டம் தொடர்பாக வீடொன்றுக்கு இந்திய அரசினால் ரூபா 950,000/= தொகையும் உரிய பெருந்தோட்டக் கம்பனியால் ரூபா 30,000/= தொகையும்,

பயனாளியினால் ரூபா 20,000/= உடல் உழைப்பும் வழங்கப்படும். இந்த வீடமைப்பு செயற்றிட்டங்கள் தொடர்பாக தேவையான குடிநீர் வசதிகள், மின்சாரம், பிரவேச வீதிகள் உள்ளடங்கலாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக முதலாவது கட்டத்தில் வீடுகள் தொடர்பாக ஒரு வீட்டு அலகிற்கு ரூபா 120,000/= மற்றும் இதன் இரண்டாம் கட்டம் தொடர்பாக ரூபா 150,000/= ஆக இலங்கை அரசினால் நிதி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

(அ) முதலாம் மற்றும் இரண்டாம் கட்டம் (Stage 1 & 11) – 4,000 வீடுகள்

2016.01.08 திகதியன்று அமைச்சரவைப் பத்திரத்தின்படி இலங்கையின் இந்திய தூதரகத்துடன் 2016.04.01 அன்று கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி இந்திய வீடமைப்பு செயற்றிட்டத்தின் முதலாம் இரண்டாம் கட்டங்கள் இந்திய தூதரகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் இந்திய தூதரகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்வரும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகிறது.

1. **ஐக்கிய நாடுகளின் மானிட குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டம் (UN-Habitat)**
2. **சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம; (IFRC)**
3. **மானுடத்திற்கான நிழல் (Habitat for Humanity)**
4. **தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை (NHDA)**

2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ரூபா 260 மில்லியன் (இலங்கை அரசாங்கத்தின் நிதி பங்களிப்பு – ரூபா 165 மில்லியன் மற்றும் இந்திய அரசாங்கத்தின் நிதி - ரூபா 95 மில்லியன்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் 3,819 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 31.12.2022 ஆகும்போது பூரணப்படுத்தப்பட்ட 3,323 வீடுகள் ஏற்கனவே பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் 496 வீடுகள் கையளிக்கப்படவுள்ளன.

(ஆ) மூன்றாம் கட்டம; (Stage 111) – 10,000 வீடுகள்

ஐஐஐ வது கட்டத்தின் கீழ் இந்திய அரசினால் 10,000 புதிய வீடுகள் பெருந்தோட்ட சமூகத்திற்கு வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. அதற்கான அமைச்சரவைத் தீர்மானம் 2018.08.16 ஆம் திகதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இலங்கையின் இந்திய தூதுவராலயத்துடன் 2018.08.12 ஆம் திகதி அதற்கு உரிய புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன் பிரகாரம், பதுளை, ஹட்டன், நுவரெலியா, கண்டி, கேகாலை, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய ஏழு தோட்ட வலயங்களில் தோட்ட சமூகத்திற்கு மூன்று கட்டங்களுடன் 10,000 வீட்டு அலகுகளை தோட்ட ஊழியர்களின் தலைமையில் மற்றும் தோட்ட ஊழியர் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- கட்டம் 1 (Phase II) இதன் கீழ் 3,525 வீடுகள் அமைப்பதற்கு உரிய இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன
- கட்டம் 11 (Phase II) இதன் கீழ் 3,944 வீடுகள் அமைப்பதற்குரிய தோட்டங்கள் தெரிவு செய்யப்பட்ட போதிலும் இடங்கள் தெரிவு செய்யப்படவேண்டியுள்ளது.
- கட்டம் 111 (Phase III) இதன் கீழ் 2.531 வீடுகள் அமைப்பதற்குரிய தோட்டங்கள் தெரிவு செய்யப்பட்ட போதிலும் இடங்கள் தெரிவு செய்யப்படவேண்டியுள்ளது.

1.7.2. தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டம்

இந்திய அரசினால் ஹட்டனில் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் தொடர்பாக புதிய மூன்று மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் தற்பொழுது உள்ள கட்டிடங்களை நவீன மயப்படுத்தலும் சந்தைக் கேள்விக்கு பொருந்தும் விதத்தில் புதிய பயிற்சிப் பாடநெறிகளை ஏற்படுத்தல் மற்றும் அதற்குத் தேவையான புதிய தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதையும் நோக்காகக் கொண்டு இந்த செயற்றிட்டம் தொடர்பாக நிதி உதவி வழங்கப்படுகின்றது.

அதற்குரிய அமைச்சரவை அங்கீகாரம் 2017.05.02 திகதியன்று கிடைக்கப் பெற்றதுடன் அது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2017.09.20 ஆம் திகதி இலங்கையின் இந்திய தூதரகத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

1.8 தோட்ட வீடமைப்பு பிரிவின் அபிவிருத்திப் பிரவேசம் மற்றும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் முறைமை

1.8.1 அபிவிருத்திப் பிரவேசம்

பிரதேச மற்றும் இன குழுக்களுக்கிடையில் நிலவுகின்ற சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை குறைக்கும் அணுகுமுறைகளினூடாக அரசின் நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைவதற்கு தேவையான கொள்கைகளை உருவாக்கி அமுல்படுத்தும் நோக்கில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்த தோட்ட வீடமைப்பு பிரிவு பெருந்தோட்ட பிரதேசத்தை மையமாகக் கொண்டு வாழ்கின்ற 250,000 குடும்பங்கள் (ஏறக்குறைய ஒரு மில்லியன் சனத்தொகையுள்ள) சமூகம் தொடர்பாக சமூக பங்குபற்றல் மற்றும் அரச தலையீட்டுடன் மக்கள் சபை மற்றும் சமூக அடிப்படை ஊடாக பெருந்தோட்ட சமூக தலைமைத்துவம் மற்றும் பங்குபற்றலை பங்களிப்புச் செய்து அவர்களுடைய வாழ்வாதார நிலைமையை கட்டியெழுப்புவதும், வதிவிடங்கள் மற்றும் காணி பற்றிய பிரச்சினைகள், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை குறைவடைதல் பற்றிய பிரச்சினைகள், குறை வருமான நிலைமை சுகாதார மற்றும் போசாக்குப் பிரச்சினைகளை இழிவுபடுத்துவதற்காக சுழற்சி அடிப்படையில் பங்களிப்புச் செய்து அவர்களுடைய கல்வி, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதற்குத் தேவையான அரச தலையீடும் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் ஊடாக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள வீடமைப்பு, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் உள்ளடங்கலாக அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் போசாக்கு, ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள், சமூக வலுவூட்டல் போன்ற துறைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைச்சரவை அமைச்சு மற்றும் ஏனைய நிரல் அமைச்சுக்கள், மாகாண அமைச்சு உள்ளடங்கலாக சகல நிறுவனங்களின் முழுமையான பங்களிப்பைப் பெற்றுக் கொண்டு வசதிகள் நிறைந்த சௌபாக்கியமான பெருந்தோட்ட சமூகமொன்றை உருவாக்குவதற்காக நாம் முன்னோடியாக செயற்பட்டு வருகின்றோம்.

1.8.2 தோட்ட வீடமைப்பு பிரிவின் அபிவிருத்தி முன்னுரிமைகள்

1. தோட்ட சமூகங்களை அண்டிய வீடு மற்றும் குறைந்த மாடி எண்ணிக்கையை கொண்ட வீடுகளை நிர்மாணித்தல்.
2. தோட்ட சமூகங்களை அண்டிய வகையில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி.
3. தோட்ட சமூகத்தை அண்டிய சனசமூக சபை மற்றும் சனசமூக நிலையங்களை தாபித்தல்.
4. தோட்ட சமூகத்தின் பிள்ளைகள் தொடர்பாக அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளை உறுதிப்படுத்தல்.
5. தோட்ட சமூகத்தின் வாழ்வாதார அபிவிருத்தி

1.8.3. தோட்ட வீடமைப்பு பிரிவு அபிவிருத்தி செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் முறைமை

தோட்ட வீடமைப்பு பிரிவினால் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் பணி பிரதானமாக தோட்ட வீடமைப்பு பிரிவு விடயப் பரப்பின் கீழ் உள்ள நிறுவனங்களாகும். அவையாவன

- பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு
- சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்
- பெருந்தோட்ட பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதற்கு மேலதிகமாக
- மாவட்ட / பிரதேச செயலாளர் அலுவலகங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளினால் மேற்கொள்ளப்படுகின்றது

அத்தியாயம் 02

2. ஆம் அத்தியாயம் முன்னேற்றம் மற்றும் தொலை நோக்கு விசேட வெற்றிகள், சவால்கள், எதிர்கால இலக்குகள்

2.1 தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

வதிவிடங்கள் தொடர்பான குறிகாட்டிகளைக் கருதும் போது மிகவும் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ள இனக் குழுவாக பெருந்தோட்ட சமூகத்தை கருத முடியும். பெருந்தோட்டச் சமூகம் வாழ்கின்ற வீடுகளில் அதிகமானவை வரிசை வீடுகளாக இருப்பதுடன் அந்த வீடுகள் ‘‘லயன் அறைகள்’’ ஆக அறிமுகம் செய்யப்படுகின்றது. இந்த வீடுகளில் வாழ்கின்ற பெருந்தோட்ட சமூகம் அதிகமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளன

- மிகவும் பழைமை வாய்ந்த வீடுகள் என்பதால் பழுதடைந்து காணப்படல்.
- சூரிய ஒளி மற்றும் காற்றோட்டம் மிகக் குறைவாக காணப்படுதல்.
- அதிகமான சன நெரிசல்
- தனித்துவம் இன்மை
- உப குடும்பங்கள் உருவாகுவதாலும் அவர்களும் அதேவீட்டில் தங்குவதாலும் பலவித துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாதல்.
- பாதுகாப்பின்மை
- சமூக ஏற்பின்மை
- சுகாதார மற்றும் சிறுவர்கள் கல்வி கற்பதற்கு பொருத்தமான சூழல் காணப்படாமை

பெருந்தோட்டத் துறையில் இது போன்ற வீட்டு வகைகள் 3 ஆகும்.

I.தனி வீடுகள்

264 சதுர அடிகளைக் கொண்ட இந்த வீடு முன்பகுதி திண்ணை மற்றும் அறையொன்றை உள்ளடக்கியதாகும்.

II .இரட்டை வீடுகள்

முன்பகுதி திண்ணையுடன் கூடிய அறைத் தொடர்களைக் கொண்ட வீடாகும். ஒரு வீட்டிற்கு சதுர அடி 145 – 175 அளவில் உரித்தாகும். தொடராக 10 – 12 அறைகள் இருக்க முடியும் அத்தோடு இரண்டு வரிசைகளைக் கொண்டிருக்கும்.

III..தற்காலிக வீடுகள்

பெருந்தோட்டத் துறையில் படிப்படியாக குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைத் தொடர்ந்து லயன் வீடுகள் போதியளவாக காணப்படாமையின் காரணமாக அந்த வீடுகளுக்கு அண்டிய வகையில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தகரங்கள் மற்றும் பொலித்தீனால் உருவாக்கப்பட்டுள்ள இந்த வீடுகள; மிகவும் குறைந்த வசதிகளைக் கொண்டிருக்கின்றன.

வதிவிடங்கள் தொடர்பில் பெருந்தோட்ட சமூகம் முகங்கொடுக்கின்ற இந்த கடினப்பாடுகளை தீர்த்து கௌரவத்துடன் வாழ்கின்ற உரிமையை பெருந்தோட்ட சமூகத்திற்கு வழங்கும் நோக்குடன் தோட்ட வீடமைப்பு திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

அதன் கீழ் காணி உறுதியுடன் கூடிய 07 பேர்ச் காணி உரிமையுடன் பாதுகாப்பான குடிநீர், மின்சாரம் மற்றும் பிரவேச வழிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 550 சதுர அடியுடன் இணைந்த மலசல கூடத்தையும் கொண்ட தனி வீடுகளை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலாக விலங்கு வேளாண்மை மற்றும் வீட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ள கூடியவாறு 03 பேர்ச் காணி வழங்குவதற்கு 2021 ஜனவரி மாதம் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. (அமைச்சரவை பத்திர இலக்கம் MUD&H/2021/CP/06 திகதி 2021.01.07)

அட்டவணை 2-1 2022.12.31 ஆம் திகதியில் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த முன்னேற்றம் (அரசாங்கத்தின் நிதி ஏற்பாட்டின்படி அமுல்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டம்)

2022 ஆம் ஆண்டில் பூர்தியடையாத மற்றும் அனுமதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை		1495
31.12.2022 ஆம் ஆண்டில் பூரணப்படுத்த திட்டமிட்ட வீடுகள்	பூரணப்படுத்த திட்டமிட்ட வீடுகள்	522
	சுவர் மட்டம் வரை பூரணப்படுத்த திட்டமிட்ட வீடுகள்	305
2022.12.31ல் பூரணப்படுத்தப்பட்ட வீடுகள்		323
2022.12.31ல் கூரை மட்டம் வரை பூரணப்படுத்தப்பட்ட வீடுகள்		472
2021 இல் நிதி ஒதுக்கீடு ரூபா மில்லியன்		275
2022.12.31 இல் நிதி ஒதுக்கீடு ரூபா மில்லியன்		275
2022.12.31 ல் நிதி ஒதுக்கீட்டில் செலவு ரூபா மில்லியன்		164.69

2.2 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

பெருந்தோட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதித் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கில் செயற்றிட்டங்களை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் இதன் போது மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி தற்போது இனங்காணப்பட்டுள்ள குறைபாடுகள்

- சுத்தமான குடிநீர் பிரச்சினை
- மலசல கூட வசதி பற்றாக்குறை
- போக்குவரத்து பிரச்சினை
- சமய மற்றும் கலாச்சார வசதியின்மை
- சிறுவர் பாதுகாப்பு நிலையம் கல்வி வசதிகள் இன்மை

விளையாட்டு வசதிகள் மற்றும் ஏனைய பொது வசதிகள் பெற்றுக்கொடுப்பதற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அனர்த்த நிலைமைகளின் போது பெருந்தோட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் செயற்றிட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. தோட்ட வீடமைப்பு பிரிவின் கீழ் இயங்கும் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பின் பிராந்திய காரியாலயங்கள் மூலமாகவும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாகவும், தோட்ட வீடமைப்பு பிரிவின் நிதி ஒதுக்கீடு மூலம் அம்மக்களுக்கு வசதிகள் வழங்கும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அட்டவணை 2-2 2022 ஆம் ஆண்டினுள் அமுல்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் சாராம்சம் (31.12.2022 ஆந் திகதி வரை)

செயற்றிட்டம்	வருடாந்த ஏற்பாடு (வருடாந்த திட்டமிடலின் படி) ரூபா. மில்)	2022.12.31 திகதியில் நிதி ஒதுக்கீடு ரூபா. மில்	உண்மையான செலவினம் ரூபா. மில் 2022.12.31	நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்றிட்டங்கள்	பூர்த்தி அடைந்த செயற்றிட்டங்களின் எண்ணிக்கை
சேதமடைந்த வரிசை வீட்டு(லயன்) அறைகளின் கூரையை மீள் தகரமிடல்	6	6	5.16		2 (திட்டங்கள்) 5(அலகுகள்)
நீர் விநியோக செயற்றிட்டம் ஆரம்பித்தல்/ அபிவிருத்தி	5	5	3.84		3
தோட்ட உட்பிரவேச பாதைகள் அபிவிருத்தி	35	35	27.99	1	23
விளையாட்டு மைதான அபிவித்தி	10	10	7.27	2	3
சிறுவர் பராமரிப்பு நிலையங்கள்,ஆரம்பக்கல்வி வசதி	15	15	8.31	1	5
சுகாதார வசதிகள் மேம்படுத்தல்	2	2	0.34		1
கள இளைப்பாறும் நிலையம் வழிபாட்டு தளங்கள் வைத்திய சாலை பக்கச் சுவர், மதில் அபிவிருத்தி	48	48	55.42	9	34
வாழ்வாதார அபிவிருத்தி	29	29	21.89	7	12
மொத்தம்	**150**	**150**	**130.22**	**20**	**83**

2022 ஆம் ஆண்டினுள் அமுல்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (31.12.2022 ஆந் திகதி வரை)

- **கூரை இத்துப் போனதன் காரணமாக வசிப்பதற்கு பொருத்தமற்ற நிலையில் உள்ள தொடர் (லயன்) வீடுகளை திருத்தி மீள கூரை அமைத்தல்.**

பெருந்தோட்ட சமூகம் தொடர்பாக புதிய வீடுகளை அமைத்தல் நீண்டகால செயற்றிட்டமொன்றாக இருப்பதனால் இச் செயற்றிட்டங்கள் நிறைவடையும் வரை தற்பொழுது வாழ்கின்ற வீடுகளின் நிலைமைகளை மேம்படுத்தும் இடைக்கால முன்னெடுப்பாக இச் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படும். 31.12.2022 ஆகும் போது 05 லயன் அறைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- **பாதுகாப்பான குடிநீர் வசதிகளை வழங்குதல்.**

நீர் ஊற்றுக்களை அண்டிய பிரதேசங்களில் வாழ்கின்ற பெருந்தோட்ட சமூகத்திற்கு பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமை பிரதான பிரச்சினை ஆகும். அந்த நிலைமையிலிருந்து மக்களை விடுவித்துக் கொள்ளும் நோக்கில் இச்செயற்றிட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் 03 பாதுகாப்பான குடிநீர் செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பானது உலக வங்கியின் நன்கொடை உதவியுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புடன் இணைந்து கண்டி மற்றும் ஹட்டன் பிரதேசங்களில் அமைச்சு வழங்கும் புதிய வீடுகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வசதிகளை வழங்குகின்றது

- **சுகாதார வசதிகளை மேம்படுத்தல்**

பெருந்தோட்ட சமூகத்தின் அனேகமானவர்களுக்கு துப்பரவு ஏற்பாட்டு வசதிகள் குறைவடைகின்றமை தொடர்பான பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளனர். அதன் பிரகாரம் சகல புதிய வீடுகள் தொடர்பாக நீர் வசதியுடன் கூடிய புதிய மலசல கூடமொன்று மற்றும் லயன் அறைகளில் வசிப்பவர்களுக்கு தேவையின்படி புதிய மலசல கூடமொன்றை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்படி 31.12.2022 ஆகும் போது இது போன்ற 01 செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது

- **ஆரம்ப நிலை கல்விக்காக வசதிகளை வழங்குதல**

இதன் கீழ் சிறுவர் பாதுகாப்பு நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் ஆரம்பப் பாடசாலை வசதிகளை வழங்கும் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த சிறுவர் பாதுகாப்பு மையங்களின் ஊடாக தோட்ட தொழிலாளர்களின் 2 வயதிற்கும் 5 வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகளுக்கு பகல் நேர பராமரிப்பு வசதிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் 550 இற்கு அதிகமான எண்ணிக்கை அதாவது 38% சதவீதத்திற்கு வசதிகள் மிகவும் குறைந்த அளவில் காணப்படுவதுடன் அந்த நிலையங்கள் மற்றும் ஆரம்பப் பாடசாலைகள் அபிவிருத்தி தொடர்பாக ரூபா 15 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 2022.12.31 ஆந் திகதி ஆகும் போது 05 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

- **தோட்ட உட்பிரவேச வீதி அபிவிருத்தி**

நில வித்தியாசங்களுக்கு ஏற்ப நிலவுகின்ற கடினப்பாடுகளுக்கு மேலதிகமாக தோட்ட வீதிகள் அனேகமானவை மிகவும் மோசமான நிலைமையில் காணப்படுகின்றன. இதன் காரணமாக தோட்ட பிரதேசங்களில் மக்கள் தமது போக்குவரத்து மற்றும் பிரயாணத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் போது சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றுக்கு முகங்கொடுத்துள்ளனர். 2022 ஆம் ஆண்டு தோட்ட உட்பிரவேச வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 35 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 23 வீதிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

- **விளையாட்டு வசதிகள் அபிவிருத்தி**

தோட்டப்புற இளைஞர் யுவதிகளின் விளையாட்டுத் துறையில் திறமைகளை விருத்தி செய்வதற்காக விளையாட்டுத் துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை இந்த தோட்ட வீடமைப்பு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி 2022.12.31 ஆந் திகதி ஆகும் போது 03 விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

.

- **பொது வசதிகள் அபிவிருத்தி**
- வடிகால் தொகுதியை அபிவிருத்தி செய்தல்.
- பாதுகாப்பு அணைக்கட்டு மற்றும் மதகு அமைத்தல்.
- மத மற்றும் கலாச்சார நிலையங்களை கட்டியெழுப்புதல்.
- நலன்புரி சங்கங்களுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல்.
- திடீர் அனர்த்த நிலைமைகளின் கீழ் பெருந்தோட்ட சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுதல்.
- கிராமிய வைத்தியசாலை அபிவிருத்தி
- கள இழைப்பாறும் நிலையங்கள்

- போன்ற செயற்றிட்டங்கள் பல இதன் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன. இதன் கீழ் பூர்த்தியடையாது காணப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக 34 செயற்றிட்டங்கள் 2022.12.31 ஆந் திகதி ஆகும்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதற்கான நிதி ஒதுக்கீடு ரூபா 48 மில்லியன் ஆகும்.

2022 இன் இலக்கு (ஆண்டு செயற்றிட்டத்தின் படி)	31.12.2022 இல் முன்னேற்றம்	பௌதீக முன்னேற்றம் மூ	விசேட பிரச்சினைகள்
(1). 522 வீடுகளை அமைத்தல் மற்றும் 573 வீடுகளை சுவர் மட்டத்திற்கு பூரணப்படுத்தல். **(2). இந்திய வீடமைப்பு திட்டத்தின் (நிலை-1) 1403 வீடுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்**	323 வீடுகள் பூர்த்தி 358 வீடுகள் சுவர்மட்டம் வரை பூர்த்தி 215 வீடுகள் கூரைமட்டம் வரை பூர்த்தி 1898 வீடுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்	62% 87%	-மூலப் பொருள் தட்டுப்பாடு -மூலப்பொருள் விலையேற்றம் -கூரைத்தகடுகள் இல்லாமை
(3). பழுதடைந்த 02 வரிசை வீட்டு(லயன்) அறைகளின் கூரைகளை திருத்துதல் **03 நீர் வழங்கல் செயற்றிட்டங்கள் ஆரம்பித்தல், அபிவிருத்தி செய்தல்** **தோட்ட உட்பிரவேச பாதைகள் 24 அபிவிருத்தி** **05 விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல்** **06 சிறுவர் அபிவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்விக்கு வசதிகள் வழங்கும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்** **மலசல கூட வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டங்கள்** **44 பொது வசதிகள் செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தல்**	பழுதடைந்த 34 வரிசை வீட்டு (லயன்) அறைகளின் கூரைகளை திருத்துதல் 06 நீர் வழங்கல் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், அபிவிருத்தி செய்தல் தோட்ட உட்பிரவேச பாதைகள் 93 பூர்த்தி 25 விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்தி பூர்த்தி 12 சிறுவர் அபிவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்விக்கு வழங்கும் செயற்றிட்டங்கள் பூர்த்தி மலசல கூட வசதிகளை மேம்படுத்தல் 220 செயற்றிட்டம் பூர்த்தி 118 பொது வசதிகள் செயற்றிட்டங்கள் பூர்த்தி	100% 100% 96% 60% 83% 100% 77%	-மூலப் பொருள் தட்டுப்பாடு -மூலப்பொருள் விலையேற்றம் -கூரைத்தகடுகள் இல்லாமை

2.3 வாழ்வாதார அபிவிருத்தி

தோட்டத் துறைசார்ந்த தொழிலாளிகள் உழைப்புக்குரிய ஊதியம் கிடைக்கப்பெறாமையால் இச்சமூகம் மட்டுமின்றி பெருந்தோட்டத்துறையும் பல இடர்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. எனவே அந்த மக்களை இத்துறையிலேயே தக்கவைத்துக்கொண்டு அவர்களது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு வழி வகுப்பது இச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும். பயிற்சி அற்றவர்களாக பிற தொழில்களில் ஈடுபடுவதிலும் பார்க்க பயிற்சி பெற்று தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு தேவையான

- திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சியை வழங்குதல்.
- சுயதொழிலை உருவாக்கும் வழிகளை அறிமுகம் செய்வதற்கான செயற்றிட்டங்களை (அறிவு, தொழில்நுட்ப அறிவு, பயிற்சி மற்றும் உபகரணங்களை வழங்குதல்) அமுல்படுத்துவதற்காக இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

2.3.1 திறன்கள் அபிவிருத்தி

தோட்ட வீடமைப்பு பிரிவின் கீழ் இயங்கிவரும் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் 17 பயிற்சி நெறிகள் முறையாக நடாத்தப்படுவதுடன் NVQ தரத்திலான உயர் தரமான சான்றிதழ்கள் பெறுவோர் தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வேலை வாய்ப்புக்களை பெறும் வாய்ப்பை ஏற்படுத்துவது நோக்கமாகும்.

ஹட்டனில் அமைந்துள்ள சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கிவரும் தொழில் பயிற்சி நிலையத்தில் பாடநெறிகளை 2019,2020,2021 ஆண்டுகளில் கற்று முடித்த மாணவர்கள் பற்றிய் விபரம்

அட்டவணை 2-4 ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் பயிற்சி நிலையத்தில் பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை

வருடம்	பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	வெற்றிகரமாக பயிற்சியை பூரணப்படுத்திய மாணவர்களின் எண்ணிக்கை
2019	282	197
2020	211	97
2021	287	179

2022 ஆம் ஆண்டில் 248 மாணவர்கள் 2 பிரிவுகளின் கீழ் மேலுள்ள பாடப்பிரிவுகளின் கீழ் படிக்கின்றனர்

அட்டவணை 2-5 2022.12.31 திகதியில் தோட்ட வீடமைப்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்

செயற்றிட்டம் / நிகழ்ச்சித்திட்டம்	நிதி ஏற்பாடு ரூ.மில்லியன் 31.12.2022	செலவீனம் ரூ மில்லியன் 31.12.2022	நிதி செயலாற்றுகை %
தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்	275.00	164.69	60 %
இந்திய நன்கொடை வீடமைப்பு செயற்றிட்டம் - உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கல்	260.00	188.03	72 %
உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டம்	150.00	138.13	92%
தொண்டமான் தொழில் பயிற்சி நிலைய அபிவிருத்தி(TVTC)	55.00	4.29	7 %
மொத்தம்	**740.00**	**495**	**67 %**

.....

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

டப்ளியு. எஸ். சத்யானந்த
செயலாளர

2023.02.28

அத்தியாயம் 03

3. 2022 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதி செயற்திறன்

3.1 நிதி செயற்திறன் கூற்று

தயவு செய்து பக்க இல 22 பார்கவும்

3.2 நிதி நிலபரம் தொடர்பிலான கூற்று

தயவு செய்து பக்க இல 23 பார்கவும்

3.3 காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று

தயவு செய்து பக்க இல 24 பார்கவும்

3.4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

தயவு செய்து பக்க இல 25 பார்கவும்

3.5 வருமானங்களினைத் திரட்டும் செயற்திறன்

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்துவதன் செயற்திறன் இறுதி ஒதுக்கீடு தொகையின் % என ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டது

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.7 நி.பி. 208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவர் ஒருவராக இத் திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

தயவு செய்து பக்க இல 26 பார்கவும்

3.8 நிதி அல்லாத சொத்துக்களினை அறிக்கையிடுவதன் செயற்திறன்

தயவு செய்து பக்க இல 27 பார்கவும்

3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

தயவுசெய்து இணைப்பு 01 பார்க்கவும்

அத்தியாயம் 04

4. ஆம் அத்தியாயம் செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

ரூபா,000

விசேட குறிகாட்டிகள்		எதிர்பார்த்த இலக்கு 2022 ஆம் ஆண்டு	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதம் (%) உண்மையான வெளியீடு		
			100%-90%	89%-75%	50%-74%
நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை	இலங்கை அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள்(உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட)	522			62%
	இந்திய அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள்	180			14%
கூரை திருத்தம் செய்யப்பட்ட வரிசை வீட்டு (லயன்) அறைகளின் எண்ணிக்கை		4 வரிசை வீட்டு (லயன்)அறைகள் 2 செயற்றிட்டங்கள்			100%
பூரணப்படுத்தப்பட்ட நீர் வழங்கல் செயற்றிட்டங்களின் எண்ணிக்கை		3 நீர் வழங்கல்			100%
பூரணப்படுத்தப்பட்ட கழிவறைகளின் எண்ணிக்கை		1			100%
அபிவிருத்தி செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை / அபிவிருத்தி செய்யப்பட்ட முன் பள்ளிகள்		06			83%
அபிவிருத்தி செய்யப்பட்ட பாதைகளின் எண்ணிக்கை		24			96%
வழங்கப்பட்ட பொது வசதிகள் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் எண்ணிக்கை		44			77%
நடாத்தப்பட்ட சமூக அறிவூட்டல் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை		-			100%
வழங்கப்பட்ட தொழில்பயிற்சிகளின் எண்ணிக்கை		-			100%

அத்தியாயம் 05

5. ஆம் அத்தியாயம் -நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) நிறைவேற்றிக் கொள்ளும் செயலாற்றுகை

5.1 இனங்காணப்பட்ட உரிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை குறிப்பிடுதல்

அட்டவணை 5.1 இனங்காணப்பட்ட உரிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை குறிப்பிடுதல்

இலக்கு / குறிக்கோள்கள்	இலக்குகள்	வெற்றிச் சுட்டி		இது வரை அடைந்த வெற்றிச் சதவீதம்		
				0% - 49%	50% -74%	75% - 100%
நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கை 11- 2030 ஆம் ஆண்டாகும் போது அனைவருக்கும் போதியளவான, பாதுகாப்பான வீடு கிடைக்கப்பெறுதலையும் வதிவிடங்கள் மேம்படுத்தலையும் உறுதிப்படுத்தல்.	வரிசை வீட்டு (லயன்) அறைகளில் வாழ்கின்ற 4,500 குடும்பங்கள் தொடர்பாக புதிய வீடுகள் மற்றும் காணி உரிமைகளை வழங்குதல். சேதமடைந்த 1000 வரிசை வீடு (லயன்) அறைகளின் கூரைகளை மீள அமைத்தல்	**1** **2**	நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடுகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட காணி உரிமை உறுதிகளின் அளவு வரிசை வீட்டு (லயன்) அறைகளின் எண்ணிக்கை	**8%** **0.4%**		
நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கு 6- 2030 ஆம் ஆண்டாகும் போது அனைவருக்கும் உன்னத மட்டத்தில் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கு சமமான சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்தல். 2030 ஆம் ஆண்டாகும் போது போதியளவான துப்பரவு ஏற்பாடு மற்றும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சகலருக்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.	குடிநீர் வசதிகளற்ற 4,000 குடும்பங்களுக்கு நீர் வசதிகளை ஏற்பாடு செய்தல். போதியளவான துப்பரவு ஏற்பாட்டு வசதிகளற்ற 3,500 குடும்பங்களுக்கு துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை வழங்குதல்.	**1** **1**	குடிநீர் வசதிகள் கிடைக்கப் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை துப்பரவு எற்பாட்டு வசதிகள் கிடைக்கப் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை		**62%** **61%**	

5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் வெற்றிகள் மற்றும் சவால்கள்:

இலங்கையில் வசிக்கின்ற ஒரு மில்லியன் அளவான பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்வாதார நிலைமையை மேம்படுத்தல் இந்த அமைச்சின் பிரதானமான பணியாகும்.

பெருந்தோட்டச் சமூகம் என்பது இலங்கையில் ஏனைய இனக் குழுக்களுடன் ஒப்பீடு செய்யும் போது மிகவும் பின்தங்கிய வாழ்வாதாரத்திற்கு உரிமை கோருகின்ற இனக் குழுவொன்றாக இருப்பதுடன் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளுக்கு ஏற்ப இலங்கையில் ஏனைய இனக் குழுக்களுடன் ஒப்பீடு செய்யும் போது அவர்கள் உழைக்கின்ற மாதாந்த வருமானம் குறைந்த அளவில் காணப்படுவதுடன் இம்மக்களின் விசேடமாக 05 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் ஊட்டச்சத்து குறைபாடு நிலைமை மிகவும் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. சுகாதார பாதுகாப்பு குடிநீர் வசதிகள் குறைவாக இருப்பதுடன் தோட்ட சனத்தொகையில் பெரும்பான்மை சதவீதம் மிகவும் குறைந்த வசதிகளுடன் கூடிய 200 சதுர அடி அளவான தகரக் கூரையைக் கொண்ட வரிசை வீட்டு (லயன்) அறைகளைக் கொண்ட வசிப்பிடங்களில் வாழ்கின்றனர். நிலையான அபிவிருத்தியடைந்த இலங்கையொன்று தொடர்பான நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களில் வறுமை நிலையை குறைப்பதை உறுதிப்படுத்தல், சிறுவர் ஊட்டச்சத்து குறைபாடு நிலைமை குறிகாட்டிகளுக்கு நெருங்குவது மற்றும் பாதுகாப்பான மற்றும் மேம்படுத்தப்பட்ட வதிவிடங்களை உரிமையாக்கிக் கொடுத்தல் என்ற இலக்கினை அடைந்து கொள்வதற்காக செயற்படும் போது அவ் வசதிகள் குறைந்த அளவில் நிலவுகின்ற பெருந்தோட்ட சமூகம் தொடர்பாக மிகவும் அதிக கவனம் செலுத்துதல் மிக முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது.

அதன் பிரகாரம் பெருந்தோட்ட சமூகம் தொடர்பாக தமது பாதுகாப்பான வதிவிடங்களை உரிமையாக்கிக் கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவர்களுக்கு அறுதி உறுதிகளுடன் சொந்தமான 07 பேர்ச்சஸ் நிலப்பகுதி மற்றும் குடிநீர் வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு வசதிகளைக் கொண்ட தனி வீடுகளை அவர்களுக்கு வழங்குவதற்கு இயலுமை கிடைத்தமை அமைச்சு பெற்ற விசேட வெற்றியாக கருத முடியும்.

எனினும் பலதரப்பட்ட சூழல் காரணிகள் மற்றும் தொழில்நுட்ப காரணிகளின்படி எதிர்பார்த்த இலக்குகளை நிறைவு செய்து கொள்வதற்கு சவாலாக உள்ளது.

பெருந்தோட்டப் பிரதேசங்கள் பல மலைநாட்டுக்கு உட்பட்டு இருப்பதுடன் அதன் நில வேறுபாடுகளை கவனத்திற் கொள்ளும் போது நிர்மாணிப்பு செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு அதிக செலவீனங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்படுகின்றமையும் அந்த பிரதேசங்கள் பல அதிக பாதுகாப்பு கூர்உணர் பிரதேசங்களாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும் நிர்மாணிப்பு செயற்றிட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக தேவையான அனுமதிகளை பெற்றுக்கொள்வதற்கு காலதாமதம் ஏற்பட்டமையும் அவ்வாறில்லாத அத்தியாவசிய இடங்கள் தொடர்பாக புதிய செயற்றிட்டங்களை அமுல்படுத்தல் சுற்றாடல் காரணங்களின் காரணமாக அங்கீகரிக்கப்படாமையும் பிரச்சினையொன்றாக உள்ளது.

குறிப்பிட்டளவு காலமாக நிலவி வருகின்ற பிரச்சினைகளை காரணமாகக் கொண்டு ஒரே முறையில் இந்த சகல இலக்குகளையும் அடைந்து கொள்ள முடியாததுடன் ஏனைய துறைகளுடன் இணைவாக இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சு முயற்சி செய்கின்றது

அத்தியாயம் 06 6. ஆம் அத்தியாயம் மனித வளக் கட்டமைப்பு

6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் (31.12.2022)

அட்டவணை 6-1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் (31.12.2022)

சேவை விபரம்	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	தற்பொழுது இருக்கின்ற ஊழியர் எண்ணிக்கை		மிகை/ பற்றாக்குறை
சிரேஷ்ட்ட	23	14 1* 15		வெற்றிடம் - 09
மூன்றாம் நிலை	08	1		வெற்றிடம்-07
இரண்டாம் நிலை	269	291**		மிகை-(20)***
ஆரம்ப நிலை	22	23		மிகை(1)
	322	330	37	

குறிப்பு

* இராஜாங்க அமைச்சின் நீக்கம் தொடர்பாக இலங்கை திட்டமிடல் சேவையின் திரு.டி.டி.மாத்தரராச்சி (சிறப்பு தரம்) தங்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

** தற்போதுள்ள இரண்டாம் நிலை தரத்திலுள்ள 291 ஊழியர்களில் 02 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

*** இரண்டாம் நிலை தரத்திலுள்ள 20 மேலதிக பதிவிகள் 2019 மற்றும் 2020 ஆண்டின் பட்டதாரி நியமன திட்டத்தின் கீழ் பொது நிர்வாக அமைச்சினால் நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகும். மேலும் அந்த மேலதிக பதவிகளை FR 71 இன் கீழ் அங்கீகரிக்குமாறு முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தும் விதம்

மேற்படி அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 16 சிரே‘ட்ட நிலை மற்றும் மூன்றாம் நிலையில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் உத்தியோகத்தர்களின் வினைத்திறமையினால் கடமைகள் வினைத்திறனுடன் நிறைவேற்றப்பட்டுள்ளன.

6.3 மனிதவள அபிவிருத்தி

2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் கூட்டங்கள் பற்றிய தகவல்கள்

அட்டவணை 6-2 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் கூட்டங்கள் பற்றிய தகவல்கள்

இல	நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்ட கால எல்லை	மொத்த முதலீடு (ரூபா)		நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாடு / வெளிநாடு)	வெளியீடு /பெற்றுக் கொண்ட அறிவு
